# கல்கி




KALKI

24-11-1968

40
காசு

# நாட்டு மக்கள் அனைவருக்கும் நிறை உணவு...



இது வெறும் கற்பனையல்ல. கூட்டுறவு நிறுவனங்கள் நாட்டின் வேளாண்மை மற்றும் இதர கிராமக் கைத்தொழில் களின் வளர்ச்சியிலே நேரிடையாக ஈடுபட்டுள்ளன.

விவசாயிகள் அமோக விளைச்சலைத் தரும் வீரிய விதைகளையும் சிறந்த கலப்பு உரங்களையும், நவீன விவசாயக் கருவிகளையும் பெறவும், சிறு பாசன வசதிகளைச் செய்து கொள்ளவும் பண உதவி யளிப்பதன் மூலமாக உணவு உற்பத்தியைப் பெருக்கி நாடு உணவுத் துறையிலே தன்னிறைவு பெற கூட்டுறவு நிறுவனங்கள் பணிபுரிகின்றன.

நாட்டு மக்கள் அனைவருக்கும் நிறை உணவு —
இன்றைய கனவு நாளை நிறைவேற
சென்னை மாநில கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்க.

விவசாயிகளுக்குற்ற நண்பர்கள் கூட்டுறவு நிறுவனங்களே


**சேமிப்புக்குச் சிறந்த நிறுவனம்**

## சென்னை மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

271, அங்கப்ப நாயக்கன் தெரு
சென்னை -1

# கல்கி பொருளடக்கம்

கீலக, கார்த்திகை 9 :: :: நவம்பர் 24


கவலைப் படாதே! அதன்பின் உன் ஆட்சி மீண்டும் நீடிக்கப்படும்!
நான் ஏழு வருஷங்களில் ஓய்வு பெற வேண்டுமே!
Rak



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மலர் 28 இதழ் 17

# காச்மீரப் பிரச்னே

யாருக்கும் சுயாட்சி நிர்ணய உரிமை வேண்டும் என்பதுதான் முன்னொரு காலத்தில் சர்வதேச அரசியலில் காயத்ரி மந்திரம் போல் முக்கிய அம்சமாயிருந்தது. ஆனால் உலகமனைத்தும் புனிதமாக மதித்த அக்கொள்கைமீது கரி பூசுவது போல் இப்போது, ''ஷேக் அப்துல்லா சுயாட்சி உரிமைப் பல்லவியை முழக்குகிறார்'' என்று பத்திரிகைகளில் செய்தித் தலைப்புக்கள் காண்கின்றன. மத நம்பிக்கைகளும், ஆடை அணிகிற மோஸ்தர்களும் எப்படி நாளாவட்டத்தில் மாறுகின்றனவோ அப்படியே அடிப்படை அரசியல் கொள்கைகளும் மாறுவது ஆச்சரியமாக இருக்கிறது.

சுயாட்சி நிர்ணய உரிமை கூடாது என்னும்போது, இதற்கு எதிரிடையானது யதேச்சாதிகாரமே என்பதை மறக்காமல் இருப்போம். முன்பொரு காலம் — அது நடந்து வெகு காலமாகி விட்டதாகச் சொல்ல முடியாது — ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு எந்தப் பிரச்னையானாலும் பொதுஜன வாக்கெடுப்பின் மூலமே தீர்க்க விரும்பியதுண்டு. அதைக் கேலி செய்து அப்போது நான் நையாண்டிப் பாடல்கூட எழுதினேன். விளையாட்டாகப் பாட்டு எழுதிவிட்டு, பிறகு அதைக் கிழித்து கவர்னர் ஜெனரலின் அலுவலக அறைக் குப்பைக் கூடைக்குள் அடக்கமாக்கினேன்.

ஸ்ரீ ஜவாஹர் சர்வரோக நிவாரணியாகக் கருதிய அந்தப் பொதுஜன வாக்கெடுப்புச் சூத்திரத்தையே இன்றைய சர்க்கார் அவமதிப்புடன் பார்க்கிறது.

மக்களிடை ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும், நன்னடத்தையையும் வளர்த்துக் காப்பதே ஓர் அரசாங்கத்தின் பணி என்பதை மறப்பதற்கில்லை. காச்மீரப் பிரச்னையையும் — இது போன்ற இதர பிரச்னைகளையும் — தேசப்படங்கள் நிறைந்த ஓர் அறையில் அமர்ந்தபடி தீர்த்துவிட முடியாது. ஒரு மக்களின் இதய அடித்தளத்தில் உள்ள விருப்பம் என்ன என்பதை அறியாமல் அம்மக்களை ஆள முடியாது. இந்த உண்மையிலிருந்து யாரும் தப்ப இயலாது. நம் காப்பின் கீழ், சிந்திக்கும் சக்தி படைத்த புதிய மக்கள் சமுதாயத்தைச் சேர்க்கும்போது — சர்க்காரின் பிரச்னைகளோடு புதிதாக ஒரு மக்கட் தொகையின் பிரச்னையைச் சேர்க்கும்போது — அது வெறும் பூகோள ரீதியான விஷயம் மட்டுமல்ல. மக்களின் உணர்ச்சியைத் தெரிந்து கொள்வதே பகுத்தறிவு.

தமிழ் நாடு, உத்தரப் பிரதேசம் முதலிய மற்ற ராஜ்யங்களைப்போல் காச்மீரத்தையும் கருதக்கூடாது என்றும், காச்மீரத்தைத் தனிப்பட்டதொரு அடிப்படையில் நடத்த வேண்டுமென்றும் அரசியல் சாஸனத்தில் ஷரத்துக்கள் சேர்த்ததற்குத் தகுந்த காரணம் உண்டு. ஐ. நா. சபையின் அதிகாரத்துக்கும், உலக அபிப்பிராயத்துக்கும் மதிப்புக் காட்டும் சமிக்ஞையாகவே இவ்விதம் செய்யப்பட்டது. காச்மீரத்துக்குத் தனி ஸ்தானம் தரும் விதிகளை எடுத்துவிட வேண்டும் என ஜனசங்கத் தலைவர் ஸ்ரீ வாஜ்பேய் அவர்களின் மக்கட் சபைத் தீர்மானம் விரும்புகிறது. நம் யதேச்சாதிகார மனப்போக்கைக் கொண்டு, காச்மீரத்துக்கு விசேஷ ஸ்தானம் தருகிற ஷரத்துக்களை ஒருதலைப் பட்சமாக அடித்துவிட முடியாது. இந்த யதேச்சாதிகாரப் போக்கை ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு வெளிப்படப் புரிந்து கொண்டு கண்டித்தார்.

பொதுஜன வாக்கெடுப்பு நடத்தி, அதன் விளைவுகளுக்குக் கட்டுப்பட்டு அதைக் காரியத்தில் செய்து காட்டுவது இந்திய சர்க்காருக்குச் சாத்தியம் இல்லாவிடினும், வெளி நெரிசல்களும் ஒழுங்கீனங்களும் இல்லாமல் காச்மீரத்தில் பொதுத் தேர்தல் நடக்க ஏற்பாடு செய்வது இந்திய சர்க்காரால் இயலக் கூடியதே. எல்லாத் தரப்பினருக்கும் திருப்தி தரக்கூடிய வகையில் ஒரு விசேஷக் குழு அமைத்து அதன் மேற்பார்வையில் இத்தேர்தலை நடத்துவது சாத்தியமே. இத் தேர்தல் முடிவு வெளி வந்தபின் காச்மீரக் கொள்கையைத் திட்டவட்டமாக உருவாக்கிக் கொள்வதற்கு இன்றைவிட மிக வசதியான நிலையில் நம் சர்க்கார் இருக்கும்.

சுயநிர்ணயக் கொள்கையை அமல் செய்ய பொதுஜன வாக்கெடுப்பு ஒன்று



**மகாத்மாவின் மணிமொழி**

'இந்த நமது பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் அணுக்களுக்கு ஒன்றோடொன்று இணையும் சக்தி உள்ளது; அந்த இணைப்புச் சக்தி இல்லாவிடில் பிரபஞ்சமே தூள் தூளாகிவிடும்; நாமும் வாழ முடியாது' என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். உயிரற்ற ஜடப் பொருளிலேயே இப்படி ஓர் இணைப்புச் சக்தி இருக்குமாகில், உயிருள்ளவற்றிடமும் அது இருந்தாக வேண்டும். உயிரினங்களிடம் உள்ள இந்த இணைப்புச் சக்திக்கே அன்பு என்று பெயர். தந்தைக்கும் மகனுக்கும் இடையே, அண்ணனுக்கும் தங்கைக்கும் இடையே, இரு நண்பர்களுக்கிடையே இந்த இணைப்புச் சக்தியைத் தான் காண்கிறோம். ஆனால் இந்தச் சக்தியை உயிரினம் அனைத்தின் மீதும் செலுத்த நாம் கற்க வேண்டும். அப்படி அன்பை உபயோகிப்பதில்தான் நமது ஈசுவர ஞானம் அடங்கியுள்ளது. எங்கு அன்பு உள்ளதோ அங்கே உயிர் உள்ளது. துவேஷம் நாசத்துக்கே வழி.

தான் உபாயம் என்பதல்ல. சில சந்தர்ப்பங்களில் பொதுஜன வாக்கெடுப்பு விரும்பத் தக்கதல்ல. சுயநிர்ணயக் கொள்கையைக் காரிய ரீதியில் கொண்டுவரப் பல வழிகள் உண்டு. அதில் எது மிகவும் பொருத்தமானதோ அதைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இந்திய யூனியனின் பிரிக்க முடியாத அங்கமாகிவிடுவதால் கிடைக்கும் நன்மைகளைப் பற்றிக் காச்மீர மக்களுக்கு உணர்த்துவதற்கு நாம் இருபது ஆண்டுகளாக அவகாசம் பெற்றிருக்கிறோம். அப்படியும் அம்மக்களைக் கொண்டே பிரச்னைக்குத் தீர்வு காணலாம் என்பதில் நமக்கு நம்பிக்கை இல்லை. காச்மீரத்தில் இந்திய சர்க்காரின் கருவிகளாகவும், நமது பக்கத்தின் வாதத்தைச் சொல்பவர்களாகவும் இருந்தவர்கள் திருப்திகரமாகச் செயலாற்றவில்லை என்பதையே இது காட்டுகிறது. காச்மீரத்துக்காக ஒதுக்கப்பட்ட ஏராளமான நிதியத்தை அரசியல் தந்திரக் காரர்கள் தம்மில் ஒருவரை மற்றவர் வெல்லத்தான் பயன்படுத்தியிருக்கிறார்களே யன்றி, காச்மீர மக்கள் இந்தியாவிடம் அன்பு கொள்வதற்குப் பயனுக்கவில்லை. விவகாரங்களை மற்றவர்கள் பார்ப்பது போல் நாமும் பார்ப்பதற்குக் கற்கவேண்டிய தருணம் இது. இவ்வாறு செய்து, நாம் சுயமாகவே உரியபடி செயலாற்றுகிறோம் என்று சர்வதேச அரங்கில் பெயரெடுக்க வேண்டும்.

சுயநிர்ணயம் என்பது காலத்துக்கொவ்வாத மூடநம்பிக்கை அல்ல. அது முக்கியத்வம் வாய்ந்ததோர் அடிப்படைக் கொள்கை. இந்திய யூனியன் ஏதேனும் ஒரு பகுதியில் ஆட்சிப் பொறுப்பு எடுத்துக் கொள்கிறது எனில், அது அங்குள்ள ஆணும் பெண்ணும் அடங்கிய மக்களை — பெருமிதமும் மற்ற உணர்ச்சிகளும் கொண்ட மக்களை — ஆளவே பொறுப்பு எடுத்துக் கொள்கிறது. காயடித்த குதிரைகளையும், மாடுகளையும் போல மக்களை நடத்திச் செல்ல முடியாது.

**(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது.)**

# ராஜாஜியின் கருத்துக்கள்

டிசம்பர் மாதத்தை நெருங்குகிறோம். அப்போது நான் தொண்ணூறாவது பிராயத்தைப் பூர்த்தி செய்வேன். இச்சமயத்தில் அடியிற் கண்ட வாசகத்தைப் படிக்க ரம்மியமாக இருக்கிறது:

> ''தொண்ணூறாவது வயதிலேதான் வாழ்க்கை தொடங்குகிறது'' என்று சத்திய பூர்வமாக அத்தாட்சி தரக்கூடியவர்கள் வாழ்க!

'ஃப்ரீமன்' பத்திரிகையில் லெனார்ட் ரீட் எழுதியுள்ள கட்டுரையில் இவ்வாசகம் காணப்படுகிறது. இந்த வாசகத்தை என் உடைமை யாக்கிக் கொள்ளத் துணிகிறேன். நாம் உள்ள நெருக்கடி நிலையில், சுதந்திரக் கட்சி அங்கத்தினர்கள் தமக்கு எதிர்ப்பாக உள்ளோரின் பெரும் எண்ணிக்கையைக் கண்டும், இந்திய சர்க்காரின் போக்கைக் கண்டும் பயந்து செயலிழக்காமல், கட்சியின் கொள்கைகளை உறுதியாகக் கடைப்பிடிப்பாராகில் மேற்சொன்ன வாசகத்தை என் உடைமை யாக்கிக் கொள்ளத் துணிவேன்.

காங்கிரஸோ கம்யூனிஸமோ எந்தக் கட்சியானாலும் அது சர்வாதிபத்தியத்தைப் பின்பற்றினால் தேசம் நாசமாகும். நம் நாட்டை இவ்வாறு சர்க்கார் சர்வாதீனத்தால் நாசம் செய்ய முயலும் மடமையைத் தடுப்பதே சுதந்திரக் கட்சியின் புனிதப் பணி. இந்த இலட்சியத்தைத் துருவ நட்சத்திரமாகக் கொண்டு நல்வழி செல்வோம். அதிகாரம், அந்தஸ்து ஆகியவற்றைப் பெறும் ஆசையால்

பாதையிலிருந்து பிறழாதிருப்போமாக! நாம சொந்த வாழ்க்கை முன்னேற்றத்தைத் தேடுபவர் அல்ல. சொந்த வாழ்க்கை முன்னேற்றத்துக்காக அரசியலில் ஈடுபட்டுள்ளவர்களிடமிருந்து நாட்டைக் காக்க வேண்டியவர் நாம். திவாலாவாகி, கம்யூனிஸ வல்லரசைச் சுற்றி வரும் உபகிரகமாக இருக்கிற நிலைக்கு இந்தியாவைக் கொண்டுவந்துள்ளவர்களிடமிருந்தும் நாம் நாட்டைக் காக்க வேண்டும்.


மடமை, தற்பெருமை ஆகிய குற்றங்கள் இன்றி மெய்யாகவே நான், ''வாழ்க்கை தொண்ணூறாவது ஆண்டில்தான் பிறக்கிறது'' என்று சொல்லுமாறு உதவி புரிவது சுதந்திரக் கட்சியின் கையிலேயே உள்ளது.

இந்தியாவில் காந்தியடிகளின் போராட்டம் 1919லிருந்து 1947 வரை — இருபத்தெட்டாண்டுகள் — நடைபெற்றது என்பதை நாம் மறக்கலாகாது. இத்தனைக்கும் அது அந்நிய ஆட்சியிடம் கொண்டிருந்த தீவிர வெறுப்பின் பலத்தைப் பெற்றிருந்தது. சில அம்சங்களில் அதைவிட நம்முடைய இன்றைய போராட்டம் கடுமையானது. ஏனெனில் இது நம் மக்களில் சிலரை எதிர்த்தே செய்யப்படுவது. அதோடு வலு வாய்ந்த சுயநலக் கோஷ்டிகளின் எதிர்ப்பும் நமக்கு உள்ளது. ஆத்திரப்பட்டால் பலவீனமடைவோம். ஆத்திரம் பலத்துக்கு உதவாது.

* * *

நவம்பர் 13ந் தேதி மக்கள் சபையில் இந்திரா காந்தியின் சர்க்காரிடம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறவில்லை அல்லவா? இதை, 135 மெஜாரிட்டி வோட்டுகள் இந்திராகாந்தி சர்க்காரிடம் நம்பிக்கை தெரிவித்திருப்பதாக பி. டி. ஐ. அறிக்கை கூறுகிறது. இந்த மதிப்பீடு மிகையாகும். 135 மெஜாரிட்டி வோட்டுகள், சர்க்கார் ஊழியர் வேலை நிறுத்தத்தில் சர்க்கார் காட்டிய உறுதியான நடவடிக்கை குறித்ததே ஆகும். இது பொதுவாக அரசாங்கத்திடம் நம்பிக்கை தெரிவித்ததாக ஆகாது. நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதம் வேலை நிறுத்தத்தையும், அது குறித்து மேற்

சென்னை நகராட்சி மன்றம் போட்டியின்றித் தேர்ந்தெடுத்த மேயர் திரு வேலூர் நாராயணன் எம். ஏ. பி. எல். அவர்களும், துணைமேயர் திரு கோவிந்தசாமி அவர்களும், ராஜாஜியை அவரது இல்லத்தில் சந்தித்து, அவருக்கு மாலை அணிவித்து ஆசி பெற்றனர். ராஜாஜிக்குப் பக்கத்தில் மேயரும், எதிரில் துணைமேயரும், நகராண்மைக் கழகத் தி. மு. க. கட்சித் தலைவர் திரு முனுசாமியும் படத்திலிருப்பதைக் காணலாம். புதிதாகப் பதவிக்கு வந்துள்ள சென்னை நகராண்மைக் கழக உறுப்பினர்கள் சென்னை நகர மக்களின் பலப்பல குறைகளைத் தீர்க்கத் தம்மாலியன்றதைக் கட்சி வேறுபாடின்றிச் செய்வார்கள் என்று சென்னைவாசிகள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.



கொள்ளப்பட்ட நடவடிக்கையையும் மட்டுமே உத்தேசித்தது.

❖❖❖

கடந்த ஐந்தாண்டுகளாக சம்பவங்களையும் அரசியல் போக்குகளையும் கவனித்துப் பார்க்கையில் பலர் கீழ்க்கண்ட முடிவுக்கு வருவர்: குருஷேவ் வெளிப்படையாகவும் உக்கிரமாகவும் பேசியபோதிலும் அவரது பதவிக்காலம் ஓர் அசாதாரணமான இடைக்காலமாயிருந்தது. ஸ்ரீ குருஷேவ் கம்யூனிஸப் பற்றுள்ளவராயினும், சமாதான சகவாழ்வுக் கொள்கையால் அப்பற்றுதலின் தீவிரத்தைச் சமனம் செய்திருந்தார். அவர் அப்பட்டமாகப் பேசியதால், இரும்புத் திரைக்கு அப்பாலுள்ள சுதந்தர நாடுகளின் ராஜநீதி நிபுணர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் தாங்கள் மேற்கொண்டு என்ன செய்யவேண்டும் என்பது தெரிந்திருந்தது. துரதிர்ஷ்ட வசமாக, குருஷேவைக் கிரகணம் பிடித்த பின், சோவியத் ஆட்சி பீடமாகிய கிரெம்ளினில் உள்ள ஒருவரைக்கூட நாம் புரிந்து கொண்டதாகச் சொல்ல முடியவில்லை. கிரெம்ளின் பிரகடனங்கள் நம்பகமானவையல்ல என்பது இப்போது நன்றாகவே நிரூபணமாகிவிட்டது.

தென் கிழக்கு ஆசியாவிலிருந்து அமெரிக்கா விலகிச் செல்லுமாறு செய்ததன் மூலம் கம்யூனிஸம் முக்கியத்துவம் வாய்ந்த வெற்றி பெற்றுள்ளது. பிறர் விவகாரத்தில் பங்கு கொள்ளாமல் தனித்திருக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் பெரு வேட்கைக்குத் திரர் ஜான்ஸனும் அடிபணிய வேண்டியதாயிற்று. ஆசியாவை அதன் சொந்த சக்திக்கும், தலைவிதிக்கும் விட்டுவிட வேண்டியதாயிற்று.

சிறிது காலத்திலேயே சீனமும் ருஷ்யாவும் பரஸ்பரப் பூசலை விட்டு, இரு நாட்டுக் கம்யூனிஸ்டுகளுமாகச் சேர்ந்து, இதுவரை மேல் நாடுகள் காத்து வந்துள்ள வாழ்க்கைச் சுதந்திரங்களின் மீது கூட்டாகப் பெரும் படையெடுப்புச் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நான் இவ்வாறு சொல்கிற வாக்கு பொய்த்துப் போகாதா என்றே விரும்புகிறேன். அப்படிப் பொய்த்துப் போக வேண்டுமாயின் உலகின் சுதந்திர வல்லரசுகள் புதிதாக வளர்த்துக் கொண்டு வரும் துர்ப்பாக்கியவசமான 'தனித்திருக்கும் கொள்கை'யை விடவேண்டும். அவை ஒன்று சேர்ந்து இடுக்கண்களை மேற்கொள்ளும் துணிவைப் பெற வேண்டும். அணு ஆயுதக் குவியலைப் பொருட்படுத்தாமல் ருஷியா எப்படித் தைரிமாகத் தன் வழி செல்கிறதோ, அதே போல் சுதந்திர நாடுகளும் தைரியம் பெறவேண்டும். 'எப்போது பார்த்தாலும் ஜாக்கிரதையாகவே இருப்பது; ஒருபோதும் துணிந்து சாகஸம் செய்வதில்லை' எனில் அது நல்ல ராஜதந்திரமாகாது.

ருஷியா செய்த செக்கோஸ்லோவேகியா ஆக்கிரமிப்பைக் கண்டித்து ஐ. நா. பந்தோபஸ்து சபையில் தீர்மானம் வந்தபோது அதை ருஷியா 'வீட்டோ' அதிகாரத்தால் நிராகரித்தது உண்மை. ஆயினும் அதன் பின் இப்பிரச்னையை ஏன் ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு மேல்நாடுகள் கொண்டு வரவில்லை என்பதை இதுவரை பத்திரிகைகளில் வந்துள்ள செய்தி எதுவும் எனக்குத் தெளிவு படுத்தவில்லை.

❖❖❖

கொலை முயற்சியிலிருந்து பாகிஸ்தான் ஜனாதிபதி மயிரிழையில் தப்பியது குறித்து நன்மக்கள் யாவரும் மிகவும் மகிழ்ச்சி கொள்வர். இதேபோல் அமெரிக்கப் போலீசாரின் உஷாரான தடுப்பினால், அங்கு ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிக்ஸனைக் கொலை செய்யும் முயற்சி முறியடிக்கப் பட்டதிலும் நாம் மகிழ்ச்சி அடைவோம். நிக்ஸன் கொலை முயற்சியானது அராபிய இளைஞர்களின், இஸ்ரேல் துவேஷத்தில் வேரூன்றியதாகும். அதோடு பொறுப்பற்ற அமெரிக்க இளைஞர்கள் ஏதேனும் ஒரு பெரிய மனிதரைக் கொன்று 'புகழ்' பெற விழைவது அந்த நாட்டில் ஒரு 'நாகரிக'மாகி வருவதும் இதற்குக் காரணம். குற்றவாளிகள் அமெரிக்கா வந்து அங்கேயே குடியேறிவிட்டவர்கள். அந்நாட்டுத் தொத்து நோய் அவர்களையும் பற்றிக் கொள்ள அவகாசம் இருந்திருக்கிறது.

❖❖❖


முன்னாள் மன்னர்களுக்குச் சட்டப்படி தரப் பட்ட நிதிப் பொறுப்பிலிருந்து தப்புவதற்காகச் சாஸனத்தைத் திருத்தக் கருதி இந்திய சர்க்கார் தன் வோட்டுப் பலத்தைப் பிரயோகிக்குமேயாகில், ஸ்ரீ ஜவாஹர்லால் நேருவும், ஸ்ரீ வல்லபபாய் படேலும், நானும் மான பங்கம் அடைவோம்.

சட்டப் பொறுப்பிலிருந்து - தார்மிகப் பொறுப்பிலிருந்து-தப்புவதற்காகவும்,முறைப்படி செய்த உடன்படிக்கையை முறிப்பதற்காகவும் ஒரு நாடு மூன்றில் இரு பங்கு மெஜாரிட்டி பலம்கொண்டு அரசியல் சாஸனத்தைத் திருத்துமளவுக்குச் சென்றால், அதன் பின் இந்நாட்டுடன் நிதி விஷயமாக ஏற்பாடுகள் செய்து கொள்ள எந்த அந்நியர்களாயினும் எண்ணுவார்களா?


இதைப் பற்றி நான் அழுத்தமாகவும், தெளிவாகவும் நிறைய எழுதிவிட்டேன். ஆயினும் பொதுப்படையான வாதத்துடன் சொந்தக் குறிப்பையும் சேர்க்க விரும்புகிறேன். ராஜ மானியம், மன்னர்களின் பிரத்யேக உரிமைகள் ஆகியன பற்றிய பேச்சு வார்த்தைகள் முற்றுப் பெற்றது நான் கவர்னர் — ஜெனரலாக இருந்தபோதேயாகும். நான் அப்போது வெறும் பொம்மைத் தலைவராக இருக்கவில்லை. ஜவாஹர்லால் நேருவும், வல்லபபாய் பட்டேலும் இன்று மறைந்து விட்டனர். அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த நான் இந்த விவகாரத்தின் கௌரவத்தைக் காக்க வேண்டிய பொறுப்பில் பங்கு கொள்கிறேன். எனவே கௌரவத்துக்குப் பங்கமாக ஏதும் செய்யப்படுமுன் அதை மிக வன்மையாகக் கண்டிக்க வேண்டியது என்னுடைய விசேஷமான, பிரத்தியேகமான கடமையாகும்.

# ஸதர்ன் ரோட்வேஸ்

## இயக்குபவை



- 366 பஸ்கள்
- 225 லாரிகள்
- 48 ட்ரைலர்கள்
- 135 லாரி மார்க்கங்கள்
- 147 பஸ் மார்க்கங்கள்
- 1,56,290 கிலோமீட்டர்கள் தினத்திற்கு



## உடைமை


- 443 கிடங்கு வசதியுடன் கூடிய காரியாலயங்கள்
- 4599 பயிற்சி பெற்ற சிப்பந்திகள்

சென்னை, ஆந்திரபிரதேசம், மைசூர் மற்றும்
கேரள மக்களுக்கு சேவை புரிகிறது.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

ஸதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட்
(டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று)
மதுரை

TVS




இன்னுமொரு புதுப் புடவை உடுத்திக் கொண்டிருக்கிறாய் போலிருக்கிறதே. நானும் என் கணவரிடம் புதுப் புடவை ஒன்று வாங்கித் தரச் சொல்லி எவ்வளவு நாளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்!
பிரஸ்டிஜ் உபயோகிப்பதனால் மிச்சமாகும் வீட்டுச் செலவுப் பணத்திலிருந்து நானே சுயமாக வாங்கியவைதான் இவை!
Prestige
Prestige
பிரஸ்டிஜ் எல்லா வகையான, சைவ, அசைவ உணவுகளையும் தயாரிக்க உதவுகிறது.
பிரஸ்டிஜ் பிரெஷர் குக்கரில் சமைப்பதினால், உங்கள் எரி பொருள் செலவில் 80% மிச்சமாகிறது; சத்துள்ள உணவு கிடைக்கிறது; சமையல் நேரம் பாதியாகக் குறைகிறது மேலும், நீராவியில் தயாராகும் சமையல் ஆரோக்கியமான சமையல்! பிரஸ்டிஜ் பிரெஷர் குக்கர் வாங்குங்கள்: குடும்பத்தின் அளவுக்கேற்றபடி தேர்ந்தெடுக்க 5 மாடல்கள் உள்ளன.
தயாரிப்பாளர்கள்:
டி டி. (ப்ரைவேட்) லிமிடெட்
பெங்களூர்-16.
PREETT ப்ரீத் பாத்திரங்கள் உங்கள் சமையலறைப் பொக்கிஷம்

# இலட்சிய உருவாகிய இலட்சுமணன்

தற்பெருமை, சுய கௌரவம் ஆகிய வற்றை முற்றிலும் கரைத்து விட்டு, சேவையே உருவாக இருப்பவன்தான் உண்மையான வைணவன். இதைத்தான் 'வைஷ்ணவ ஜனதோ' பாடலைத் தந்த ஸ்ரீ நரஸி மேதா, 'மன அபிமான ந ஆணேரே' என்றார். இந்த இலட்சணத்தின் மூர்த்தியாக இலட்சுமணனைச் சித்திரிக்கிறார் கனு தேசாய்.

சுய அபிமானமற்றோரில் இலட்சுமண னுக்கு ஒப்பு யார் உண்டு? ராம சேவை யில் தன்னைப் பூரணமாக அர்ப்பித்துக் கொண்டவன் அவன். இல்லற வாழ்வின் தொடக்கத்திலேயே, இன்ப நுகர்ச்சியைப் பற்றி இம்மியும் எண்ணாமல், ஊர்மிளா தேவியை விட்டு ராகவனுடன் வனம் சென்று அல்லும் பகலும் ஐயனுக்குப் பணி



செய்த பரம பாகவதன் அல்லவா அவன்? வனவாசத்தின் பதினாலாண்டுகளில் ராகவனும், மைதிலியும் உண்பதற்கு உணவு தேடி வந்து படைப்பதிலேயே, தான் உண்ட நிறைவைப் பெற்றவன் அவன். அவர்கள் உறையவும் உறங்கவும் இருக்கை அமைத்துத் தருவதிலேயே தன் துயரங்களைத் துயிலச் செய்தவன் அவன்.

இப்பேர்ப்பட்ட புனிதனை ஜானகி தகாத வார்த்தை சொன்னாள். ராம பாணத்தால் அடியுண்ட மாரீசன் மாய்கிற நிலையில் ராமனைப்போல் குரல் எழுப்பியபோது, சீதா தேவி தனக்குக் காவலிருந்த லட்சுமணனை அவ்விடத்துக்கு விரையச் சொன்னாள். அவனோ 'அண்ணனுக்கு ஆபத்து வராது' என்ற உறுதிப்பாட்டில் அசையாமல் நின்றான். அப்போது ராமபாணத்தை விடக் கொடிய அம்பால் அவனைத் தாக்கினாள் மைதிலி. 'ஆகா, இந்தப் பாப உத்தேசத்துடன்தான் என்னுடன் வந்தாயா?' என்றாள். அதையும் தாங்கிக் கொண்டான் இளவல். சுய அபிமானம் முற்றிலும் அற்ற நிலைக்கு இதைவிட எங்கு உதாரணம் காண முடியும்?

பின்னர், ராவண சம்ஹாரம் ஆனவுடன், இதே தேவி ராகவனைக் காண வருகையில், ஐயன் அவளது தூய்மையில் சந்தேகம் கொண்டது போல் பேசினான். அன்று இலக்குவன் மீது தான் எய்த பாணத்துக்கு இன்று தானே இலக்கானேம் என்று பச்சாத்தாபம் கொண்டாள் தேவி. பிராயச்சித்தமாக லட்சுமணனையே சிதை மூட்டச் சொன்னான். அண்ணிக்குச் சிதைமூட்டுவதைவிடக் கொடிய செயல் எது இருக்க முடியும்?


இலட்சுமணன் மனம் புண்ணாயிற்று. ஆயினும் ராமனின் தாஸன், தனிப்படத் தனக்குக் கிலேசப்படக்கூட உரிமையில்லை எனக் கருதி அண்ணன் முகத்தைப் பார்த்தான். தேவி அக்னி ஸ்நானம் செய்வதே ஐயனுக்குச் சம்மதம் என்பதை முகக் குறியிலிருந்து கண்டான். உடனே சொந்த அபிமானத்தை அழுந்தத் துடைத்தெறிந்துவிட்டு, தேவிக்குச் சிதை தயார் செய்தான். பற்றின்மைக்கு இதைவிட ஆதரிச நிலை உண்டா?

இராமாயணத்தில் காணும் மகாத்மாக்களில் தாரை ஒருத்தி. அவள் வாக்குக்குப் பெருமை அதிகம். வாலி வதத்துக்குப்பின் சுக்ரீவன் ராம காரியத்தை மறந்து காம போகத்தில் ஆழ்ந்து விடுகிறான். அவனைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் சீற்றத்துடன் செல்கிறான் இலக்குமணன். அவனைத் தடுத்து நிறுத்தும் தாரை, ''வானரர்கள் இயற்கையாகவே காமம் மிகுந்தவர்கள். ஆனால் உனக்கு அதை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? நீ இச்சையின் இயல்புகளில் சிறிதும் அறிவைச் செலுத்ாதவனாயிற்றே! (ந காம தந்த்ரே தவ புத்திரஸ்தி)'' என்கிறாள். இதைத்தான் 'மன அபிமான ந ஆணேரே' என்றார் நரஸி மேதா.

கம்பர் ஓரிடத்தில் 'கனி இரும் பொழில் காத்(து) அயல் இருந்தவன்' என்று இலட்சுமணனைச் சொல்கிறார். 'உலகச் சுவைகளை மற்றோருக்காக காத்துக் கொடுத்து, தான் அச்சுவையில் ஈடுபடாமல் அயலாக நின்றவன்' என்று இதற்குப் பொருள் சொல்வார்கள். இதுதான் 'மன அபிமான ந ஆணேரே!'

# கானப் பெருந்தகைக்குக் காணிக்கை

பிரம்மஸ்ரீ பாபநாசம் சிவன் கர்நாடக சங்கீதத்துக்குச் செய்துள்ள சேவையை அறியாதார் யார்? சங்கீதமும் சாகித்தியமும் பூரணத்துவத்துடன் இணைந்துள்ள



அவரது அற்புதத் தமிழ்ப் பாடல்கள் ஆயிரமாயிரம் ரசிக உள்ளங்களை ஆனந்தத்தில் ஆழ்த்தியுள்ளன. இன்று நம்மிடை உள்ள சாகித்திய கர்த்தர்களில் முதன்மை ஸ்தானம் பெற்றிருப்பவர் ஸ்ரீ சிவன் அவர்களே என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. வயோதிகமும் உடல் நலிவும் வந்துற்ற இந்த இசைப் பெரியாரை வசதியுடன் வாழச் செய்யும் கடமை இசையன்பர்கள் அனைவரையும் சார்ந்தது.

பம்பாயில் வாழும் இசையன்பர்கள் இந்தத் திசையில் ஒரு தங்கமான காரியம் செய்யவிருக்கிறார்கள். இம்மாதம் 29ந் தேதி ஸ்ரீ சிவன் அவர்களுக்குப் பம்பாயிலுள்ள ஷண்முகாநந்த சபையில் பாராட்டு விழா நடத்திப் பண முடிப்பு தரவிருக்கிறார்கள்.

சங்கீத மகானும், பரம சாம்பவருமான ஸ்ரீ சிவன் அவர்களுக்குக் காணிக்கை செலுத்துவது புண்ணியமான பணி. இதில் பம்பாய்த் தமிழர்கள் முக்கியமாக ஈடுபட்டு, இசைப் பெருந்தகைக்குப் பெருந்தொகை சேர உதவுவர் என்று நம்புகிறோம். பம்பாய் வாசிகள் மட்டுமின்றி மற்றவர்களும்,
**Sri K. J. Natarajan, Chief Officer, (Operations) State Bank of India, Central office, Bombay-1**
என்ற விலாசத்துக்குப் பொருள் அனுப்பி வைக்கக் கோருகிறோம்.

# புடவைகளில் மலரும் பூக்கள்



படம் :

**ஓவியமும் ஓவியரும்**

புஷ்பங்கள் செடி கொடிகளிலோ மரங்களிலோதான் மலரும் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள், ஸ்ரீமதி கமலாராஜ் அவர்களை அறியாதவர்களாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில், விதம் விதமான வண்ணப் பூக்களை வெவ்வேறு புடவைகளில் மலர வைக்கும் ஆற்றல் படைத்தவர் ஸ்ரீமதி கமலாராஜ். சின்னாளம்பட்டி, காஞ்சீபுரம், ஆரணி, கோயமுத்தூர், அகமதாபாத் என்று பல ரகப் புடவைகளிலும் ஊர் வித்தியாசம், நூல் வித்தியாசம் பார்க்காமல் புஷ்பங்களை மலரச் செய்கிறார் அவர். அவற்றைப் பார்க்கும் மங்கையர் அந்த மலர்க் கொடிகளையும் கொத்துக்களையும் அப்படியே எடுத்து அணிந்து கொள்ளத் துடிப்பார்கள்.

சில வாரங்களுக்குமுன் அவர் ஒரு கண்காட்சி நடத்தினார். கண்காட்சி முடிந்தபோது அவரிடம் மிஞ்சியது ஏகப்பட்ட பாராட்டுதல்கள். மிஞ்சாதது அவருடைய மலர்ப் புடவைகள். அத்தனையும் ரசிகர்களிடையே விற்பனையாகி விட்டன !

திருமதி கமலாராஜ் பெங்களூரில் பிறந்து வளர்ந்தவர். அவருடைய வீடு லால்பாக் தோட்டத்திற்கு எதிரே. ஆகவே, எப்போதும் அவர் பார்வையில் வண்ணவண்ண மலர்கள் தென்பட்டுக் கொண்டேயிருக்கும்.

பள்ளி நாட்களில் அவருக்குச் சித்திரம் வரைவதில் ஆர்வம் இருந்தது என்று சொல்ல முடியாது. திரைச் சீலைகளில் மனத்திற்குத் தோன்றிய ஓவியங்களைத் தீட்ட முயன்று அவற்றை இடையே அப்படியே விட்டிருக்கிறார். ஆனால் திருமணத்திற்குப் பிறகு கணவர் டாக்டர் பி. எல். என். ராஜுடன் சென்னைக்கு வந்ததும், அவருக்குச் சித்திரம் வரைவதில் மீண்டும் ஆர்வம் ஏற்பட்டது. இப்போது அவர் சம்பிரதாயமான திரைச் சீலைகளை நாடவில்லை. சேலைகளையே தேர்ந்தெடுத்தார். உருவங்களை வரைய முயலவில்லை. உற்சாகம் தரும் மலர்களை வரைய முற்பட்டார். இதற்குத் தேவையான அவகாசத்தையும் ஆர்வத்தையும் டாக்டர் ராஜ் முழு மனத்துடன் வழங்கினார். சுவாரசியமான பொழுது போக்காக இந்தக் கலை இவரிடம் வளரத் தொடங்கியது.

''நான் உபயோகிப்பவை யெல்லாம் சாதாரண வர்ணங்கள். மேலை நாட்டுத் தயாரிப்புகளையும் நம் நாட்டுத் தயாரிப்புகளையும் எனக்குப் பழகிப்போன ஒரு கலவை முறையில் சேர்த்து உபயோகிக்கின்றேன். ஆகையால் எத்தனை தடவைகள் சலவைக்குப் போனாலும் இந்த ஓவியங்கள் அழியாது; கலையாது. இதை நானே நன்றாகப் பரீட்சித்துப் பார்த்திருக்கிறேன்'' என்றார் திருமதி கமலாராஜ்.


ஒரு புடவைக்கு உடலில் பூக்கள் தீட்டச் சராசரியாக ஆறு நாட்கள் பிடிக்கின்றன இவருக்கு. பூக்களின் அளவைப் பொறுத்துத்தான் வண்ணச் சேர்க்கையின் செலவும் ஆகிறது. ஒரு புடவைக்குச் சராசரி பதினைந்து ரூபாய் பெறுமான வண்ணம் தேவைப்படுகிறது. சில புடவைகளில் பெரிது பெரிதாக மலர்களைத் தனித் தனியாகத் தீட்டுகிறார். சில புடவைகளில் மலர்ச் சரங்களாகவே மாட்டி விடுகிறார். எந்த ரகமாக இருந்தாலுமே மலர்கள் அந்தத் துணிப் பின்னணியில் பளிச்சிடுகின்றன. ஓர் அமைப்பு போல இன்னோர் அமைப்பு இருப்பதில்லை. ஒரு புடவை போலவே இன்னொரு புடவை வாங்க முடியாது. இதனாலேயே ''கல்லூரி மாணவிகளும், யுவதிகளும் இந்தப் புடவைகளில் அதீதமான கவர்ச்சியைக் காண்கிறார்கள்'' என்றார் ஸ்ரீமதி கமலாராஜ்.

''தொழில் முறையில் நான் இந்தப் பொழுது போக்கை ஆரம்பிக்கவில்லை. ஓவியம் தீட்டுவதில் நான் ஓர் 'அமெச்சூர்' தான். விற்பனையிலும் 'அமெச்சூர்' தான். இந்தக் கலை எனக்கு உற்சாகத்தை அளிக்கிறது. ஓவியத்திற்கு உபயோகப்படும் அத்தனை புடவைகளையும் நானே உபயோகப்படுத்த முடியாதே! அதற்காகக் கேட்பவர்களுக்கு அடக்க விலைக்குக் கொடுத்து விடுகிறேன். எனக்குப் பயிற்சி லாபம் ; கலை உணர்ச்சிக்கு உருவம் கொடுத்த உற்சாகம் லாபம்'' என்றார்.

அவருடைய கைவண்ணம் பாமரர்களும் கலைப் பண்டிதர்களும் விரும்பும்படியாக இருக்கிறது.

— பட்டினத்தார்








சமீப காலத்தில் உலக முழுவதிலும் ஒரு பெரும் பரபரப்பை ஏற்படுத்திய புத்தகம் "ஒரு ஜனாதிபதியின் மரணம்". புத்தகம் கூறும் உண்மைக் கதை பரபரப்பூட்டியது ஒருபுறமிருக்க புத்தகம் எழுதப்பட்ட விதமும் அச்சான கதையுமே பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

# புத்தகம் கிளப்பிய பிரச்னைகள்

**1964**ம் ஆண்டில் பிப்ரவரி மாதம் ஐந்தாம் நாள்! தொலைபேசி மணி கணகண வென அடித்தது. எழுத்தாளர் மான்செஸ்டர் அதை எடுத்து, "ஹலோ!" என்றார். தொலைபேசியின் மறுமுனையில் இருந்தவர் பியரி ஸாலிங்கர். ஜாக்குலினின் கென்னடியின் விருப்பத்தைத் தெரிவிக்கவே தாம் டெலிபோன் செய்வதாகக் கூறினார் அவர். கென்னடியின் படுகொலையைப் பற்றி விவரமாக ஒரு புத்தகம் எழுதும்படி மான்செஸ்டரைக் கேட்டுக் கொண்டார்.

"பால்டிமோர் ஸன்" என்ற நாளிதழில் சில ஆண்டுகள் துணை ஆசிரியராக இருந்த மான்செஸ்டர் அன்று வரை ஏழு புத்தகங்களை எழுதியிருந்தார். வாழ்க்கை வரலாற்றை எழுதும் கலையும் அவருக்குப் புதிதல்ல.

கென்னடியைப் பற்றியேகூட ஏற்கெனவே அவர் ஒரு நூல் எழுதியிருந்தார். கென்னடிக்குத் தம்மைப் பற்றி எழுதப்பட்டுள்ள எத்தனையோ பல புத்தகங்களுள் பிடித்தமானது மான்செஸ்டருடைய நூல்தான்.

ஸாலிங்கரிடம் தம் சம்மதத்தைத் தெரிவித்த மான்செஸ்டர் மறைந்த மாபெரும் தலைவரின் சகோதரரான ராபர்ட் கென்னடியின் ஒப்புதலுக்காகக் காத்திருந்தார்.

மார்ச் மாதம் 26ம் நாளன்று அட்டர்னி ஜெனரல் ராபர்ட் கென்னடியின் அலுவலகத்தில் ஏராளமான பத்திரிகை நிருபர்கள் குழுமியிருந்தனர். ராபர்ட் கென்னடியின் முன்னிலையில் மான்செஸ்டர், கென்னடியின் மரணத்தைப் பற்றி விரிவாக எழுதும் பொறுப்பைத் தம்மிடம் கென்னடியின் குடும்பத்தினர் ஒப்படைத்திருப்பதாக நிருபர்களிடம் கூறினார். அது மட்டுமின்றி தானும் ராபர்ட் கென்னடியும் இந்தப் புத்தகம் விஷயமாக ஓர் ஒப்பந்தம் செய்து கொண்



இடப் பக்கம்: மான்செஸ்டர் - நூலாசிரியர்.    மேலே : கென்னடி - இறுதி யாத்திரை

டிருப்பதாகவும் அதன்படி புத்தகம் நவம்பர் 20ம் நாள் முதல் 25ம் நாள் வரை நடந்த சம்பவங்களை மட்டுமே மையமாகக் கொண்டு எழுதப்படும் என்றும் புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு திரைப்படமோ அல்லது டெலிவிஷன் படமோ யாரும் எடுக்கக் கூடாது என்றும் மான்செஸ்டரின் கையெழுத்துப் பிரதி கென்னடியின் குடும்பத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே புத்தகமாக வெளியிடப்படும் என்றும் கூறினர்.

ஹார்ப்பர் புத்தக நிறுவனம் மான்செஸ்டரின் புத்தகத்தை வெளியிடுவது என்று முடிவாகியது. நூலைப் பத்திரிகைகளில் தொடர் கட்டுரைகளாக வெளியிடும் உரிமை மான்செஸ்டருக்கே அளிக்கப்பட்டது.

**மா**ன்செஸ்டர், கையெழுத்துப் பிரதியை ஹார்ப்பர் நிறுவனத்தின் ஆசிரியரான சவான் தாமஸ் என்பவருக்கு அனுப்பினார். அதன் நகல்களைத் தம் நண்பர்களான ஜான் ஸிஜென்தாலர், எட்வின் குத்மான் என்ற இருவருக்கும் அனுப்பி வைக்கும்படி மான்செஸ்டரை கென்னடி குடும்பத்தினர் வேண்டினர். கென்னடியின் மரணத்தையும் அதன்பின் அவர் இறுதிச் சடங்கு வரை நடந்த நிகழ்ச்சிகளையும் துல்லியமாக விவரிக்கும் இந்நூலைப் படித்துப் பார்க்க சோகத்தில் ஆழ்ந்திருந்த ராபர்ட்டுக்கோ அல்லது ஜாக்குலினுக்கோ அந்தச் சமயத்தில் தெம்பு இல்லை. ஆகவேதான் நண்பர்களின் உதவியை நாடினர். அந்த நண்பர்கள், மான்செஸ்டர் ஜனாதிபதி ஜான்ஸனை சித்திரித்திருந்த விதம் சரியாக இல்லை எனவும் ஜான்ஸனை கிட்டத்தட்ட ஒரு வில்லனாக மான்செஸ்டர் கோடிகாட்டியிருப்பதாகவும் உணர்ந்தனர். ஆனால் ஷீல்ஸிங்கர் என்ற வரலாற்றுப் பேராசிரியர் மட்டும் மான்செஸ்டரின் புத்தகம், ''அசாதாரணமான, அபூர்வமான, மாபெரும் படைப்பு'' எனப் புகழ்ந்தார்.

புத்தகத்திலுள்ள வேண்டாத சம்பவங்கள், தவறுகள் முதலியவற்றைச் சுட்டிக் காட்ட குத்மானும், ஸிஜென்தாலரும் முனைந்திருந்த அதே வேளையில் மான்செஸ்டர், தமது புத்தகத்தைத் தொடர்கட்டுரையாக வெளியிடக்கூடிய பல பத்திரிகைகளுடன் தொடர்பு கொண்டிருந்தார்.

மான்செஸ்டரின் புத்தகத்தை வெளியிட 'லுக்' பத்திரிகையும் 'லைப்' பத்திரிகையும் போட்டியிட்டன. முதலில் 'லுக்' பத்திரிகை மான்செஸ்டருக்கு இருபத்தைந்து லட்ச ரூபாய் அளிப்பதாகக் கூறியது. அதைக் கேள்வியுற்ற 'லைப்' மான்செஸ்டருக்கு நாற்பது லட்ச ரூபாய் தருவதாக வாக்களித்தது. இறுதியில் வென்றது 'லுக்' பத்திரிகைதான். மான்செஸ்டர் எழுதியிருந்தபடியே எந்தவிதமான வெட்டுக்களும் இல்லாமல் பிரசுரிக்க, 'லுக்' நிறுவனம் மான்செஸ்டருக்கு ஐம்பத்து மூன்று லட்ச ரூபாய் கொடுப்பதாக உறுதி கூறியது! அமெரிக்கப் புத்தக உலகின் சரித்திரத்திலேயே ஒரு கையெழுத்துப் பிரதிக்கு இவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது இதுதான் முதல் முறை!

மான்செஸ்டருக்கு 'லுக்' பத்திரிகை அளிக்கவிருந்த மாபெரும் சன்மானம் புத்தக உலகை மட்டுமின்றி கென்னடி குடும்பத்தினரையும் அதிர்ச்சியுறச் செய்தது. தமது கணவரின் மரணத்தை வியாபாரப் பொருளாகக் கருதி விட்டார்களே என மனம் மிகவும் நொந்தார் ஜாக்குலின் கென்

னடி. விறுவிறுப்பு மிக்க துப்பறியும் தொடர் கதை போல கென்னடியின் மரணம் பற்றிய கதை 'லுக்' பத்திரிகையில் தொடர்ந்து வெளியிடப்படுவதை அவர் விரும்பவில்லை.

புத்தகத்தைப் பத்திரிகைகளுக்கு விற்கும் உரிமை மான்செஸ்டரிடமே இருந்தது. ஆனால் கென்னடி குடும்பத்தினர் புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியை இன்னும் அங்கீகரிக்கவில்லை. அதே சமயம் நூலை எந்தவித மாறுதலுமின்றி அப்படியே வெளியிடும் உரிமை 'லுக்' பத்திரிகையிடமிருந்தது. இதனால் பெரிய சிக்கல் ஏற்பட்டு மான்செஸ்டருக்கும் கென்னடி குடும்பத்தினருக்கும் இடையே கடுமையான பனிப்போராக உருவெடுத்தது. மான்செஸ்டரின் புத்தகத்தில் மொத்தம் 6472 சொற்களை நீக்கவேண்டும் என கென்னடி குடும்பத்தினர் நினைத்தனர்.

அப்படி நீக்கிவிட்டால் தனது புத்தகம் ஈவு இரக்கம் இல்லாமல் சின்னாபின்னப் படுத்தப்பட்டதாகும் என்று மான்செஸ்டர் கருதினார். வெட்ட அவர் ஒப்புக் கொள்ளவில்லை. 'லுக்' பத்திரிகையோ ஜாக்குவிலின் கென்னடியின் அந்தரங்கத்தை விளக்கும் சொற்களைத் தவிர வேறு எதையுமே நீக்க முடியாது என உறுதியாக நின்றது. பனிப்போர் நிஜமான போராக உருவெடுத்தது.

ஜாக்குவிலின் கென்னடியின் வழக்கறிஞர் ஒப்பந்த விதிகளை மீறிய காரணத்திற்காக மான்செஸ்டர் மீதும் ஹார்ப்பர் நிறுவனம், 'லுக்' பத்திரிகை ஆகியவற்றின் மீதும் வழக்காடப் போவதாக அறிவித்தார்.

வக்கீல் நோட்டீஸை 'லுக்' மதிக்கவில்லை. ராட்சத அச்சு யந்திரங்கள் மான்செஸ்டரின் நூலை 'லுக்' பத்திரிகையின் பக்கங்களாக அசுர வேகத்தில் அச்சிட்டன.

இதற்கிடையில் சமரசமாக விவகாரத்தை முடித்துக் கொள்ள முயற்சிகள் நடந்தன.

ஹார்ப்பர் நிறுவனம் புத்தகத்தின் முதல் பக்கத்தில், ''இப்புத்தகத்தை ராபர்ட் கென்னடியோ அல்லது ஜாக்குவிலின் கென்னடியோ அங்கீகரிக்கவில்லை. வில்லியம் மான்செஸ்டரும் பதிப்பாளருமே இப்புத்தகத்தில் உள்ள விஷயங்களுக்கு முழுப் பொறுப்பு'' என அச்சிடுவதாக ஒப்புக் கொண்டது.

இந்த நூலை எழுத மான்செஸ்டர் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார் தெரியுமா? ஒரு நாளைக்குப் பதினைந்து மணி நேரம் வீதம் உழைத்தார். கென்னடியும் ஜாக்குவிலினும் ஆஸ்வால்டும் வேறு பலரும் அந்தத் துயரகரமான தினத்தில் செய்த ஒவ்வொரு காரியத்தையும் இவரும் ஒத்திகை நடத்துவதுபோலச் செய்து பார்த்திருக்கிறார். உதாரணமாக, ஆஸ்வால்டு பிரயாணம் செய்த அதே டாக்ஸியில் அதே டிரைவருடன் அதே சாலையில் அதே வேகத்தில் இவரும் பிரயாணம் செய்திருக்கிறார். இப்படியே மற்ற பல நிகழ்ச்சிகளையும் நுணுகி ஆராய்ந்திருக்கிறார். ஜாக்குவிலின் கென்னடியை இவர் பேட்டி கண்டு பதிவு செய்த 'டேப்'களைப் பத்து மணி நேரம் ஒருவர் கேட்கலாம்! ஆயிரத்துக்கு மேற்பட்ட வேறு பலரைப் பேட்டி கண்டு டைப் செய்யப்பட்ட விவரங்கள் பதினெட்டு புத்தகங்களாக பைண்டு செய்யப்பட்டுள்ளன! ஜனாதிபதி ஜான்ஸன் முதல் டல்லாஸ் புத்தகக் கிடங்கின் காவல்காரன் வரை இவர் ஒருவர் பாக்கியில்லாமல் பேட்டி கண்டார். இவை தவிர இருபத்தேழு தோல் பைகளில் இவர் சேகரித்த தஸ்தாவேஜுகள் உள்ளன. இவையெல்லாம் எதிர்காலத்தில் யாரேனும் ஒரு சரித்திர ஆராய்ச்சியாளருக்குப் பயன்படலாம் என்பதால் 'ஸீல்' வைத்து ''கென்னடி லைப்ரரி''யில் பத்திரப்படுத்தத் தீர்மானித்திருக்கிறார் மான்செஸ்டர்.

— அ. இராமதுரை



இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று உங்களால் கண்டுபிடிக்க முடியுமா? உங்களுக்கு உதவ இதோ சில குறிப்புக்கள்:


இவர்கள் போக்குவரத்தைக் கவனிக்கும் போலீஸ்காரர்கள்.

விபத்து நடந்த இடத்தைப் போட்டோ எடுக்கவில்லை.

மக்களுக்கு நரம்புத் தளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய ஒரு பிரச்னையை ஆராய்கிறார்கள்.

இந்தக் குற்றத்தில் ஈடுபடுபவர்கள் பெரும்பாலும் இளைஞர்களே.

எங்கே, இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லையா? 28ம் பக்கம் திருப்பிப் பாருங்கள், விடை கிடைக்கும்.



# பொன்னியின் செல்வன்



அமரர் கல்கி

## முப்பத்தாறும் அத்தியாயம்

## "ஞாபகம் இருக்கிறதா?"

லதா மண்டபத்தின் தோட்ட வாசலண்டை வந்து நின்று நந்தினி மூன்று தடவை கையைத் தட்டினாள்.

அப்போது அவள் முகத்தில் படிந்திருந்தது பயத்தின் ரேகையா அல்லது மரங்களின் இருண்ட நிழலா என்று சொல்ல முடியாது.

தோட்டத்தில் சிறிது தூரம் வரையில் பெரிய பெரிய அடிமரங்களும் அவற்றைச் சுற்றிக் கொண்டிருந்த கொடிகளும் தெரிந்தன. அப்பால் ஒரே இருட் பிழம்பாயிருந்தது.


இருளைக் கிறிக் கொண்டு, கொடிகளை விலக்கிக் கொண்டு, மரம் ஒன்றின் பின்னாலிருந்து மந்திரவாதி வெளியே வந்தான்.

நந்தினி தன்னுடைய புஷ்ப மஞ்சத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள். அவள் அழகிய முகத்தில் இப்போது அமைதி குடிகொண்டிருந்தது.

மந்திரவாதி லதா மண்டபத்துக்குள் நுழைந்தான். தங்க விளக்கின் சுடர் ஒளி அவன் முகத்தின் மீது விழுந்தது.

ஏற்கெனவே பார்த்த முகமாயிருக்கிறதே! யார் இவன்? ஆம்; திருப்புறம்பயம் பள்ளிப் படையினருகில் நள்ளிரவில் கூடியிருந்த மனிதர்களில் ஒருவன் இவன். பையிலிருந்து பொன் நாணயங்களைக் கல கல வென்று கொட்டியவன். "ஆழ்வார்க்கடியானைக் கண்ட இடத்தில் உடனே கொன்று விடுங்கள்!" என்று மற்றவர்களுக்குக் கூறிய ரவிதாஸன்தான் இவன்.

வரும்போதே அவன் முகத்தில் கோபம் கொதித்தது. மலர்ப் படுக்கை





யில் சாந்த வடிவமாய் அமர்ந்திருந்த நந்தினியைக் கண்டதும் அவனுடைய பூனைக் கண்கள் வெறிக் கனல் வீசின.

மஞ்சத்தின் எதிரில் கிடந்த பலகையில் உட்கார்ந்து கொண்டு, நந்தினியை உற்றுப் பார்த்துக் கொண்டு, ''ஹூம் ஹ்ரீம் ஹராம்! பகவதி! சக்தி! சண்டிகேசுவரி!...'' என்று சில மந்திரங்களைச் சொன்னான்.

''போதும்! நிறுத்து! தாதிப் பெண் வாசற்படியில் உட்கார்ந்தபடி தூங்கித் தொலைத்துவிட்டாள் போலிருக்கிறது! சொல்ல வேண்டியதைச் சீக்கிரம் சொல்! அவர்

கோட்டைக்குள் வந்து விட்டார்!'' என்றாள் நந்தினி.

''அடி பாதகி!'' என்று ரவிதாஸன் கூறியது, நாகப் பாம்பு சீறுவது போலத் தொனித்தது.

''யாரைச் சொன்னாய்?'' என்று நந்தினி சாந்தமாகவே கேட்டாள்.

''நன்றிகெட்ட நந்தினியைத்தான்! பழுவூர் இளைய ராணியைத்தான்! உன்னைத்தான்!'' என்று ரவிதாஸன் தன் ஒரு கைவிரலால் அவளைச் சுட்டிக் காட்டினான்.

நந்தினி மௌனமாயிருந்தாள்.

''பெண்ணே! நினைவில் வைத்திருக்க வேண்டிய சில சம்பவங்களை நீ மறந்து விட்டாய் போலிருக்கிறது. அவற்றை உனக்கு ஞாபகப்படுத்துகிறேன்'' என்றான் ரவிதாஸன்.

''பழைய கதை இப்போது எதற்கு?'' என்றாள் நந்தினி.

''இப்போது எதற்கு என்றா கேட்கிறாய்? சொல்கிறேன், முதலில் ஞாபகப்படுத்தி விட்டுப் பிற்பாடு சொல்கிறேன்'' என்றான் ரவிதாஸன்.

அவனைத் தடுப்பதில் பயனில்லையென்று கருதியவளைப் போல் நந்தினி ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

''ராணி! கேள்! மூன்று வருஷத்துக்கு முன்னால் ஒரு நாள் நடுநிசியில் வைகை நதிக் கரையில் உள்ள மயானத்தில் ஒரு சிதை எரிந்து கொண்டிருந்தது. சாஸ்திரப்படி புரோகிதர்களைக் கொண்டு அந்திமக்கிரியை ஒன்றும் அங்கு நடக்கவில்லை. காட்டில் காய்ந்து கிடந்த கட்டைகளையும் சுள்ளிகளையும் இலைச் சருகுகளையும் கொண்டு வந்து அச்சிதையை அடுக்கினார்கள். மரத்துக்குப் பின்னால் மறைத்து வைத்திருந்த ஓர் உடலைக் கொண்டு வந்து அந்தச் சிதையில் இட்டார்கள். பிறகு தீ மூட்டினார்கள். காட்டுக் கட்டைகளில் தீ நன்றாய்ப் பிடித்துக் கொழுந்துவிட்டு எரிந்தது. அப்போது காட்டு நிழலிலிருந்து உன்னைச் சிலர் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தார்கள். உன் காலையும் கையையும் கட்டிப் போட்டிருந்தது. உன் வாயில் துணி அடைத்திருந்தது. இன்று அழகாகப் பூ வைத்துக் கொண்டை போட்டுக் கொண்டிருக்கிறாயே, அந்தக் கூந்தல் விரிந்து தரையில் புரண்டு கொண்டிருந்தது. உன்னை அம்மனிதர்கள் ஜுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்த சிதையில் உயிரோடு போட்டுக் கொளுத்திவிட எண்ணியிருந்தார்கள். 'இன்னும் கொஞ்சம் தீ நன்றாக எரியட்டும்!' என்று அவர்களில் ஒருவன் சொன்னான். உன்னை அங்கேயே போட்டுவிட்டு அந்த மனிதர்கள் தனித் தனியே ஒரு பயங்கரமான சபதம் எடுத்துக் கொண்டார்கள். அதை நீ கேட்டுக் கொண்டிருந்தாய். உன் வாயை அடைத்திருந்தார்களே தவிர, கண்ணையும் கட்டவில்லை; காதையும் அடைக்கவில்லை. ஆகையால், பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டுமிருந்தாய். அவர்கள் அனைவரும் சபதம் கூறி முடிந்த பிறகு உன்னை நெருங்கினார்கள். அதுவரை சும்மா இருந்தவள், கட்டுண்டிருந்த உன் கைகளால் ஏதோ சமிக்ஞை செய்ய முயன்றாய். உன் கண்களை உருட்டி விழித்துப் புருவத்தை நெரித்துக் கஷ்டப்பட்டாய். அவர்களில் ஒருவன், 'இவள் ஏதோ சொல்ல விரும்புகிறாளடா!' என்றான். 'பழைய கதையாகத்தான் இருக்கும். தூக்கிச் சிதையில் போடு!' என்றான் இன்னொருவன். 'இல்லையடா! தீயில் போடுவதற்கு முன்னால் என்னதான் சொல்கிறாள், கேட்டுவிடலாம்! வாயிலிருந்து துணியை எடு!' என்றான் மற்றொருவன். அவனே அவர்களுக்குத் தலைவன் ஆனபடியால் உன் வாயிலிருந்து துணியை எடுத்தார்கள். நீ அப்போது என்ன சொன்னாய் என்பது நினைவிருக்கிறதா, பெண்ணே!'' என்று ரவிதாஸன் கேட்டு விட்டு நிறுத்தினான்.

நந்தினி மறுமொழி சொல்லவும் இல்லை; அவனைத் திரும்பிப் பார்க்கவும் இல்லை. நெஞ்சில் குடிகொண்டிருந்த அருவருப்பையும் பீதியையும் அதே சமயத்தில் பயங்கர சங்கல்பத்தின் உறுதியையும் அவள் முக மண்டலம் காட்டியது. அவளுடைய கரிய கண்களிலிருந்து இரு கண்ணீர்த் துளிகளும் ததும்பி நின்றன.

''பெண்ணே! பேசமாட்டேன் என்கிறாய்! வேண்டாம்! அதையும் நானே சொல்லி விடுகிறேன். அந்த மனிதர்களைப் போலவே நீயும் பழி வாங்கும் விரதம் பூணப் போவதாகச் சொன்னாய். பழி வாங்குவதற்கு அவர்களைக் காட்டிலும் உனக்கே அதிக காரணம் உண்டு என்று சத்தியம் செய்தாய். உன்னுடைய அழகையும் மதியையும் அதற்கே பயன்படுத்துவதாகக் கூறினாய். அவர்களுக்கு உன்னால் முடிந்த அளவு உதவி புரிவதாகவும் சொன்னாய். சபதத்தை நிறைவேற்றியதும் நீயே உன் உயிரை விட்டுவிடத் தீர்மானித்திருப்பதாகவும் ஆணையிட்டுச்

சொன்னாய். உன்னை மற்றவர்கள் நம்பவில்லை. ஆனால் நான் நம்பினேன். நம்பி, உன்னைத் தீயில் போட்டுவிடாமல் தடுத்தேன். உன் உயிரைத் தப்புவித்தேன். இதெல்லாம் உனக்கு ஞாபகம் இருக்கிறதா?'' என்று ரவிதாஸன் கூறி நிறுத்தினான்.

நந்தினி சற்றுத் திரும்பி அவனைப் பார்த்து, ''ஞாபகம் இருக்கிறதா என்று கேட்கிறாயே? என் நெஞ்சில் அவ்வளவும் தீயினால் எழுதியதுபோல் எழுதி வைத்திருக்கிறதே?'' என்றாள்.

''பின்னர் ஒரு நாள் நாம் எல்லாரும் அகன்ற காவேரிக் கரை ஓரமாகக் காட்டு வழியில் போய்க் கொண்டிருந்தோம். திடீரென்று பின்னால் குதிரை வீரர்கள் வரும் சத்தம் கேட்டது. அவர்கள் போகும் வரையில் நாம் ஒவ்வொருவரும் தனித் தனியாகக் காட்டில் ஒளிந்து கொள்ளத் தீர்மானித்தோம். ஆனால் நீ மட்டும் அத்தீர்மானத்தை மீறி வழியிலேயே நின்றாய். அந்த வீரர்கள் உன்னைப் பிடித்துக் கொண்டார்கள். அவர்களுடைய தலைவனாகிய பழுவேட்டரையன் உன்னைக் கண்டு மயங்கி உன் மோக வலையில் விழுந்தான். அவனை நீ மணந்தாய்.* என்னைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் நான் ஏமாந்து விட்டதாக என்னை இடித்துக் கூறினார்கள். நான் உன்னை விடவில்லை. எப்படியோ ஒரு நாள் உன்னைத் தனியே பிடித்துக் கொண்டேன். துரோகியாகிய உன்னைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட எண்ணினேன். மறுபடியும் நீ உயிர்ப் பிச்சை கேட்டாய். நம்முடைய சபதத்தை நிறைவேற்றுவதற்காகவே இங்கு வந்திருப்பதாகக் கூறினாய். இந்த அரண்மனையில் இருந்தபடியே எங்களுக்கு வேண்டிய உதவியெல்லாம் செய்வதாகச் சத்தியம் செய்தாய். இதெல்லாம் உண்மையா இல்லையா?'' என்று கேட்டு விட்டு நிறுத்தினான் ரவிதாஸன்.

''இதெல்லாம் உண்மைதான்; யார் இல்லை என்றார்கள்? எதற்காகத் திருப்பித் திருப்பிச் சொல்லுகிறாய்? இப்போது நீ வந்த காரியத்தைச் சொல்லு!'' என்றாள் நந்தினி.

''இல்லை, பெண்ணே! உனக்கு ஞாபகம் இல்லை. எல்லாவற்றையும் நீ மறந்து விட்டாய்! பழுவூர் அரண்மனையின் சுகபோகத்தில் அழுந்தி உன் சபதத்தை மறந்து விட்டாய்! அறுசுவை உண்டி அருந்தி, ஆடை ஆபரணங்கள் புனைந்து, சப்ரகூட மஞ்சத்தில் பட்டு மெத்தையில் உறங்கி, தந்தப் பல்லக்கில் பிரயாணம் செய்யும் ராணி நீ! உனக்குப் பழைய ஞாபகங்கள் எப்படி இருக்கும்?''

''சீச்சீ! இந்த மஞ்சமும் மெத்தையும் ஆடை ஆபரணமும் யாருக்கு வேண்டும்? இந்த அற்ப போகங்களுக்காகவா நான் உயிர் வாழ்கிறேன்? இல்லவே இல்லை!''

''அல்லது வழியில் போகிற வாலிபனுடைய சௌந்தரிய வதனத்தைக் கண்டு மயங்கி விட்டாய் போலும்! புதிதாகக் கொண்ட மையலில் பழைய பழி வாங்கும் எண்ணத்தை மறந்திருக்கலாம் அல்லவா?''

நந்தினி சிறிது துணுக்கம் அடைந்தாள். அதை உடனே சமாளித்துக் கொண்டு, ''பொய்! முழுப் பொய்!'' என்றாள்.

''அது பொய்யானால், நான் இன்று வரப் போவதாக முன்னதாகச் சொல்லி அனுப்பியிருந்தும், வழக்கமான இடத்துக்கு உன் தாதிப் பெண்ணை ஏன் அனுப்பி வைக்கவில்லை?''

''அனுப்பி வைத்துத்தான் இருந்தேன். உனக்கு வைத்திருந்த ஏணியில் இன்னொருவன் ஏறி வந்து விட்டான். அந்த மூடப் பெண் அவனை நீதான் என்று எண்ணி அழைத்துக் கொண்டு வந்துவிட்டாள். அது என்னுடைய குற்றமா?''

''யாருடைய குற்றமாயிருந்தால் என்ன? இன்னும் ஒரு கணத்தில் என் உயிருக்கு ஆபத்து வருவதாயிருந்தது. அந்த வாலிபனைத் தேடி வந்த கோட்டைக் காவலாளர் என்னைப் பிடித்துக் கொள்ள இருந்தார்கள். இந்த அரண்மனைக்குப் பக்கத்துக் காட்டிலுள்ள குளத்தில் மூச்சுத் திணறும் வரையில் முழுகியிருந்து அவர்கள் போன பிறகு தப்பித்து வந்தேன். சொட்டச் சொட்ட நனைந்து வந்தேன்...''

''உனக்கு அது வேண்டியதுதான். என்னைச் சந்தேகித்த பாவத்தை அந்த முழுக்கினால் கழுவிக் கொண்டாய்!''

''பெண்ணே! சத்தியமாகச் சொல்! அந்த வாலிபனுடைய அழகில் நீ மதி மயங்கிவிடவில்லையா?''

''சீச்சீ! இது என்ன வார்த்தை! ஆண்பிள்ளைகளின் அழகைப் பற்றி யாராவது பேசுவார்களா? இந்த வெட்கங் கெட்ட சோழ நாட்டிலே தான் 'அரசன் அழகன்' என்று கொண்டாடுவார்கள். ஆண் பிள்ளைகளுக்கு அழகு உடம்பிலுள்ள போர்த் தழும்புகள் அல்லவா?''

''நன்றாகச் சொன்னாய். இதை நீ உண்மையாகச் சொல்லும் பட்சத்தில்,

---

* பழுவூர் இளைய ராணி நந்தினியையும் சோழநாட்டின் தனாதிகாரி பழுவேட்டரையரையும் இந்த இதழ் அட்டைப் படத்தில் சந்திக்கும்போது ஓவியர் மணியத்தின் கைவண்ணத்தையும் அதில் காண்கிறீர்கள்.

அந்த வாலிப வழிப் போக்கன் இங்கு எதற்காக வந்தான்?''

''முன்னமே சொன்னேனே, நீதான் என்று எண்ணி வாஸுகி அவனை அழைத்துக்கொண்டு வந்தாள் என்று.''

'' என்னிடம்கூட நீ கொடுக்காத உன் முத்திரை மோதிரத்தை அவனிடம் ஏன் கொடுத்தாய்?''

'' அவனை இவ்விடம் தருவித்துப் பேசுவதற்காகவே கொடுத்தேன். இப்போது அம் மோதிரத்தை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டு விடப் போகிறேன்....''

''எதற்காக அவனைத் தருவித்தாய்? அவனிடம் இவ்வளவு நேரம் என்ன சல்லாபம் செய்து கொண்டிருந்தாய்?''

''ஒரு முக்கியமான லாபத்தைக் கருதியே அவனுடன் சல்லாபம் செய்து கொண்டிருந்தேன். நம்முடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள அவனால் பெரிய அநுகூலம் ஏற்படும்.''

'' அடி பாதகி! கடைசியில் உன் பெண் புத்தியைக் காட்டிவிட்டாயா? யாரோ முன்பின் தெரியாத வாலிபனிடம் நமது இரகசியத்தை....''

''வீணில் ஏன் பதறுகிறாய்? நான் ஒன்றும் அவனிடம் சொல்லிவிடவில்லை. அவனிடமிருந்துதான் ரகசியத்தைக் கிரஹித்துக் கொண்டேன்.''

''என்ன கிரஹித்துக் கொண்டாய்?''

''இவன் காஞ்சியிலிருந்து பழையாறைக்கு ஓலை கொண்டு போகிறான். பழையாறையில் உள்ள பெண் புலிக்குக் கொண்டு போகிறான். அதை என்னிடம் காட்டினான். அவன் கொடுக்கும் மறு ஓலையை என்னிடம் கொண்டு வர வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தேன். அதற்குள் நீ வந்து விட்டாய்.''

''ஓலையுமாயிற்று; எழுத்தாணியும் ஆயிற்று. இதனாலெல்லாம் நமக்கு என்ன உபயோகம்?''

''உன்னுடைய அறிவின் ஓட்டம் அவ்வளவுதான்! புலிக் குலத்தை அடியோடு அழிப்பது என்று நாம் விரதம் கொண்டிருக்கிறோம். ஆனால் நீங்கள் ஆண் புலிகளை மட்டுமே எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். பெண் புலியினாலும் குலம் வளரும் என்பதை மறந்து விட்டீர்கள். அது மட்டுமல்ல. தற்போது இந்தச் சோழ ராஜ்யத்தை ஆளுவது யார் என்று எண்ணியிருக்கிறாய்? பலமிழந்து செயலிழந்து நோய்ப் படுக்கையில் படுத்திருக்கும் கிழவனா? காஞ்சியிலும் இலங்கையிலும் உள்ள இளவரசர்களா?....''

'' இல்லை; உன்னை ராணியாகப் பெறும் பாக்கியம் பெற்ற தனாதிகாரி பழுவேட்டரையர்தான். இது உலகம் அறிந்ததாயிற்றே!''

''அதுவும் தவறு. உலகம் அப்படி எண்ணுகிறது; இந்தக் கிழவரும் அப்படி எண்ணியே ஏமாந்து போகிறார். நீயும் அந்த ஏமாற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறாய். உண்மையில் பழையாறையில் உள்ள பெண் புலிக் குட்டிதான் இந்த ராஜ்யத்தை ஆளுகிறது. அரண்மனைக்குள் இருந்தபடி அந்த கர்வக்காரி சூத்திரக் கயிற்றை இழுத்து எல்லாரையும் ஆட்டி வைக்கப் பார்க்



கிறாள்! அவனுடைய கொட்டத்தை நான் அடக்குவேன். அதற்காகவே இந்த வாலிபனை உபயோகப்படுத்திக் கொள்ளப் போகிறேன்....''

ரவிதாஸனுடைய முகத்தில் வியப்புக்கும் மரியாதைக்கும் உரிய அறிகுறிகள் தென்பட்டன.

''நீ பெரிய கைகாரிதான்; சந்தேகம் இல்லை; ஆனால் இதெல்லாம் உண்மை என்பது என்ன நிச்சயம்? உன்னை எப்படி நம்புவது ?'' என்றான்.

'' அந்த வாலிபனை உன்னிடமே ஒப்புவிக்கிறேன். நீயே அவனைச் சுரங்க வழியில் கோட்டைக்கு வெளியே அழைத்துக் கொண்டு போ! கண்ணைக் கட்டி! அழைத்துக் கொண்டு போ ! பழையாறைக்கு அருகில் சென்று காத்திரு ! குந்தவை கொடுக்கும் மறு ஓலையுடன் இங்கே அவனை மீண்டும் அழைத்துக் கொண்டு வா! அவன் தப்பித்துக் கொள்ளப் பார்த்தாலும் உன்னை ஏமாற்றப் பார்த்தாலும் உடனே கொன்று விடு!'' என்றாள் நந்தினி.

''வேண்டாம்! வேண்டாம்! நீயும் அவனும் எப்படியாவது போங்கள் ! அவனைச் சின்னப் பழுவேட்டரையரின் ஆட்கள் கோட்டைக்குள் இப்போது தேடுகிறார்கள்; வெளியிலும் சீக்கிரத்தில் தேடப் போகிறார்கள். அவனோடு சேர்ந்து போனால்



எனக்கும் ஆபத்து வரும். நான் வந்த காரியத்தைப் பற்றிச் சொல்லு!''

''வந்த காரியம் என்னவென்று நீ இன்னமும் தெரிவிக்கவில்லை....''

''காஞ்சிக்கும் இலங்கைக்கும் ஆட்கள் போக ஏற்பாடாகிவிட்டது. இலங்கைக்குப் போகிறவர்கள் பாடு ரொம்பவும் கஷ்டம். அங்கே வெகு சாமர்த்தியமாக நடந்து கொள்ள வேண்டும்....''

''அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? இன்னும் பொன் வேண்டுமா? உங்களுடைய பொன்னாசைக்கு எல்லையே கிடையாதா?''

''பொன் எங்களுடைய சொந்த உபயோகத்துக்கு அல்ல; எடுத்த காரியத்தை முடிப்பதற்காகத்தான். பின் எதற்காக உன்னை இங்கு விட்டு வைத்திருக்கிறோம்? இலங்கைக்குப் போகிறவர்களுக்குச் சோழ நாட்டுப் பொன் நாணயத்தினால் பயன் இல்லை. இலங்கைப் பொன் இருந்தால் நல்லது....''

''இதைச் சொல்வதற்கு ஏன் இத்தனை நேரம்? நீ கேட்பதற்கு முன்பே நான் எடுத்து வைத்திருக்கிறேன்'' என்று நந்தினி கூறி, தான் இருந்த மஞ்சத்தின் அடியில் குனிந்தாள். ஒரு பையை எடுத்து ரவிதாஸன் கையில் தந்தாள். ''இது நிறைய இலங்கைப் பொற்காசு இருக்கிறது. எடுத்துக் கொண்டு போ! அவர் வரும் நேரமாகி விட்டது!'' என்றாள்.

ரவிதாஸன் பையை வாங்கிக் கொண்டு புறப்பட்டபோது, ''கொஞ்சம் பொறு! அந்த வாலிபனைக் கோட்டைக்கு வெளியிலாவது கொண்டு போய் விட்டுவிடு! அப்புறம் அவன் வேறு பாதையில் போகட்டும்! சுரங்க வழியை அவனுக்குக் காட்டிக் கொடுக்க எனக்கு விருப்பமில்லை!'' என்று சொல்லி விட்டு எழுந்து நின்று, இருண்டமாளிகைப் பக்கம் பார்த்தாள்.

அங்கே ஒன்றும் தெரியவில்லை. விரல்களினால் சமிக்ஞை செய்தாள்; இலேசாகக் கையைத் தட்டினாள்; ஒன்றிலும் பலன் இல்லை.

அவளும் ரவிதாஸனும் லதா மண்டபப் பாதை வழியாகச் சிறிது தூரம் சென்றார்கள். அந்த பிரம்மாண்டமான இருள் மாளிகையில் அங்கிருந்து பிரவேசிக்கும் வாசலை நெருங்கினார்கள்.

ஆனால் வந்தியத்தேவனைக் காணவில்லை! சுற்று முற்றும் நாலாபுறத்திலும் அவனைக் காணவில்லை!

## முப்பத்தியேழாம் அத்தியாயம்

# சிம்மங்கள் மோதின!

பழுவூர்ச் சகோதரர்கள் மீது தஞ்சைபுரி வாசிகள் தனிப்பட்ட அபிமானம் வைத்திருந்தார்கள். அந்தப் பழைய நகருக்குப் புதிய பெருமையும் செல்வாக்கும் அளித்தவர்கள் பழுவேட்டரையர்கள் அல்லவா?

யானை, குதிரை, ஒட்டகைகளுடன் பவனி என்றால், எந்த நாளிலும் ஜனங்களுக்கு வேடிக்கை பார்ப்பதில் குதூகலந்தான். அதிலும் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர் தஞ்சையை விட்டு வெளியே போனாலும் சரி, வெளியே போயிருந்து கோட்டைக்குள் பிரவேசித்தாலும் சரி, வீதியின் இரு புறங்களிலும் ஜனங்கள் திரண்டு நின்று வேடிக்கை பார்ப்பார்கள்; ஜயகோஷம் செய்வார்கள்; வாழ்த்துக் கூறுவார்கள்; பூமாரியும், பொறி மழையும் பொழிவார்கள்.

சாதாரணமாய்ப் பெரிய சகோதரர் வெளியில் போய்விட்டு வந்தால் இளையவர் கோட்டை வாசலில் வந்து நின்று வரவேற்று அழைத்துச் செல்வார்.

அண்ணனும் தம்பியும் ஒருவரையொருவர் கண்டதும் தழுவிக் கொள்ளும் காட்சி நீலகிரியும் பொதிகை மலையும் ஆலிங்கனம் செய்து கொள்வது போலிருக்கும்.

இருவரும் இரண்டு யானைகள் மீதோ அல்லது குதிரைகளின் மீதோ ஏறிக் கொண்டு அருகருகே சென்றார்களானால், அந்தக் காட்சியைப் பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும்.

பழுவூர்ச் சகோதரர்களைச் சிலர் இரணியனுக்கும் இரண்யாட்சனுக்கும் ஒப்பிட்டுப் பேசுவார்கள். இன்னும் சிலர் 'சுந்தோப சுந்தர்கள்' என்பார்கள். இராமரையும் பரதரையும் ஒத்த அருமைச் சகோதரர்கள் என்றும், வீமனையும் அருச்சுனனையும் ஒத்த வீரச் சகோதரர்கள் என்றும் கூறுவோரும் உண்டு.

ஆனால் இன்றைக்குப் பெரிய பழுவேட்டரையர் தஞ்சைக் கோட்டைக்குள் பிரவேசித்த போது அவருடன் வந்த பரிவாரங்கள் வழக்கமான முழக்கங்களைச் செய்த போதிலும், வீதிகளில் குதூகல ஆரவாரம் இல்லை. ஜனக் கூட்டமும் அதிகமில்லை. சின்னப் பழு


வாழ்க்கையை இனிமையாக்குவது காட்பரிஸ்!
Cadbury's
MILK
CHOCOLATE
இனிப்பிலே இன்பம். பகிர்ந்து
கொண்டு நீங்கள் மகிழ விரும்பும்
நல்லின்பம். அதுதான் காட்பரிஸ்
மில்க் சாக்கலேட்டு தரும் பேரின்பம்.
ஆம். காட்பரிஸ் சுவையென்றால்
குணச் சிறப்பின் சுவை, தர மேன்மை
யின் சுவை, தர மேன்மையின் சுவை,
பரிசுத்தமே உருவான பாலின் தூய்மைச்
சுவை. இக் கணமே மென்று பாருங்கள்
ஒரு சாக்கலேட்டு...இனிமை, இனிமை,
எல்லாம் இனிமை!
ஒவ்வொரு சாக்கலேட்டும்
பாலின் குணங்கள்
அடங்கியுள்ளது!

வேட்டரையர் கோட்டை வாசலுக்கு அண்ணனை வரவேற்பதற்காக வந்து காத்திருக்கவும் இல்லை.

ஆனால் தனாதிகாரி இதைப் பொருட்படுத்தாமல் நேரே தம்பியின் மாளிகையை நோக்கிச் சென்றார். ஏதோ ஒரு முக்கியமான காரியத்தில் இளையவன் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று அவர் எண்ணினார். ஒருவேளை சக்கரவர்த்தியின் உடல்நிலை ரொம்பக் கேவலமாகி விட்டதோ, அல்லது.... அல்லது, 'பெரிய காரியம்'தான் நடந்துவிட்டதோ என்ற ஐயம் உண்டாயிற்று. ஆகையால், வழக்கத்தைவிடத் துரிதமாகவே அவருடைய பரிவார ஊர்வலம் சென்று கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையரின் மாளிகையை அடைந்தது.

மாளிகை வாசலுக்குத் தமையனை வரவேற்க வந்த தளபதியின் முகத்தில் பரபரப்பும் கவலையும் காணப்பட்டன. தமையனுக்கு வணக்கம் செலுத்திப் பிறகு மார்புறத் தழுவிக் கொண்டார். இருவரும் மாளிகைக்குள் சென்றார்கள். நேரே அந்தரங்க மந்திராலோசனை மண்டபத்துக்குள் பிரவேசித்தார்கள்.

இருவரும் தனிப்பட்டதும், ''தம்பி! காலாந்தகா! என்ன ஒரு மாதிரி இருக்கிறாய்? ஏதாவது விசேஷம் உண்டா? சக்கரவர்த்தி சுகமா?'' என்று தமையனார் கேட்டார்.

சின்னப் பழுவேட்டரையராகிய காலாந்தக கண்டர், ''சக்கரவர்த்தி எப்போதும் போல் இருக்கிறார். அவரது சுகத்தில் அபிவிருத்தியும் இல்லை; சீர்கேடும் இல்லை!'' என்றார்.

''பின் ஏன் வாட்டம் அடைந்திருக்கிறது உன் முகம்? ஏன் கோட்டை வாசலுக்கு வரவில்லை? ஊரும் ஒரு மாதிரி சலசலப்புக் குறைந்திருக்கிறதே!'' என்று பெரியவர் கேட்டார்.

''அண்ணா! ஒரு சிறு சம்பவம் நடந்திருக்கிறது. பிரமாதம் ஒன்றும் இல்லை. அதைப் பற்றிப் பிற்பாடு சொல்கிறேன். தாங்கள் போன காரியங்களெல்லாம் எப்படி?'' என்று காலாந்தக கண்டர் கேட்டார்.

''நான் சென்றிருந்த காரியம் பூரண வெற்றிதான். அழைத்திருந்தவர்கள் அவ்வளவு பேரும் கடம்பூருக்கு வந்திருந்தார்கள். எல்லாரும் ஒருமுகமாக உன் மருமகன் மதுராந்தகனை அடுத்த பட்டத்துக்கு உரியவன் என்று ஒப்புக் கொண்டார்கள். ஜயகோஷத்துடன் ஆமோதித்தார்கள். நியாயத்துக்குக் கட்டுப்பட வில்லையென்றால், கத்தி எடுத்துப் போர் செய்து உரிமையை நிலைநாட்டவும் அவ்வளவு பேரும் சித்தமாயிருக்கிறார்கள். கொல்லி மழவனும், வணங்காமுடி முனையரையனும்கூட ஒப்புக் கொண்டார்கள் என்றால், நம்முடைய நோக்கம் நிறைவேறுவதற்குத் தடை என்ன? சம்புவரையர் தம் கோட்டை, கொத்தளம், படை, செல்வம் எல்லாவற்றையும் ஈடுபடுத்தச் சித்தமாயிருக்கிறார். அவருடைய மகன் கந்தமாறன் மிகத் தீவிரமாயிருக்கிறான். நடுநாட்டையும், திருமுனைப்பாடி நாட்டையும் பற்றிக் கவலையேயில்லை. சோழ தேசந்தான் எப்போதும் நம் கையில் இருக்கிறது. வேறு என்ன யோசனை? திருக்கோவலூர் மலையமான், பல்லவன் பார்த்திபேந்திரன், கொடும்பாளூர் வேளான் இந்த மூன்று பேருந்தான் ஒருவேளை எதிர்க்கக் கூடும். அவர்களில் கொடும்பாளூரான் இங்கில்லை; இலங்கையில் இருக்கிறான். மற்ற இருவரானாலும் என்ன புரட்டிவிட முடியும்? கூடிய சீக்கிரத்தில் சக்கரவர்த்தியிடம் சொல்லி உடனே முடிவுசெய்துவிட வேண்டியதுதான்!'' என்றார் பெரிய பழுவேட்டரையர்.

''தலைவர்களைப் பற்றித் தாங்கள் சொல்வதெல்லாம் சரி; ஜனங்கள்? ஜனங்கள் ஆட்சேபித்தால்?'' என்று கேட்டார் காலாந்தக கண்டர்.

''ஆகா! ஜனங்களை யார் கேட்கப் போகிறார்கள்? ஜனங்களைக் கேட்டுக் கொண்டா இராஜ்ய காரியங்கள் நடக்கின்றன? ஜனங்கள் ஆட்சேபிக்கத் துணிந்தால், மறுபடியும் அவர்கள் இம்மாதிரி காரியங்களில் பிரவேசிக்காதபடி செய்துவிட வேண்டும். அப்படி ஒன்றும் நேரும் என நான் நினைக்கவில்லை. சக்கரவர்த்தியின் விருப்பம் என்றால் பேசாமல் அடங்கிவிடுவார்கள். மேலும், அருள்மொழிவர்மன் நல்லவேளையாக இலங்கையில் இருக்கிறான். அவன் இருந்தாலும் ஒருவேளை ஜனங்கள் தங்கள் குருட்டு அபிமானத்தைக் காட்ட முயல்வார்கள். ஆதித்த கரிகாலன் மீது ஜனங்கள் அவ்வளவு பிரேமை கொண்டிருக்கவில்லை. மதுராந்தகன் மீது அவர்களுடைய அபிமானத்தைத் திருப்புவது சுலபம். 'சிவ பக்தன்' 'உத்தம குணம் படைத்தவன்' என்று ஏற்கெனவே பெயர் வாங்கியிருக்கிறான். சுந்தர சோழரின் புதல்வர்கள் இருவரைக் காட்டிலும் உன் மருமகனுடைய முகத்தில் களை அதிகம் என்பதுதான் உனக்குத் தெரியுமே? 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்று கருதும் முட்டாள்

ஜனங்கள் 'மதுராந்தக சக்கரவர்த்தி வாழ்க' என்று கோஷிக்காவிட்டால் தான் ஆச்சரியமாயிருக்கும். எப்படியிருந்தாலும் நான் ஒருவன் இருக்கும் போது உனக்கு என்ன கவலை....?''

''ஆனால் வேளக்காரப் படை இருக்கிறதே? அவர்களை எப்படிச் சமாளிப்பது?''

''வேளக்காரப் படையார் சுந்தர சோழருக்குத்தான் உயிர்ப்பலி விரதம் எடுத்தவர்களே தவிர, அவருடைய பிள்ளைகளுக்கு அல்லவே? அப்படி அவர்கள் குறுக்கிட்டாலும் உன்னுடைய கோட்டைக் காவல் படை எங்கே போயிற்று? ஒரு நாழிகைப் போதில் அவ்வளவு பேரையும் பிடித்துப் பாதாளச் சிறையில் தள்ள வேண்டியதுதானே?''

''அண்ணா! முக்கியமான எதிர்ப்பு பழையாறையிலிருந்துதான் வரும். அந்தக் கிழவியும் குமரியும் சேர்ந்து என்ன சூழ்ச்சி செய்வார்களோ, தெரியாது. அதைத்தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்....''

''தம்பி! காலாந்தகா! போயும் போயும் இரண்டு பெண் பிள்ளைகளுக்கா என்னைப் பயப்படச் சொல்லுகிறாய்? அவர்களுடைய தந்திர மந்திரத்துக்கெல்லாம் மாற்று என்னிடம் இருக்கிறது. கவலைப்படாதே!''

''இரண்டு பிள்ளைகளையும் தஞ்சைக்கு வரும்படி அழைப்பு அனுப்ப வேண்டும் என்று சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார்....''

''ஆதித்த கரிகாலன் வரமாட்டான். ஒருவேளை அருள்மொழி தந்தை கட்டளைப்படி புறப்பட்டு வருவான். வந்தால், அவனைத் தடுக்க வேண்டியதுதான்! மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிச் சிம்மாசனத்தில் சகல அதிகாரங்களுடன் ஏற்றிய பிறகுதான் அவர்கள் இருவரும் வந்தால் வரலாம். அதற்கு முன் வரக்கூடாது. இதை என்னிடம் விட்டுவிடு! மற்றப்படி நீ என்னமோ சிறிய விசேஷம் இங்கே நடந்ததாகச் சொன்னாயே, அது என்ன?''

''காஞ்சியிலிருந்து வாலிபன் ஒருவன் வந்தான். சக்கரவர்த்திக்கு ஒரு ஓலையும் குந்தவைக்கு ஒரு ஓலையும் கொண்டு வந்தான்....''

''அவனை என்ன செய்தாய்? ஓலைகளைப் பிடுங்கிக் கொண்டு அவனைச் சிறைப்படுத்தியிருக்கிறாய் அல்லவா?''

''இல்லை, அண்ணா! கடம்பூரில் தங்களைப் பார்த்ததாகவும், சக்கரவர்த்தியிடம் நேரில் கொடுக்கச் சொன்னதாகவும் கூறினான். அது உண்மையா?''

''ஆகா! வெறும் பொய்! கடம்பூரில் அழையாத வாலிபன் ஒருவன்—கந்தமாறனின் சிநேகிதன் என்று சொல்லிக் கொண்டு வந்திருந்தான். ஆனால் ஓலை கொண்டு வந்திருப்பதாக என்னிடம் சொல்லவே இல்லையே! அவன் முகத்தைப் பார்த்ததுமே சந்தேகித்தேன். அவனிடம் நீ ஏமாந்து போய் விட்டாயா, என்ன?''

''ஆம், அண்ணா! ஏமாந்துதான் போய்விட்டேன். தங்கள் பெயரைச் சொன்னதால் ஏமாந்தேன்.''

''அட மூடா! ஏமாந்து என்ன செய்தாய்? ஓலையைச் சக்கரவர்த்தியிடம் கொடுத்துவிட்டாயா? அதைப் பார்க்கக்கூட இல்லையா?''

''பார்த்தேன். அதில் ஒன்றுமில்லை. காஞ்சி பொன் மாளிகைக்கு வரும்படிதான் எழுதியிருந்தது. ஓலையைக் கொடுத்து விட்டு அந்த வாலிபன்



ஏதோ 'அபாயம்' என்று சொல்லிக் கொண்டிருந்தான்....''

''பிறகாவது, சந்தேகித்துச் சிறைப்படுத்தவில்லையா?''

''சந்தேகித்தேன்; ஆனால் சிறைப்படுத்தவில்லை!''

''பின்னே, என்ன செய்தாய்?''

''ஊர் பார்க்க வேண்டும் என்றான். பார்த்து விட்டு வரட்டும் என்று இரண்டு ஆளையும் பின்னோடு அனுப்பினேன். அவர்களை ஏமாற்றி விட்டு மறைந்து விட்டான். அவனைத் தேடுவதற்குத்தான் ஏற்பாடு செய்து கொண்டிருந்தேன். அதனால்தான் கோட்டை வாசலுக்குக்கூட வரவில்லை! நகர மக்களுக்கும் எச்சரிக்கை செய்திருக்கிறேன்....''

''அட சீ! நீயும் ஒரு மனிதனா? மீசை முளைக்காத ஒரு சிறு பிள்ளையிடமா ஏமாந்து போனாய்? உனக்குக் காலாந்தக கண்டன் என்று பெயர் வைத்தேனே, என் முட்டாள்தனத்தை நொந்து கொள்ள வேண்டும். உன்னைக் கோட்டைத் தளபதியாக்கி

னேனே? எனக்கு இது வேண்டியது தான்! என் பெயரைச் சொல்லி ஒரு தறிதலைப் பயல் உன்னை ஏமாற்றிவிட்டான் என்று சொல்லிக் கொள்ள வெட்கமாயில்லையா?''

''வெறுமனே உங்கள் பெயரைச் சொன்னதோடு இல்லை. உங்கள் முத்திரை மோதிரத்தையும் காட்டினான். அதை அவனுக்கு நீங்கள் கொடுத்தீர்களா?''

''இல்லவே இல்லை! அப்படியெல்லாம் செய்ய நான் உன்னைப் போல் ஏமாளியா?''

''அவனிடம் முத்திரை மோதிரம் இருந்தது உண்மை. என்னிடமும் காட்டினான். கோட்டை வாசல் காவலர்களிடமும் காட்டி விட்டுத்தான் உள்ளே புகுந்தான். நீங்கள் கொடுத்திராவிட்டால், இன்னும் ஒரே ஒரு இடத்திலிருந்துதான் அதை அவன் பெற்றிருக்க முடியும்.''

''யாரைச் சொல்கிறாய்?''


''தங்களால் ஊகிக்க முடியவில்லையா? இளைய ராணியைத்தான் சொல்கிறேன்....''

''சீச்சீ! ஜாக்கிரதை! நாக்கை அறுத்து விடுவேன்!''

''நாக்கை அறுத்தாலும் அறுங்கள்; தலையைக் கொய்தாலும் கொய்யுங்கள். வெகு நாளாய்ச் சொல்ல விரும்பியதை இப்போது சொல்லி விடுகிறேன். விஷ நாகத்தை அழகாயிருக்கிறது என்று எண்ணி வீட்டில் கொண்டு வைத்து வளர்க்கிறீர்கள். அது ஒரு நாள் கடிக்கத்தான் போகிறது. நம் எல்லாரையும் நாசம் செய்யப் போகிறது! வேண்டாம்! அவளைத் துரத்திவிட்டு மறு காரியம் பாருங்கள்!''

''காலாந்தக கண்டா! வெகுநாளாக உனக்குச் சொல்ல எண்ணியிருந்த ஒரு விஷயத்தை நானும் உனக்கு இன்று சொல்லுகிறேன். வேறு எந்தக் காரியத்தைப் பற்றி வேண்டுமானாலும் உன் அபிப்பிராயத்தை நீ தாராளமாய்ச் சொல்லலாம். என் காரியம் பிடிக்காவிட்டால் தைரியமாகக் கண்டித்துப் பேசலாம். ஆனால் நான் கைப் பிடித்து மணந்து கொண்டவளைப் பற்றிக் குறைவாக இனி எப்போதேனும் ஒரு வார்த்தை சொன்னாலும் சரி; உன்னை வளர்த்த இதே கையினால் உன்னைக் கொன்றுவிடுவேன். உனக்குக் கத்தி பிடிக்கச் சொல்லிக் கொடுத்த நான் உன் கத்தியைப் பிடுங்கியே உன்னை வெட்டிக் கொல்லுவேன்! ஜாக்கிரதை!''

அந்த இரு சகோதரர்களும் அப்போது போட்டுக் கொண்ட ஆத்திரச் சொற்போர் சிங்கமும் சிங்கமும் மோதிப் பயங்கரமான சண்டை பிடிப்பது போலவே இருந்தது. அவர்களுடைய குரலும் சிம்ம கர்ஜனையைப் போலவே முழங்கிற்று. அவர்கள் பேசியது அந்தரங்க மந்திராலோசனை மண்டபத்தில்தான் என்றாலும், வெளியில் காத்திருந்தவர்களுக்கெல்லாம் அவர்களுடைய குரல் விவரம் இன்னதென்று தெரியாமல் இடி முழக்கம் போல் கேட்டது. அனைவரும் 'என்ன விபரீதமோ' என்று நடுங்கிக் கொண்டிருந்தார்கள். **(தொடரும்)**



## பட், பட்! கட், கட்!

சாலைகளில் கார், ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள், பஸ் முதலியவற்றை விரைவாக ஓட்டிச் செல்பவர்கள் சுற்றுப்புறங்களைப் பற்றிச் சிறிதும் கவலையின்றிப் பேரிரைச்சலுடன் தங்கள் ஊர்திகளைச் செலுத்திக் கொண்டு போவதைப் பார்க்கிறோம். சாலைகளில் இப்படிப் பேரிரைச்சலைக் கிளப்புவது மேற்கு ஜெர்மனியில் சட்டத்துக்குப் புறம்பானதாகக் கருதப் படுகிறது. குறிப்பாக மோட்டார் சைக்கிள் தானே இப்படிச் சத்தம் போட்டுக் கொண்டு போகிறது. எனவே அவை அதிக சப்தம் எழுப்பாதவைகளாக இருக்கின்றனவா என்று மேற்கு ஜெர்மனியின் போக்குவரத்து அதிகாரிகள் அடிக்கடி பரிசோதிக்கிறார்கள்.

-(யூ.பி.எஸ்.)

# மகாபாரதம்

## ராஜாஜி

தும் சொல்லி வருகிருயே, எனக்கு மிகவும் துக்கம் உண்டாகிறது. எந்த உபாயம் செய்து நம்மவர்கள் ஜெயிக்கப் போகிருர்கள்? எனக்குத் தாங்க முடியாத பயமாக இருக்கிறதே? முயற்சியைக் காட்டிலும் விதியே பெரிது போலிருக்கிறது'' என்ருன்.

அதைக் கேட்ட சஞ்சயன் ''அரசே! இந்த அநியாயம் உம்முடைய காரியமே அல்லவா? மனக் கலக்கமடையாமல் உறுதியான மனத்துடன் நிகழ்ச்சிகளைக் கேட்க வேண்டும்'' என்ருன்.

''விதுரனுடைய வாக்கியங்கள் நிச்சயமாகி வருகின்றன'' என்று திருதராஷ்டிர மகாராஜா சொல்லிக் கொண்டு பெருந் துயரில் மூழ்கினன்.

பீமன் வில்லை வளைத்துத் துரியோதனன்மேல் பல அம்புகள் செலுத்தினன். துரியோதனனுக்குக் கவசம் இல்லையேல் மாண்டிருப்பான். அன்று பீமன் துரியோதனனுடைய தம்பிகள் எண்மரை வதம் செய்தான். துரியோதனனும் பல பாணங்களை பீமன்பேரில் செலுத்தினன். பீமன் பிடித்திருந்த வில்லை துரியோதனன் ஒரு அம்பைச் செலுத்தி ஒடித்தான். உடனே பீமன் வேருெரு வில்லை எடுத்து அதில் கத்தியைப் போன்ற அம்பைத் தொடுத்து துரியோதனனுடைய வில் அறுபட்டுக் கீழே விழுமாறு செய்தான். துரியோதனனும் வேருெரு வில்லை எடுத்துக் கோரமான ஒரு பாணத்தைத் தொடுத்து நன்ருகக் குறிபார்த்துப் பீமனை நடு மார்பில் அடித்தான். அதன் வேகத்தால் பீமன், மூர்ச்சை அடைந்து உட்கார்ந்தான்.

இதைப் பார்த்த பாண்டவ வீரர்களான அபிமன்யு முதலானவர்கள் துரியோதனன் மேல் சரமாரி பொழிந்தார்கள். தகப்பனரின் நிலைமையைக் கண்டு கடோத்கஜனுக்குக் கோபம் மேலிட்டுப் பெரும் போர் தொடங்கினன். அந்தப் போரைக் கௌரவப் படையினல் தாங்க முடியவில்லை.

அதைப் பார்த்து பீஷ்மர், ''இந்த அரக்கனேடு இன்று நான் யுத்தம்செய்ய முடியாது. நம்முடைய சேனை களைத்துப்போயிருக்கிறது. அஸ்தமன காலமும் ஆயிற்று. அரக்கனுக்கோ இருட்டே பலம் தரும். நாளைய தினம் பார்ப்போம்'' என்று துரோணருக்குச் சொல்லிவிட்டுச் சேனையைத் திருப்பினர். துரியோதனன் தன் சகோதரர்களில் பலரை இழந்த துக்கத்தால் பீடிக்கப்பட்டுக் கண்ணில் நீர் ததும்பப் பாசறையில் உட்கார்ந்து ஆழ்ந்து சிந்திக்கலானன்.

போரில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் சஞ்சயன் அவ்வப்போது சொல்லக் கேட்டுக் கொண்டிருந்த திருதராஷ்டிரன், ''அப்பா சஞ்சயா! என்னைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டார்கள். துன்பப்பட்டார்கள் என்றே எப்போதும் சொல்லி வருகிருயே, எனக்கு மிகவும் துக்கம் உண்டாகிறது.

## 69. ஐந்தாம் நாள்

யுத்தகளத்தில் அவ்வப்போது நடைபெற்றவைகளையெல்லாம் சஞ்சயன் கண்ணில்லாத கிழ அரசனுக்குச் சொல்லி வரும்போது துக்கத்தைத் தாங்க முடியாமல் அவன் பிரலாபிப்பான்.

''கைகளால் நீந்தி ஒருவன் கடலைத் தாண்டி அக்கரையை அடைய முடியாததைப் போல இந்தப் பெருந் துக்கத்தின் அக்கரையை நான் காணப் போவதில்லை. என் புத்திரர்கள் அனைவரையும் பீமன் கொல்லப் போகிருன். அவர்களைக் காப்பாற்றக் கூடிய வீரன் நம்முடைய சேனையில் யாரும் இருப்பதாக நான் எண்ணவில்லை. யுத்தத்தில் நம்முடைய சேனை பயந்து ஓடியதைப் பீஷ்மரும் துரோணரும் கிருபரும் அசுவத்தாமனும் சும்மா பார்த்துக் கொண்டிருந்தார்களா? அவர்கள் என் மக்களுக்கு என்ன உதவி எப்போது செய்யப்போவதாக எண்ணி யிருக்கிருர்கள்? என் புத்திரர்கள் எவ்வாறு மிஞ்சப் போகிருர்கள்?'' என்று சொல்லிக் கிழவன் அழுதான்.

''அரசனே! சாவதானமாக இருக்க வேண்டும். பாண்டவர்கள் தர்ம மார்க்கத்தில் செல்லுகிருர்கள், ஆனபடியால் யுத்தத்தில் வெற்றி பெறுகிருர்கள். உம்முடைய புத்திரர்கள் வீரர்களாயினும் கெட்ட எண்ணமுடையவர்கள். ஆனபடியால் க்ஷீணதசை அடைகிருர்கள். அவர்கள் பாண்டவர்களுக்கு அநேக அபகாரங்கள் செய்திருக்கிருர்கள். அந்தச் செயல்களின் பயனை இப்போது அனுபவிக்



கிறார்கள். பாண்டவர்கள் மந்திரமாவது மாயமாவது ஒன்றும் செய்யவில்லை. க்ஷத்திரியர்கள் யுத்தம் செய்கிற முறையில்தான் செய்து வருகிறார்கள். நியாய வழியில் சென்றபடியால் பலம் பெற்றிருக்கிறார்கள். மித்திரர்கள் சொன்னதை நீர் கேட்கவில்லை. விதுரரும் பீஷ்மரும் நானும் தடுத்தபோது உம்முடைய வழியிலேயே சென்றீர். நோயாளி மருந்தைச் சாப்பிட மாட்டேன் என்று மூர்க்கமாக நடந்து கொள்வதைப் போல நீர் மகனுடைய அபிப்பிராயத்துக்கு இணங்கிக் குலத்துக்குப் பத்தியமான சொல்லை ஏற்றுக் கொள்ளவில்லை. இப்போது தவிக்கிறீர். துரியோதனனும் நான்காம் நாள் இரவில் உம்மைப் போலவே பீஷ்மரைக் கேட்டான். அவர் சொன்னதைக் கேளும்'' என்று கதையைச் சொல்ல ஆரம்பித்தான் சஞ்சயன்.

**நா**ன்காம் நாள் யுத்தம் முடிந்தபின் இரவில் பிதாமகரிடம் தனியாகச் சென்று துரியோதனன், ''நீரும் துரோணரும், கிருபரும், அசுவத்தாமாவும், கிருதவர்மாவும், சுதக்ஷணனும், பூரிசிரவசும், விகர்ணனும், பகதத்தனும் யமனுக்குப் பயந்தவர்கள் அல்லவென்று உலகத்துக்கெல்லாம் தெரியும். உங்களுடைய வல்லமைக்கு வரம்பே இல்லை என்பதில் சந்தேகமில்லை. பாண்டவர்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் உங்களில் ஒருவரை வெல்ல முடியாது. இப்படி இருந்தும் குந்திபுத்திரர் நம்மைத்

தினமும் தோற்கடித்து வருவதன் ரகசியம் என்ன?'' என்று வணக்கமாகக் கேட்டான்.

பீஷ்மர், ''ராஜனே! நான் சொல்வதைக் கேள். பலவிதத்தில் உனக்கு நான் இதத்தைச் சொன்னேன். நீ பெரியோர் சொன்னதைச் செய்யவில்லை. பாண்டவர்களிடம் நீ சமாதானமாகப் போவதே நலம். அவ்வாறு செய்வது உனக்கும் உலகத்துக்கும் நல்லது. ஒரே குலத்தைச் சேர்ந்த நீங்கள் இந்த ராஜ்யத்தைச் சுகமாக அனுபவிக்கலாம். இவ்வாறு நான் உனக்கு முன்னமே கூறியதை நீ கேட்கவில்லை. பாண்டவர்களை அவமதித்தாய். அதன் பயனை அடைகிறாய். ஸ்ரீ கிருஷ்ணனாலே காக்கப்பட்டிருக்கும் பாண்டவர்கள் வெற்றியடைவதில் சந்தேகமில்லை. இப்போதும் சமாதானமாகப் போகலாம். பலசாலிகளான சகோதரர்களைச் சிநேகம் செய்து கொண்டு பூமியை அனுபவிக்கலாம். நர, நாராயணர்களாகிய தனஞ்சயனையும் கிருஷ்ணனையும் அவமதித்தாயானால் நீ நாசமடைவாய்!'' என்றார்.

துரியோதனன் விடை பெற்றுக் கொண்டு தன் இருப்பிடம் சென்று படுக்கையில் படுத்தான். ஆனால் தூக்கம் வரவில்லை.

மறுநாள் பொழுது விடிந்தவுடன் பழையபடி இரண்டு படைகளும் யுத்தத்துக்கு நின்றன. பீஷ்மர் கௌரவ சேனையைப் பலமாக வியூகப்படுத்தினார். பாண்டவ சேனையும் யுதிஷ்டிரனால் நன்றாக வியூகப்படுத்தப்பட்டிருந்தது. பீமசேனன் வழக்கம் போல் முன்னணியில் நின்றான். சிகண்டியும், திருஷ்டத்யும்னனும் சாத்யகியும் அடுத்தாற்போல சேனையைக் காத்து நின்றார்கள். மற்ற வீரர்கள் அதற்குப் பின்புறமாக நின்றார்கள். அனைவருக்கும் பின் தருமபுத்திரனும் நகுல சகாதேவர்களும் இருந்தார்கள்.

பீஷ்மர் வில்லை வளைத்து அஸ்திரங்களைவிட ஆரம்பித்தார். வெகு சீக்கிரம் பாண்டவ சேனையைக் கவலை அடையச் செய்தார். சேனை சிதறுவதைப் பார்த்த தனஞ்சயன் பீஷ்மரைப் பல அம்புகளால் துன்புறுத்தினான்.

துரியோதனன் தன் வழக்கம்போல் துரோணரிடம் சென்று தாக்கிப் பேசிக் கோபமூட்டினான். அவர் ''மூர்க்கனே! பாண்டவர்களுடைய பராக்கிரமத்தை அறியாமல் நீ பேசுகிறாய். ஆயினும் என்னால் வஞ்சனை இல்லை'' என்று சொல்லிப் பாண்டவ சேனையைப் பலமாகத் தாக்கினார். சாத்யகிக்கும் துரோணருக்கும் பயங்கரமான யுத்தம் நடந்தது. சாத்யகி துரோணருடைய தாக்குதலைத் தாங்க முடியாமல் இருந்ததைக் கண்டு பீமசேனன் துரோணரைத் தாக்கினான்.

அதன்மேல் யுத்தம் இன்னும் அதிக வேகம் கொண்டது. துரோணரும் பீஷ்மரும் சல்லியனும் சேர்ந்து பீமனை எதிர்த்தார்கள். அச்சமயம் சிகண்டி பீஷ்மர் பேரிலும் துரோணர் பேரிலும் அம்புமாரி பொழிந்தான். சிகண்டி நுழைந்ததும் பீஷ்மர் விலகிச் சென்றார். சிகண்டி ஆண் பிறப்பல்ல என்றும், பெண்ணாகப் பிறந்து வளர்ந்தவன் என்றும், க்ஷத்திரியனுக்குப் பெண்ணோடு போர் புரிவது அதருமம் என்றும் பீஷ்மருடைய கொள்கை. இதுவே கடைசியில் பிதாமகருடைய மரணத்துக்குக் காரணமாகும் என்று விதிக்கப்பட்டிருந்தது.

பீஷ்மர் விலகியதைப் பார்த்துத் துரோணர் சிகண்டியை எதிர்த்தார். மகாரதனான சிகண்டியினால் துரோணருடைய எதிர்ப்பைத் தாங்க முடியவில்லை; எனவே பின் திரும்பினான்.

முற்பகல் முழுவதும் கோரமான சங்குல யுத்தம் நடந்தது. சேனை முழுவதும் கைகலந்து இரு பக்கத்திலும், வரம்பற்ற கொலை நடந்தது. பிற்பகலில் துரியோதனன் சாத்யகியை எதிர்க்கப் பெரும் படையை அனுப்பினான். சாத்யகி அந்தப் படையை முற்றிலும் நாசம் செய்துவிட்டு பூரிசிரவஸைத் தேடி எதிர்த்தான். அவனோ மகா பராக்கிரமசாலி. சாத்யகியின் படையைத் தாக்கி அவர்கள் அனைவரும் புறங்காட்டி ஓட்டம் பிடிக்கச் செய்தான். சாத்யகி ஒருவனே நின்றான். சாத்யகியின் நிலைமையைப் பார்த்த அவனுடைய பத்துக் குமாரர்களும் வந்து பூரிசிரவஸைத் தாக்கினார்கள்.

ஒன்று கூடி வந்த அந்தப் பத்து வீரர்களையும் பூரிசிரவசு ஒருவனே எதிர்த்துப் போர் புரிந்தான். பத்துப் பேரும் அவனைச் சூழ்ந்து கொண்டு சரமாரி பொழிந்தார்கள். ஆயினும் அவன் அவர்களுடைய விற்களைத் தன் அம்புகளால் சேதித்து அவர்கள் பதின்மரையும் யமாலயம் அனுப்பினான். சாத்யகியின் பத்துக் குமாரர்களும் இடி விழுந்த மரங்களைப் போல் யுத்தகளத்தில் வீழ்ந்தார்கள். தன் புத்திரர்கள் கொன்று வீழ்த்தப்பட்டதைக் கண்ட சாத்யகி சோகமும் கோபமும் மேலிட்டு பூரிசிரவஸின் மேல் பாய்ந்தான். இருவருடைய ரதங்களும் உடைந்து நாசமாயின. அதன் பின் கத்தியும் கேடயமுமாக தரையில் நின்று இருவரும் ஒருவரையொருவர்

எதிர்த்தார்கள். அந்தச் சமயம் பீமசேனன் அவ்விடம் வந்து சாத்யகியின் முன் நின்று யுத்தத்தைத் தடுத்து அவனைத் தன் தேரில் ஏற்றிக்கொண்டு போய்விட்டான். கத்திச் சண்டையில் யாரும் பூரிசிரவசை ஜெயிக்க முடியாது என்று பீமனுக்குத் தெரியும். ஆகையால் இவ்வாறு சாத்யகியைத் தடுத்தான்.

அன்று மாலை ஆயிரக்கணக்கான வீரர்கள் அர்ச்சுனனால் வதம் செய்யப்பட்டார்கள். பார்த்தனை எதிர்த்துக் கொல்லுவதற்காகத் துரியோதனன், அனுப்பிய படைவீரர்கள் அவ்வளவு பேரும் நெருப்பில் பூச்சிகள் விழ்ந்து சாவது போல் மாண்டார்கள். பாண்டவர்களின் சேனையில் இருந்த அரசர்கள் தனஞ்சயனைச் சூழ்ந்து கொண்டு ஜெய கோஷம் செய்தார்கள். அச்சமயம் சூரியன் மறைந்தான். பீஷ்மரின் கட்டளைப்படி களைப்புற்ற குதிரைகளும் யானைகளுமாக எல்லோரும் யுத்த பூமியை விட்டுச் சென்றார்கள்.

## 70. ஆறாம் நாள் யுத்தம்

யுதிஷ்டிரன் கட்டளைப்படி அடுத்த நாள் திருஷ்டத்யும்னன் பாண்டவ சேனையை மகர வியூகமாக அணி வகுத்தான். கௌரவப் படை கிரௌஞ்ச வியூகத்தில் அமைக்கப்பட்டு நின்றது. சேனா வியூகங்களுக்குப் பட்சி, பிராணிகளின் பெயர்களைக் கொடுத்து வந்தார்கள். தேகப் பயிற்சி முறையில் செய்து வரும் ஆசனங்களுக்கு இவ்வாறு பிராணிகளின் பெயர்களை வைத்துச் சொல்வது அனைவருக்கும் தெரிந்த விஷயம். படைகளின் அணிவகுப்புக்கும் அவ்வாறே பெயர்களைக் கொடுத்து வந்தார்கள். படைகளின் பரப்பமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும், எந்த எந்தப் படைப் பகுதிகள் எந்த எந்த இடத்தில் நின்று, யார் யார் எந்த ஸ்தானங்களில் தலைமை வகிக்க வேண்டும் என்றெல்லாம் நிச்சயித்துக் காப்புக்கும்,—தாக்குதலுக்கும் ஒழுங்காக ஏற்பாடுகள் செய்து வருவதே வியூகம். வியூகத்தின் வெளித் தோற்றம் மீன், பருந்து முதலிய பிராணிகளின் தேகத்துக்கு ஒப்புவமை கண்டு பெயரிட்டனர். அக்காலத்து யுத்த சாஸ்திரத்தில் பல வியூகங்கள் கண்டிருந்தன.

ஒவ்வொரு நாளும் பாரதப் போரில் அன்று எந்த நோக்கத்துடன் விசேஷமாகக் காரியங்கள் நிறைவேற்ற வேண்டும்; எந்தப் போக்கில் நிகழ்ச்சிகள் நடைபெறும் என்பதை யெல்லாம் உத்தேசித்து அதற்குத் தக்கவாறு வியூக வேறுபாடுகளைச் சேனாபதிகள் தேர்ந்தெடுத்து நிச்சயித்து வந்தார்கள்.

ஆறாவது நாள் யுத்தத்தில் காலையிலேயே ஆள் சேதம் பெரிய அளவில் நடக்க ஆரம்பித்தது.

துரோணருடைய சாரதி கொல்லப்பட்டான். சாரதியற்ற தேரைத் துரோணர் தாமே கடிவாளம் பிடித்து நடத்திப் பஞ்சுக் குவியலை நெருப்பு எரிப்பது போல் பாண்டவ சேனையை நாசம் செய்தார்.

சீக்கிரத்திலேயே இரண்டு வியூகங்களும் உடைந்து போயின. அதன் மேல் இரண்டு பக்கத்துச் சேனைகளும் வரம்பின்றிக் கைகலந்து கோரமாகப் போர் புரிந்தன. ரத்தம் ஆறாகப் பெருகிற்று. களம் முழுவதும் உயிர் நீத்த படைவீரர்களும் யானைகளும் குதிரைகளும் உடைந்த தேர்களுமாகக் குவிந்தன.

பீமசேனன் பகைவர்களின் சேனைக்குள் புகுந்து துரியோதனனுடைய சகோதரர்களைக் கண்டுபிடித்து வீழ்த்த வேண்டுமென்று தேடிச் சென்றான். அவர்களும் வெகு சீக்கிரமே அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். துச்சாதனன், துர்விஷஹன், துர்மதன், ஜயன், ஜயத்சேனன், விகர்ணன், சித்திரசேனன், சுதர்சனன், சாருசித்திரன், சுவர்மன், துஷ்கர்ணன் முதலிய பலர் பீமசேனனைச் சுற்றிக் கொண்டு ஒரே சமயத்தில் தாக்கினார்கள். பயம் என்பது என்னவென்பதையே அறியாத வாயுபுத்திரன் அவ்வளவு பகைவர்களையும் ஒரே சமயத்தில் நின்று எதிர்த்தான். உயிரோடு அவனைப் பிடிக்க வேண்டுமென்பது அவர்களுடைய ஆசை. அவர்கள் அனைவரையும் கொல்ல வேண்டும் என்பது பீமனுடைய ஆசை. போர் உக்கிரமாக நடந்தது. தேவாசுர யுத்தத்தைப் போலவே இருந்தது. திடீரென்று பாண்டு புத்திரன் பொறுமை இழந்து தன்னுடைய ரதத்தை விட்டு இறங்கி கதாயுதத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, ''சாரதியே, நீ இங்கே நில். நான் முன் சென்று இந்த திருதராஷ்டிர குமாரர்கள் அனைவரையும் கொன்று முடித்துவிட்டு வருகிறேன். அதுவரையில் நீ இவ்விடத்திலேயே இரு'' என்று சாரதி விசோகனுக்குச் சொல்லிவிட்டுப் பகைவர்களின் கூட்டத்துக்குள் நுழைந்தான். குதிரைகளையும் குதிரைக்காரர்களையும் தேர்களையும் நாசமாக்கிக் கொண்டு காலதண்டத்தை எடுத்து வந்த அந்தகனைப் போல் பீமன் கௌரவ சேனைக்குள் புகுந்து திருதராஷ்டிர மக்கள் நின்ற இடம் சென்றான். **(தொடரும்)**


அழகுக்கு அழகு
செய்யும் அற்புதத்
துணிகள்
கோட்டுபோட்ட மற்றும் கட்டம்
போட்ட ஃமேன்ஸி ஷர்ட்டிங்,
வெண்ணிற மற்றும் சாயம் தேய்த்த
பாப்ளின்களும், டாப்பி
பாப்ளின்களும்.
வெண்ணிற மற்றும் சாயம் தேய்த்த
ப்ரிண்டெட் லான்கள், ப்ரிண்டெட்
வாயில்கள்.
கண்கவர் விநோக்களில் 2x2
ஃபுல் வாயில்கள்.
புட்டாக்கள் மற்றும் புடவைகள்.
ஸுபர்ஃபைன் வேஷ்டிகள்.
காபர்டின் கோட்டிங்.
SANFORIZED
ராய்ப்பூர்
தரத்தில் சிறந்த துணிவகைகள்
ராய்ப்பூர் மில்ஸ், அகமதாபாத்
LALBHAI GROUP




தயாரிப்பு:
வாண்டுமாமா

# வாத்து விற்ற ஐஸ்கிரீம்!


"ஐஸ்கிரீம்! பால் ஐஸ்! கப் ஐஸ்! சாக்கோ பார்!'' என்று கத்திக்கொண்டே ஐஸ்கிரீம் வண்டியைத் தள்ளியபடி வந்தது வாத்து.

நல்ல வெய்யில் காலம். காட்டில் உள்ள மிருகங்களெல்லாம் ஐஸ்கிரீம் வாங்கிச் சப்புக் கொட்டி ருசித்துச் சாப்பிட்டன. ஒரு மரத்துக்குப் பின்னால் நின்று எட்டிப் பார்த்த பொல்லாத நரிக்கு நாக்கிலிருந்து ஜலம் சொட்டியது. அதனிடம் ஐஸ்கிரீம் வாங்கக் காசு இல்லை. தன்னை நம்பி எந்த மிருகமும் கடன் தராது என்பதும் நரிக்குத் தெரியும். ஆனால் எல்லோரும் ஐஸ்கிரீம் சாப்பிடுவதைப் பார்த்த அதற்கு ஆசையை அடக்க முடியவில்லை. நரிக்குத் தந்திரம் பண்ணக் கற்றுத் தர வேண்டுமா? பாக்கெட்டுக்குள் கையை விட்டுப் பார்த்தது. கூர்மையான புதிய 'பிளேடு' இருந்தது. உறையைப் பிரித்து அதைப் பைக்குள் போட்டுக்கொண்டது. பிளேடை மட்டும் கையில் மறைத்துக்கொண்டு ஐஸ்கிரீம் விற்கும் வாத்திடம் சென்றது.

17




''எனக்கு ஒரு பஸ்தா கப் கொடு'' என்றது நரி. பிஸ்தா கப் தேடி எடுக்க வண்டிக்குள் குனிந்து நோக்கியது வாத்து. மற்ற மிருகங்கள் ஐஸ்கிரீமைச் சுவாரஸ்யமாகச் சுவைத்துக் கொண்டிருந்தன.



இதுதான் சமயம் என்று நரி தன் கைவரிசையைக் காட்டியது. வாத்தின் தோளிலிருந்து ஒரு துணிப் பை தொங்கிக் கொண்டிருந்தது. அதில்தான் ஐஸ் கிரீம் விற்ற காசை அது போட்டுக் கொள்ளும். கூரிய பிளேடினால் பையின் அடிப்பாகத்தைக் கிறியது நரி. வலது கரம் இந்தக் காரியத்தைச் செய்கையிலேயே இடது கரத்தைப் பைக்கு அடியில் ஏந்தியது. ஓட்டை வழியே எல்லாக் காசுகளும் அதன் உள்ளங்கையில் விழுந்தன. கலகலவென்ற சப்தம் கேட்டு வாத்து திரும்புவதற்குள் நரி இரண்டு கைகளையும் நிஜாரின் இரண்டு பைகளுக்குள்ளும் விட்டுக் கொண்டு ஒன்றும் தெரியாத சாதுவைப் போல் நின்றது. மற்ற மிருகங்கள் ஐஸ் கிரீமைச் சுவைக்கும் வேகத்தில் நடந்ததைக் கவனிக்கவேயில்லை.

வாத்து பிஸ்தா கப்பை நரியிடம் தந்துவிட்டு காசு கேட்டது. நரி தன் பணத்தை எடுத்துத் தருவதுபோல்

நிஜார் பையிலிருந்து எட்டணு எடுத்துத் தந்தது. அனுல் அதை நரி சரியாகக் கவனிக்கவில்லை. அது எட்டணுவே அல்ல; சாமி காசு! நிறைய விற்பனையாக வேண்டும் என்று பிரார்த்தித்து எட்டணு அளவுள்ள சாமி காசைப் பணப் பையில் போட்டு வைத்திருந்தது வாத்து.

சாமி காசைக் கையில் வாங்கிக் கொண்ட மறு கணம் வாத்துக்கு நரி செய்த தந்திரம் புரிந்துவிட்டது. ஆனுல் அது அப்போது கலாட்டா செய்ய விரும்பவேயில்லை. 'நான் திருடவே இல்லை' என்று நரி பொய் சொல்லும். 'ஏன் வீண் வம்பு?' என்று பேசாமலிருந்தது வாத்து.

பேராசை பிடித்த நரி, ''சாயங்காலம் என் வீட்டில் ஒரு ஐஸ்கிரீம் பார்ட்டி வைக்கப் போகிறேன். நிறைய ஐஸ்கிரீம் தேவை'' என்றது. அதனிடம்தான் இப்போது நிறையக் காசு இருந்ததே!

வாத்து மாலை ஐந்து மணிக்கு ஐஸ்கிரீமை நரிக்குத் தருவதாகச் சொல்லிச் சென்றது. நரி வீடு திரும்பி ஐந்து மணி எப்போது அடிக்கும் என்று ஆவலுடன் காத்திருந்தது.

ஒரு விநாடி நேரம்கூடத் தாமதிக்காமல் வந்து சேர்ந்தது வாத்து. கப் கப்பாக வெனிலா, பிஸ்தா, சாக்கலேட் ஐஸ்கிரீம்களை எடுத்துக் கொடுத்தது. நரி ரொம்ப ஆசையுடன் அவற்றை வாங்கிக் கொண்டு வாத்திடம், அதனிடம் திருடிய காசையே திருப்பிக் கொடுத்து அனுப்பியது.

'பார்ட்டி'யும் இல்லை, ஒன்றுமில்லை! எல்லா ஐஸ்கிரீமும் எனக்கேதான்என்று சொல்ல நரிக்கு வெட்கம். அதனுல் 'பார்ட்டி' என்று புளுகியது. இப்போது கப் கப்பாக சுவையான ஐஸ்கிரீம்களை விழுங்க ஆரம்பித்தது நரி. ''ஆகா! என்ன ருசி!'' என்று மகிழ்ந்தது.

ஆனுல் மகிழ்ச்சி நீடிக்கவில்லை. ஏன் தெரியுமா? வாத்து பாலில் 'பிளாட்டிங் பேப்பரை' ஊற வைத்து ஐஸ்கிரீம் செய்திருந்தது. இப்படி மிகக் குறைந்த செலவில் நிறைய ஐஸ்கிரீம் செய்து நரிக்குக் கொடுத்திருந்தது.

நரி, வயிற்று வலி தாங்காமல் துடித்தபடி டாக்டர் ஆந்தையாரிடம் ஓடியது. அதே சமயம் ஆந்தையாருக்கு டெலிபோன் வந்தது வாத்திடமிருந்து.

''நரி சீக்கிரமே உங்களைக் காண வரும்'' என்று சொல்லி, நடந்ததை விவரித்தது வாத்து. ''ஓகோ! சரி, சரி, நான் கவனித்துக்கொள்கிறேன்'' என்றது டாக்டர் ஆந்தை.


நரி வந்ததும், ''என்ன வயிற்று வலியா? வெய்யில் காலமோ இல்லையோ நிறைய ஐஸ்கிரீம் சாப்பிட்டிருப்பாய்! அதுதான் இப்படி வலிக்கிறது'' என்று ஊகமாய்ச் சொல்வது போல் பேசியது டாக்டர் ஆந்தை. ''இதற்கு மருந்து விளக்கெண்ணெய்தான். இந்தா சாப்பிடு!'' என்று ஒரு அவுன்ஸ் விளக்கெண்ணெயை நரியிடம் நீட்டியது.

மூக்கைப் பிடித்துக் கொண்டு கஷ்டப்பட்டு அதை விழுங்கி வைத்தது நரி.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு நரி திருந்தி இருக்கும் என்றுதானே நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை! அடுத்த நோயாளிக்கு மருந்துச் சீட்டு எழுதித் தர மேஜைமேலிருந்த பேனுவை டாக்டர் ஆந்தையார் எடுக்கப் போனபோது அது அங்கே இல்லை!

**-ஐராவதம்**

## கம்பிப் புதிர்




மேலேயுள்ள படத்தில் காட்டியபடி 16 தங்கக் கம்பிகளைக் கொண்டு செய்யப்பட்ட ஒரு சங்கிலித் தொடர் ஒரு வீட்டில் இருந்தது. ஒவ்வொரு கம்பியும் 3 பவுன் எடையுள்ளது. அதாவது 16 கம்பிகளும் சம எடையுள்ளவை. அந்த வீட்டில் இருக்கும் நான்கு சகோதரர்களுக்கும் பொதுச் சொத்து இது! கடைசி சகோதரன் மாற்றலாகி வெளியூர் போகும் நாள் வந்தது. அவன் 'எனக்குள்ள தங்கத்தின் பங்கைக் கொடுத்துவிடுங்கள். என் மனைவிக்கு நகை செய்து போட்டுவிடுகிறேன்' என்றுன். மற்ற மூவரும் அங்கேயே இருக்கப் போவதால் தங்களுடைய பங்கைப் பிரித்துக்கொள்ள விரும்பவில்லை. அவர்கள் சொன்னுர்கள்: ''தம்பி! எல்லாக் கம்பிகளும் சம எடை உள்ளவைதான். உன்பங்குக்கான 4 தங்கக் கம்பிகள் எதுவானுலும் எடுத்துக்கொள். ஆனுல் ஒரு நிபந்தனை. நீ பிரிந்து போனுலும் நாங்கள் பிரிய மாட்டோம். அதே போல் எங்கள் கம்பிகளையும் பிரிய விடமாட்டோம்! எங்களுக் குண்டான கம்பிகளின் முனைகள் ஒன்றோடொன்று இணைந்தபடி ஒரே சங்கிலித் தொடராக இருக்க வேண்டும்.''

எங்கே கூறுங்கள் பார்க்கலாம், எந்த நான்கு கம்பிகளைக் கடைசி சகோதரன் எடுத்துக்கொள்வான்?

— சுதாகரன்

விடை: 5, 6, 11, 12.

## பி. யூ. ஸி.யில் எம். ஜி. ஆர்.

பெங்களூர் பல்கலைக் கழக பி. யு. ஸி. பரீட்சையில் எப்படியாவது எம். ஜி. ஆர். அவர்களையும் தி. மு. க. வையும் புகுத்த முயற்சி செய்து, கடந்த செப்டம்பர் (1968) பரீட்சையில் புகுத்தியும் விட்டேன்! கணிதப் பரீட்சையில் முக்கோணங்களுக்கு எம். ஜி. ஆர். என்றும் டி.எம்.கே. என்றும் பெயர் வைத்து விட்டேன்! -எஸ். நடராசன்



# சிங்கார்
## குங்கும்




உங்கள் மேனி வண்ணத்திற்கும், சேலைக் கலர்களுக்கும் இயைபான பல நிறச்சாயல்களில் கிடைக்கும் சிங்கார் குங்கும், உங்கள் எழிலுக்கு எழில் கூட்டி முகத்திற்குப் பொலிவைத் தருகிறது.

அது எடுப்பான ப்ளாஸ்டிக் குப்பிகளில் அல்லது ட்யூபுகளில் கிடைக்கிறது.




Bottle design Registered
Patent No: 128338

***PIPIS PRODUCTS***



விசாரணைகளுக்கு எழுதவும்: பேரமவுண்ட் பிராடக்ட்ஸ்

A - 30 - ஸ்ரீ ராம் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், G. D. அம்பேத்கார் ரோடு, பம்பாய்-31. DD.



007 பாலு
கதை: குமரன்
படம்: விஜயா
வாடியா பாங்கில் கொள்ளை அடிக்கப் போகிறார்கள் என்று பாலு நிச்சயமாக நம்புகிறான். ஆனால் இன்ஸ்பெக்டர் ஒரு சந்தேகத்தைக் கிளப்புகிறார்.
பாலு! சென்னை நகரில் மட்டும் வாடியா பாங்குக்கு மொத்தம் பதினாறு கிளை அலுவலகங்கள் உள்ளன. இவற்றுள் எதில் கொள்ளை நடக்கும்?
அது உங்கள் பாடு!
கரெக்ட்! அது பற்றிக் கவலைப் படவேண்டியவன் நான்தான். பதினாறு கிளைகளிலும் ஸ்பெஷல் ஆட்களைப் போட்டு வைக்கிறேன். வரட்டுமா?
நாட்கள் பல சென்று மறைந்தன. கொள்ளையாவது ஒன்றாவது? ப்ச்! தினந்தோறும் காலையில் வாடியா பாங்கு கொள்ளையடிக்கப்பட்டதா என்று பேப்பரில் தேடுவான் பாலு.
இதுவே ஒரு வியாதியாக உன்னிடம் வளர்ந்து விட்டது, பாலு! மனதை மாற்றிக் கொள்ள வேண்டும் நீ!
ஆகட்டும், அப்பா
ஒரு நாள் பத்திரிகையின் ஒரு மூலையிலிருந்து செய்தி பாலுவின் கண்களுக்குத் தட்டுப்பட்டது.
கல்கத்தா பாங்கில் கொள்ளை! ஒரு லட்சம் அபேஸ்!
அப்பா! இதைப் பார்த்தீர்களா! வாடியா பாங்க் கல்கத்தாவில் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கிறது. கல்கத்தா செய்தியானதால் சென்னைப் பத்திரிகையில் அதிக முக்கியத்துவம் பெறவில்லை.
எங்கே இப்படிக் கொடு பேப்பரை!
பாலு! பார்த்தனுக்கு எதற்கும் ஃபோன் பண்ணி வையேன்!
இதோ, உடனே...!
டெலிஃபோனில் பார்த்தனுக்குச் செய்தியைப் படித்துக் காட்டினான் பாலு.
தம்பி, நீ கூறுவது கல்கத்தா போலீஸ் விவகாரம். எனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. நீ அன்று சென்னையில் இயங்கும் திருட்டுக் கூட்டம் பற்றி அல்லவா பேசினாய்?


ஸார்! இது சாமான்யமான திருட்டுக் கூட்டமில்லை; நாடு முழுதும் வியாபித்திருக்கிற ஒரு பெரிய கொள்ளைக் கும்பல். ஒரு வேளை சர்வதேச ரீதியில் இயங்குகிற கூட்டமாகவும் இருக்கலாம்.
தம்பி! உன் கற்பனை சிறகடித்துப் பறக்கிறது.
...உன் அப்பா சொன்னது சரிதான். அடுத்தாற் போல் செவ்வாய் கிரக மனிதர்களுக்கும் வாடியா பாங்க் கொள்ளைக்கும் சம்பந்தம் உண்டு என்பாய்! தம்பி! ஜேம்ஸ்பாண்ட் நாவல்கள் ரொம்பப் படிக்காதே!
பார்த்தன் பேசியது பாலுவுக்கு ரொம்ப ஏமாற்றத்தை அளித்தது. சென்னை வாடியா பாங்க் கொள்ளைக் கண்காணித்த ஸி.ஐ.டி.க்களை வாபஸ் பெற்று விட்டார் பார்த்தன்.
போலீஸ் இவ்வளவு சுலபமாக பின் வாங்கி விட்டதே!
அன்று மாலை பாலு சந்திராவைச் சந்தித்த போது....
சந்திரா, நான் இந்த விஷயத்தை இத்துடன் விட்டு விடப் போவதில்லை. நீதான் எனக்கு உதவணும். அந்தக் கொள்ளைக் கூட்டத்தாருடன் நமக்கிருக்கிற ஒரே தொடர்பு சந்திரன்தான்...
அதனால்?
..அதனால் சந்திரனை நீ விடாமல் கண் காணிக்கணும். இப்போ லீவு நான் தானே. ஆகவே இதைச் செய்வதிலே உனக்குக் கஷ்டம் ஒன்றுமில்லே.
ஆகட்டும் பாலு. அப்படியே செய்கிறேன்.
இந்தா பைனாகுலர்ஸ். மாடிப் போர்ஷனிலிருந்து இதைக் கொண்டு நன்றாக நோட்டம் பார்க்கலாம்.
உனக்குப் பக்கத்தில் யாருமில்லாத சமயங்களில் அடிக்கடி சந்திரன் வீட்டைக் கவனி. ஏதாவது சந்தேகமாகத் தோணினால் பக்கத்து வீட்டிலேயிருந்து ஒரு டெலிபோன் பண்ணு. நீ பேசறதாகச் சொன்னால் போதும். பாக்கியை நான் நேரில் வந்து தெரிஞ்சுக்கிறேன்.

தொடரும்


பெரிய அளவிலே சமையலா ?
அவசரமான சமையலா ?
சிக்கனமான சமையலா ?
எவ்வகைச் சமையலையும் எளிதாக்குகிறது
கால்காஸ்
கால்காஸ் - சமையலுக்கான நவீன எரிபொருள்-ஓட்டல்கள், மருத்துவ மனைகள், உணவு விடுதிகள் எதற்கும் இன்றியமையாதது. ஏனெனில், கால்காஸ்-உடனடியாக சூடுபிடித்து விரைவிலே நன்கு சமைக்க உதவுகிறது-நேரத்தையும், பணத்தையும் மிச்சமாக்குகிறது-உபயோகிக்கவோ எளிதானது-தேவைக்கேற்ப ஏற்றலாம், அணைக்கலாம்-சுத்தமும், சிக்கனமும்கூட. சமையல் நேரத்தை மணிக்கணக்கில் குறைக்கிறது.
கால்காஸ் பாதுகாப்பானது...கால்காஸ் பாதுகாப்பான எஃகு சிலிண்டர்களில் வருகிறது.
வீட்டிலே டெலிவரி கொடுக்கப் படுகிறது !
ஏகபோக விநியோகஸ்தர்கள் : ஈஸ்ட் கோஸ்ட் காஸ் கோ.
48-9-5, கோ-ஆபரேடிவ் காலனி, துவாரகாநகர், விசாகப்பட்டணம்-4.
டெலி : 3516. கன்னிமாரா அனெக்ஸ், மவுண்ட் ரோடு, மதராஸ்-2.
டெலி: 83428.
ஏஜெண்டுகள் : மதராஸ், காக்கிநாடா, விசாகப்பட்டணம், விஜயவாடா, ஏலூரு, குண்டூர், பாலகோல், ராஜமுண்டிரி, நெல்லூர், விஜயநகரம், மசூலிப்பட்டணம், சேலம், காட்பாடி, ஓங்கோல், வாரங்கல், பாண்டிச்சேரி, காஞ்சிபுரம், கர்நூல். சித்தூர், திருப்பதி, போபிலி, பார்வதிபுரம், ராமசந்திரபுரம், சோம்பேட்டா, பெர்ஹாம்பூர், நரசராவ்பேட், ஸ்ரீகாகுளம், கூடூர், ஜெய்பூர், கம்மம், ஈரோடு.
கால்டெக்ஸ் தயாரிப்பு
C-GAS-G-5-68 TM.

அத்தியாயம் ஆறு

## தினத்தாளில் ஒரு புதிர்

"என்னடா, வலம்புரி! போன காரியம் என்ன ஆச்சு?'' என்று கமரலான குரலில் கேட்டுக் கொண்டே சோபாவில் அமர்ந்தான் முத்துசிவன். உள் அறையிலிருந்த அன்னபூரணியம்மாளும் எழுந்து வந்து கதவருகில் நின்று கொண்டாள்.

சட்டென்று கால்களைக் கீழே தொங்கப் போட்டுக் கொண்டு ரொம்பவும் பதவிசாக நிமிர்ந்து உட்கார்ந்த வலம்புரி தன் வழக்கமான அசட்டுச் சிரிப்புடன் சொன்னான்: ''இல்லையண்ணா, ஜானக்கா, லதா அண்ணி எல்லாரும் வண்டியேறிப் போயிட்டாங்களான்னு கேட்கிறீங்களா? போயிட்டாங்களே!''

''அது தெரிகிறது. அவர்கள் வசதியாக ரயிலில் உட்கார, படுக்க இடம் கிடைச்சுதா? ஏதாவது சொல்லச் சொன்னாங்களா?''

''தாராளமா இடம் கிடைச்சது. சொல்லும்படியாக யாரும் எதுவும் சொல்லலை.''

எரிச்சலுடன் சற்று நேரம் அவனையே பார்த்துக் கொண்டிருந்த முத்துசிவன், ''ஆமாம்; இவ்வளவு நேரமாகி விட்டதே, நீ ஏன் இங்கே வந்தே? ஸ்டேஷனிலிருந்து அப்படியே உன் வீட்டுக்குப் போயிட்டு நாளைக்குத்தான் வந்து விவரம் சொல்லக் கூடாதா? உனக்காக அந்தப் பெண்ணும், குழந்தைகளும் தூங்காமல் கண் விழிச்சுக் காத்துக் கொண்டிருப்பாங்க இல்லையா?'' என்றான், சற்று அதட்டலாக.

இதைக் கேட்டுத் திருதிரு வென்று விழித்த வலம்புரி, ''ஆமாண்ணா!.... ஆனால் நான் இங்கே வந்ததுக்கு... வந்ததுக்கு.....அதாவது, ஏன் வந்தேன்னு....'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தவன், தான் சொல்லப் போவதிலுள்ள ஹாஸ்யத்தைத் தானே மிகவும் ரசித்து விட்டவன்போல் கலகலவெனச் சிரித்தான். அப்படிச் சிரித்த அதிர்ச்சியில் அவனுடைய கண்கள் கலங்கி விளக்கொளியில் பளபளத்தன. சிரித்து முடித்ததோடு தான் சொல்ல நினைத்ததையும் சொல்லியாகி விட்டதென்று திருப்திப்பட்டுக் கொண்டவன்போல் மௌனமாயிருந்து விட்டான்.



# கிளிஞ்சல் கோபுரம்

ஜெகசிற்பியன்

"என்னடா, நான் கேட்டதற்குச் சிரிக்க மழுப்பறே! என்ன விஷயம்? சொல்ல நினைக்கிறதைச் சொல்லித் தொலையேன்!"

"ஒண்ணுமில்லேண்ணு!... இன்னிக்கு வீட்டுக் குடிக்கூலி தரணும். நாலு தரம் கெடு வைச்சுட்டேன் இப்ப அங்கே போனால் வீட்டுக்காரன் வந்து காத்துக்கிட்டிருப்பான். அவன் தான் என்னை ரொம்பக் கவலையோடு எதிர்பார்த்துக்கிட்டிருப்பான். வேற யாரும் கண் விழிச்சுக் காத்துக்கிட்டு இருக்க மாட்டாங்க."

முத்துசிவனுக்கு ஏற்பட்டிருந்த எரிச்சல், சலிப்பு எல்லாம் இப்போது எங்கு ஓடி மறைந்தன என்றே தெரியவில்லை. சற்று நேரம் மௌனமாய்த் தலைகுனிந்திருந்த அவன், "சரி; வாடகைப் பணம் எவ்வளவு பாக்கி நிற்குது?" என்று மெல்லிய குரலில் கேட்டான்.

"ரெண்டு மாசத்துப் பாக்கி அறுபது ரூபாய்" என்று சொல்லிவிட்டு அண்ணாந்த வாட்டில் சிரித்தான் வலம்புரி.

அவனுடைய அந்தச் சிரிப்பில் எவ்வளவு வெட்கமும் வேதனையும் கலந்திருக்கின்றன என்பதை உடனே புரிந்துகொண்ட முத்துசிவனுக்கு அழவேண்டும்போல் ஆகிவிட்டது. மேற்கொண்டு அவனிடம் எதுவும் கேட்க விரும்பாமல் — மத்தியானம் நடந்த அந்நிகழ்ச்சி பற்றியும் இப்போது விசாரிக்க மனமில்லாதவனாய் விருட்டென்று எழுந்து போய் அலமாரியிலிருந்து அறுபது ரூபாய் கொண்டு வந்து கொடுத்து, "சரி; நீ போய்ச் சாப்பிட்டுவிட்டுச் சிக்கிரம் உன் வீட்டுக்குக் கிளம்பு!" என்று கூறியவாறு தன் அறைக்குப் போய் விட்டான்.

உடம்பின் அசதியால் அவனுக்கு உடனே படுத்துத் தூங்க வேண்டும்போல் இருந்தது. ஆனால் படுக்க மனம் வரவில்லை. வலம்புரி சாப்பிட்டுவிட்டுப் போகும் வரையிலாவது விழித்துக்கொண்டிருக்கலாம் என்று எண்ணி, கட்டிலின் தலைப்புச் சட்டத்தில் தலையணையை நிமிர்த்திப்போட்டுச் சாய்ந்தபடி தினப் பத்திரிகையொன்றைப் பிரித்துச் செய்திகளின் தலைப்புக்களை மட்டும் மேலோட்டமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் அதிகமாகத் தினப் பத்திரிகைகளோ, வார, மாத சஞ்சிகைகளோ வாங்குவது வழக்கமில்லை. அதற்குச் சிக்கனம் ஒரு காரணம் என்று




லும், ஊர் உலகச் செதிகளையும் கட்சி அரசியல் நடவடிக்கைகளையும் அறிந்து கொள்வதில் ஆர்வமோ, கலை-இலக்கியங்களில் ஈடுபாடோ அவனுக்கு இல்லாததும் மற்றொரு காரணம். இந்தக் காலத்தில் இப்படியொருவன் இருப்பது அதிசயம்தானென்றாலும், அவன் மேற்கொண்டிருந்த 'இலட்சிய விரதம்' அவனை அவ்வாறு 'குதிரைக் கண்ணாடி' அணிந்தவனாக ஆக்கி விட்டிருந்தது. ஆகவே, ஒரே ஓர் ஆங்கில தினப் பத்திரிகை மட்டும்தான் வாங்கி வந்தான். அதையும் தினசரி தொடர்ந்து படிப்பானா என்பது சந்தேகம். பையன் கொண்டு வந்து சன்னல் வழியே எறிந்துவிட்டுப் போகும் பத்திரிகை இரண்டு மூன்று தினங்கள்வரையில்கூட அங்கேயே கிடப்பது உண்டு. அவற்றையெல்லாம் ஒரு மொத்தமாகச் சேர்த்து வைத்துக் கொண்டு ஒரே நாளில் படித்துத் தீர்த்து விடுவான். பேப்பர் படிப்பதும் அவனுக்கு ஒரு காரியம். ஏனென்றால் அதற்கென்று கொஞ்ச நேரத்தை அவன் ஒதுக்கியாக வேண்டுமே!

வெளியில் 'கேட்' திறந்து சாத்தப்படும் ஒலி கேட்டது. வலம்புரி தன் வீட்டுக்குப் புறப்பட்டு விட்டான் போலும்.

பத்திரிகையில் நாலாவது பக்கத்திலிருந்த ஒரு செய்தியைப் படித்துக் கொண்டிருந்த மூத்துசிவன், 'சரி; இனி படுக்க வேண்டியதுதான்' என்று எண்ணியவனாய் மற்ற பக்கங்களை அவசரமாகப் பார்த்துப் போட்டுவிடப் புரட்டியவன், ஆறாவது பக்கத்தில் மூன்று 'கால' அகலம், ஐந்து அங்குல நீளத்துக்குச் சதுரமாகக் கிழித்து எடுக்கப் பட்டுவிட்டிருந்ததைக் கண்டு சற்றே வியப்படைந்தான். அது பழைய பேப்பர் அல்ல; இன்றைய மாலைப் பதிப்பு.

அந்தப் புதுப் பத்திரிகையில் இதற்குள்



ளாக இப்படி ஓர் 'அழிச்சாட்டியத்தை' யார் செய்திருப்பார்கள்?

இதை இன்றுதான் புதிதாகப் பார்க்கிருன் என்று சொல்ல முடியாது: ஏற்கனவே பலமுறை இதே போன்ற கிழிசலைப் பார்த்திருக்கிருன். கடந்த ஏழெட்டு மாதங்களாக ஓர் ஐந்தாறு தடவைகளாவது இம்மாதிரி பார்த்திருப்பான். அப்போதெல்லாம் அதற்கு வெவ்வேறு காரணங்களை அவனுகவே கற்பித்துக் கொண்டு சாதாரணமாக விட்டு விட்டுமிருக்கிருன். பத்திரிகை அச்சாகும் போதே காகிதத்தில் அப்படி ஒரு கிழிசல் இருந்திருக்கலாம்: அல்லது சைக்கிளுக்குப் பின்னுல் கட்டி எடுத்து வரும் பத்திரிகைக் கட்டிலிருந்து பையன் அவசரமாக ஒரு பிரதியை உருவும் போது கிழிந்துபோகலாம்; அல்லது விளையாட்டுப் புத்தி கொண்டவளான மைதிலி தனக்குப் பிடித்த சினிமா நடிகையின் படத்தையோ, ஏதேனும் விநோத செய்தியையோ, பரிசுக் கூப்பன் விளம்பரத்தையோ கத்திரித்து எடுத்துக் கொண்டிருப்பாள்; அல்லது அரிசி, பருப்பு, உளுந்து ஆகியவற்றிலிருந்து பொறுக்கி எடுக்கும் கல்லேயோ, நெல்லேயோ, கண்ணுடிச் சில்லேயோ பொட்டலம் கட்டி வைத்து 'அழகு' பார்க்க அம்மாவுக்கு ஒரு துண்டுக் காகிதம் தேவைப்பட்டிருக்கலாம்! இவற்றுக்கு மேல் அச்சிறு விஷயத்துக்கான காரணங்களைக் கண்டு பிடித்துக் கொண்டிருக்கவோ, விசாரணை நடத்தி உண்மையை அறியவோ அவன் முயலவில்லை.

ஆனல் இப்போது அதே வகையான கிழிசலை இன்றைய பத்திரிகையிலும் பார்த்த அவனுக்கு அதில் ஏதோ 'விஷயம்' இருப்பதாகத் தோன்றியது. ஆகவே அதுபற்றி இன்னும் கொஞ்சம் ஆழமாக யோசித்துப் பார்க்கலானன்.

'பத்திரிகை அச்சாகுமுன் காகிதம் கிழிவதென்றல் அது ஒரே அளவில் ஒரே பக்கத்தில் மட்டும்தானு கிழியும்? பேப்பர் பையனின் அஜாக்கிரதையிளுல் அப்படிக் கிழிவதென்றலும் அது அடிக்கடி நிகழுமா, என்ன? சினிமா நடிகையின் படத்தையோ, பரிசுக் கூப்பனேயோ, விநோதச் செய்தியையோ கத்திரித்து எடுக்கப்பட்டதாயிருக்கும் என்றல் அம்மாதிரி செய்யக்கூடிய மைதிலி இப்போது வீட்டில் இல்லையே!.... பொட்டலம் மடிக்க அம்மா கிழித்திருப்பாள் என்றலும் இன்று மாலை அவளுக்குச் சமையல் வேலையே ஒன்றுமில்லை; காலையில் சம்பந்தி வீட்டாருக்குச் சமைத்து மீதமானதை இரவுப் போதுக்கும் நிரவிக் கொள்ளலாம் என்று அவள் ஹாய்யாக உட்கார்ந்திருந்தாளே!....எனவே இதுகாறும் நான் கொண்டிருந்த ஊகங்களில் எதுவும் சரியல்ல; இதற்கு வேறு ஏதோ ஒரு காரணம் இருக்கிறது. அதுவும் திட்டமிட்டு, கவனமாகச் செய்யும் காரியமாகவும் அது இருக்கலாம்.'

இவ்வாறு எண்ணிய அவன் மேலும் வியப்புடன் அந்தக் கிழிசல் பக்கத்தைக் கூர்ந்து பார்த்தான்.


'ஓ!.... இது வலம்புரியின் வேலேயாயிருக்குமோ? அவன்தான் இப்படி எதையாவது கிறுக்குத்தனமாகச் செய்வான்.'

இதற்கு முன்னெல்லாம் தோன்றமல் இப்போது திடீரென்று தோன்றிய இந்த ஊகமே சரியானது என்று தீர்மானித்தவனய்த் தனக்குள் மெல்லச் சிரித்துக் கொண்ட முத்துசிவன், அந்தப் பத்திரிகையில் கத்திரிக்கப்பட்டிருந்த பக்கத்தை மறுபடியும் பிரித்துப் பார்த்தான்.

'ஆமாம்; இவன் ஏன் இப்படிச் செய்ய வேண்டும்? இரண்டு பிள்ளைகளுக்கு அப்பனுகிவிட்ட இந்த வயசில் இது என்ன விளையாட்டு? இன்னும் நான் படித்துப் போடாத புதுப் பத்திரிகை இது என்பது அவனுக்குத் தெரியாதா? அப்படித் தெரிந்திருந்தும் இதிலே கிழித்து எடுக்க வேண்டிய அவ்வளவு முக்கியமான விஷயம் என்ன இருந்திருக்கும்? கடந்த ஏழெட்டு மாதங்களாக அவன் இங்கு வரும்போதெல்லாம் வீட்டில் கிடக்கிற பத்திரிகைகளிலிருந்து இம்மாதிரி ஏதோ ஒன்றைக் கிழித்துப் போடுவதை, அல்லது கத்திரித்து எடுத்து வைத்துக் கொள்வதை வழக்கமாகவே செய்து வருகிருன் போலும். அப்படியானல் அது என்னவாயிருக்கும்? ஏன் அவ்வாறு செய்கிருன்?'

முத்துசிவனுக்கு மீண்டும் சிரிப்பு வந்து விட்டது. 'போயும் போயும் இந்தச் சிறு விஷயத்தில் இவ்வளவு தூரம் சிந்தனையைச்செலுத்தி ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறேமே' என்று எண்ணியே அப்படிச் சிரித்தான் அவன். 'சித்தம் போக்கு, சிவம் போக்கு' என்ற ரகத்தைச் சேர்ந்தவன் வலம்புரி. பெரிய தத்துவ ஞானி போல் எப்போதும் எதையாவது வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பான்; அல்லது ஏதோ ஓர் அதிமுக்கியமான விஷயத்தை மறந்துவிடாமலிருக்கக் குறித்து வைத்துக் கொள்கிறவன் மாதிரி

# டாடாவிஷன்



டாடாவின் பெருநோக்கு. தீர்க்க தரிசனமுள்ள கருத்துக்கள் இருந்து என்ன? அவை மக்களிடையே பரவாவிட்டால் என்ன பயன்?— அவை மக்களைத் தழுவுது என்று செயல்படுத்த வேண்டாமா?

ஜாம்ஷெட்பூரில் நல்ல கருத்துக்கள் செயலாகாமல் வீணாவதில்லை. ஏற்ற உதவிகளும் சூழ்நிலையும் அங்கே உள்ளன. இத்தகைய ஒன்றே குடும்ப நலத்திட்டம்.

இந்தத் திட்டம் ஜாம்ஷெட்பூரில் தொடங்கிய மூன்று ஆண்டுகளுக்குள் 'விவாத-வட்டங்களில்' கலந்து கொள்வோர் தொகை பத்து மடங்காக உயர்ந்து விட்டது. விவாதத்தின் விளைவாக எழுந்த தெளிவான உறுதி, 1965-இல் ஜாம்ஷெட்பூரில் பிறப்பு விகிதம் குறையத் தொடங்கி விட்டது.

**டாடா எஃகு ஸ்தாபனத்தின் குடும்ப நலத் திட்டத்தினால் ஜாம்ஷெட்பூர் மக்களுக்கு என்ன பயன்?**

இரண்டு நவீன நகரத்துக் குடும்பத் திட்ட நிலையங்களும் ஆறு பிரசவ, குழந்தை பராமரிப்பு வி[illegible]களும் இலவசமாகக் குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங்களை வழங்குகின்றன; ஆலோசனை கூறுகின்றன.

இரண்டு நகர நிலையங்களிலும் டாடா மெயின் ஆஸ்பத்திரியிலும் 'வாஸக்டமி' ஆபரேஷன் செய்யப்படுகிறது. அதைச் செய்து கொள்ளும் கம்பெனி ஊழியருக்கு ஆபரேஷன் செலவு இல்லை. அதோடு ரொக்கப் பரிசாக ரூ. 200/- தரப்படுகிறது. போனவருஷம் ஆகஸ்டு டிசம்பர் காலத்தில் 1650 பேர் ஆபரேஷன் செய்து கொண்டதில் வியப்பில்லை. கம்பெனி ஊழியரின் மனைவியர் 'டியூபெக்டமி' ஆபரேஷன் செய்து கொண்டாலோ, 'லூப்' பொருத்திக் கொண்டாலோ ஊக்கப்படுத்தும் வகையில் ரொக்கம் வழங்கப்படுகிறது.

**டாடா ஸ்டீல்**

TN 4428

'பவழவாய்ப் புன்னகைக்கே...பல்லாயிரம் நவமணிகள் உதிரும்,
உலகமெலாம் ஒளி சிதறும்; என் குழந்தையின்
வளர்ச்சிக்கே கோடி வாழ்த்துக்கள் பொழியும். என்
பாக்கியம், நான் தேர்ந்தெடுத்தது லீவர்ஸ் குழந்தை
உணவு. பாரத நாட்டிலுள்ள குழந்தைகளை
ஊட்டிவளர்ப்பதற்கென்றே உருவாக்கப்பட்டது.
இயற்கையாகவே அது அவனுக்குப்
பூரணமாகப் பொருந்தும் உணவு.



'வழக்கமான எல்லா வைட்டமின்களையும் தவிர,
வைட்டமின் B12 சத்தினையும்
என் குழந்தைக்குக்
கிடைக்கச்செய்கிறது
லீவர்ஸ் குழந்தை
உணவு. அதோடு
ஃபாலிக அமிலமும்
கூட. இரண்டுமே இரத்த
விருத்திக்கு மிகச் சிறந்தது என்கிறார்
என் டாக்டர். புரத சத்துக்களும் அதில் வளப்பமாக
உள்ளன. என் குழந்தை திடமாக வளருவதில் வியப்பென்ன. எல்லாவற்றிற்கும்
மேலாக, உகந்த ஊட்டப் பொருள்கள் யாவினையும் உசிதமான விகித
அளவுகளிலே அடங்கப்பெற்றது— எனவே, முழுமையான
'சரிவிகித' சத்துள்ள குழந்தையுணவு.

'ஆம். லீவர்ஸ் குழந்தை உணவு உண்மையிலேயே முழுநிறைவான
உணவு. குழந்தைக்கு மேற்கொண்டு நான் எதையுமே தரத் தேவையில்லை
...அன்பைத் தவிர. உங்கள் குழந்தைக்கும் இதுவே பரிபூரணமான
பாலுணவாக அமையும் என்பது திண்ணம்'.




**பாரதநாட்டிலுள்ள குழந்தைகளை ஊட்டிவளர்ப்பதற்கென்றே உருவாக்கப்பட்டது**

# லீவர்ஸ்

## குழந்தை உணவு

பரிபூரணமான பாலுணவு

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

லின்டாஸ்-LF. 6-140 TM

துண்டுக் காகிதங்களில் ஏதேனும் பரபரவெனக் கிறுக்கிக் கொண்டிருப் பான்; அல்லது தன் வேஷ்டி முனையிலிருந்து ஒவ்வொரு நூலாக இழுத்து நீளமாக முடி போட்டுச் சுருட்டுவதில் வெகு தீவிரமாக முனைந் திருப்பான். இவையெல் லாம் சிறு வயதிலிருந்தே அவனிடம் குடி கொண்டு விட்ட சேஷ்டைகள். இம் மாதிரி இன்னும் எனக்குத் தெரியாத பல சேஷ்டை களையும் அவன் செய்பவனு யிருக்கலாம். அவற்றில் பத்திரிகைப் பக்கங்களைக் கிழித்துப் போடும் பழக்க மும் ஒன்று யிருக்கலாம். சிலர் பொழுது போக்குக்காகப் பத்திரிகையைப் புரட் டிக் கொண்டிருக்கும் போது அதி லுள்ள படங்களுக்கு மீசை வரை வார்கள், பொட்டு வைப்பார்கள், அசிங்கமாகவும் அலங்கோலமாகவும் எதையாவது புதிதாகச் சித்திரிப் பார்கள், திருத்துவார்கள், அதற்கு விளக்கமும் எழுதுவார்கள்; பிறகு அந்த அசட்டுக் காரியத்தை யாரா வது பார்த்து விடுவார்களோ என்று அஞ்சி உடனே தாம் வரைந்தவற்றை யும் எழுதியவற்றையும் அடித்துக் கிறுக்கி மறைத்துவிட முயல்வார்கள். அதிலும் திருப்தி ஏற்படாமல்போனுல் அந்தப் பக்கத்தை, அல்லது அந்தப் பகுதியை அப்படியே டர்ரென்று கிழித்துக் கசக்கி விடுவார்கள். வலம் புரியும் இப்படிப்பட்ட குரங்குப் புத்தி உள்ளவனுயிருக்கலாம். அந்தப் பழக்க தோஷப்படி இங்கே அவன் கண்ணில் படும் பத்திரிகைகளில் எதையாவது கிறுக்கிப் பிறகு அவற்றைக் கிழித் தெறிந்து விடுகிறுன் போலும்!'

கையிலிருந்த பத்திரிகையை மடித்து மேஜை மேல் போட்டுவிட்டு, ''மைதிலி ! வெளிக் கதவையெல்லாம் சாத்திட்டயா?'' என்று உரக்கக் கேட் டுக் கொண்டே கட்டிலை விட்டுக் கீழே இறங்கினுன் முத்துசிவன். இது ஒவ்வொரு நாளும் அவன் படுக்கப் போகுமுன் வழக்கமாகக் கேட்கும் கேள்வி.

''எல்லாம் சாத்திடறேன் முத்து!'' என்று பதிலிறுத்தவாறு உள்ளே வந் தாள் அன்னபூரணியம்மாள்.

தங்கை மைதிலி இப்போது இந்த வீட்டில் இல்லை என்ற நினைப்பை இன்னமும் தன் மனத்தில் பதிய



''மாப்பிள்ளை என்ன எழுதி யிருக்கார்?''

''தன் வயிற்றை எக்ஸ்ரே பிடிக்க அனுப்பி யிருக்கார்! அதிலே நீ பண்ணின தீபாவளி பட்சணம் அப்படியே இருக்காம்!''

வைத்துக் கொள்ள முடி யாத தனது பலவீனத்தை எண்ணி உள்ளூற வெட்கிச் சலிப்படைந்து கொண்ட முத்து சிவன், ''ம்.... சாத்திட்டீங்களா அம்மா? வலம்புரிபோயிட்டானு?'' என்று கேட்டுத் தன்னைச் சமாளிக்க முயன்றான்.

''அவன் சாப்பிட்டு விட்டுப் போய் ரொம்ப நேரமாச்சு !'' என்று சொல்லித் தான் எடுத்து வந்த பால் தம்ளரை மேஜைமேல் வைத்து விட் டுத் திரும்பினுள் அன்ன பூரணி.

இவ்வளவு நேரம் வலம் புரியைப் பற்றி எண்ண மிட்டுக் கொண்டிருந்ததால், மத்தியா னம் நடந்த அந்த அடிபிடி சம்பவத் துக்கான காரணத்தைக் கேட்டறிய வேண்டுமென்ற துடிப்பு இப்போது முத்துசிவனுக்கு மறுபடியும் எழவே, ''அம்மா, ஒரு விஷயம்......'' என்ற வாறு அவளை நிமிர்ந்து நோக்கினுன்.

அன்னபூரணியம்மாளின்முகம் இலே சாக வாட்டமுற்றிருந்தது. ஏதோ கவலையில் அவள் ஆழ்ந்திருக்கிறுள் என்றும் தோன்றியது.

''ஆமாம்மா ! இன்று மத்தியானம் நான் சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் புறப்படறப்ப இந்த வலம்புரி தன் பெண்டாட்டியை எதுக்காக அப்படிப் பேய் அறையறுப் போல அறைஞ் சான் ?'' என்று கேட்டான்.

இதைக் கேட்டு உள்ளூறக் கலவர மடைந்தவள் போல் தன் மைந்தனை ஏறிட்டுப் பார்த்த அன்னபூரணியம் மாள் சற்றுத் தயங்கிவிட்டு, ''அதை நீயும் பார்த்தாயா?'' என்று மெல்லச் சிரித்தபடி அறைக் கதவின் அருகில் போய் நின்று கொண்டாள். ''ஒன்னு மில்லே தம்பி ! எப்போதும் நடக்கிற கூத்துதான். அந்தப் பெண் சுந்தரி எங்கோ அவசரமாகப் போகணும்னு சொல்லிப் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளும்படி இவனைக் கேட்டாளாம். அதுக்குத்தான் இவனுக்குக் கோபம் வந்து விட்டது.....''

''எங்கோ என்றுல் எங்கேம்மா அவள் போகணும்னு கேட்டாள்.''

''அது தெரியலே! இவனைக் கேட் டால் சிரிக்கிறுன்.''

''அவளிடமாவது கேட்டீங்களா?''

''எப்படிக் கேட்கிறது? அவள்தான் உடனே தன் பிள்ளைகளைக் கூட்டிக்கிட்டு என்னிடமும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பிப் போய்விட்டாளே! மத்தியானம் அவள் சாப்பிடவும் இல்லை'' என்றாள் அன்னபூரணியம்மாள்.

சற்று நேரம் தன் தாயாரையே பார்த்துக் கொண்டிருந்த முத்துசிவன், ''நான் சொல்றேன், கேளுங்கம்மா! மைதிலியை வண்டியேற்றிவிடச் சுந்தரியும் எங்களோடு ஸ்டேஷனுக்குப் போயிட்டு வரேன்னு அவனிடம் உத்தரவு கேட்டிருப்பாள். அவனுக்கு அது ஏனோ பிடிக்கவில்லை; அடிச்சு அடக்கியிருக்கிறான்'' என்றான் கோபம் செறிந்த குரலில்.

அன்னபூரணியம்மாள் பதிலேதும் சொல்லாமல் மௌனமாயிருந்தாள்.

''அப்படி இல்லேன்னா, அவள் இவனையாவது எங்களோடு ஸ்டேஷனுக்குப் போய்விட்டு வரும்படி சொல்லியிருப்பாள்; 'நீ என்ன எனக்குப் புத்தி சொல்றது'ன்னு அவளை அடிச்சிருப்பான்.''

இதற்கும் பதில் கூறாமல் மௌனமாயிருந்தாள் அன்னபூரணி.

''பார்த்தால் பூனைபோல் இருக்கிறான்; செய்கிறதெல்லாம் இடக்கு முடக்குத்தனம்! வீட்டிலே மங்களகரமான காரியங்கள் நடந்துகிட்டிருக்கிறப்ப,—கௌரவமான அயல் மனுஷாளுங்க வந்து கூடியிருக்கிறப்ப — இவன் அப்படித் தன் பெண்டாட்டியை அடிக்கலாமா? யாராவது பார்த்திருந்தால் நம்மைப் பற்றி என்ன நினைப்பாங்க?'' என்றான் முத்துசிவன்.

''நானும் அப்படித்தான் நினைச்சேன்; ஆனால் நல்லவேளையாக அப்போ அயலார் யாரும் வீட்டில் இல்லை!'' என்று மெல்லிய குரலில் சொன்ன அன்னபூரணியம்மாள், ''நீயே அவனைக் கேட்டுக் கண்டிக்கிறதுதானே தம்பி?'' என்றாள்.

''என்னத்தைக் கண்டிக்கிறதாம்? எத்தனை தடவைதான் கண்டிக்கிறது?'' என்று திடீரெனச் சீறிய முத்துசிவன் சட்டென்று தலையைக் குனிந்து கொண்டு, ''கேட்டால் சரியான பதில் சொல்வானா? சிரிப்பான். குற வேஷம் போட்டு என்னை ஏமாற்ற அவன் நல்லா தெரிஞ்சு வைச்சுக்கிட்டு இருக்கிறான்'' என்றான் அடித் தொண்டையில்.

அன்னபூரணியம்மாள் அவனை வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள். இதற்குமுன் அவன் இப்படி அதிர்ந்தோ சலிப்படைந்தோ ஒரு வார்த்தையும் பேசி அவள் கேட்டதில்லை; பார்த்ததும் கிடையாது.

''நீங்க போய்ப் படுத்துக்கொள்ளுங்கம்மா!'' என்று சொன்ன முத்துசிவன் பாலை எடுத்துப் பருகிவிட்டு, ''மைதிலி!'' என்று உரக்கக் கூப்பிட்டான். உடனே சுற்றுமுற்றும் பார்த்துத் தலையைச் சொறிந்தபடி, ''தங்கச்சி இல்லையா?... சரி; நானே போட்டுக்கொள்கிறேன்'' என்று தனக்குள் முனகியவாறு பெட்ஷீட்டை உதறித் தலையணையைத் தட்டிப் போட்டுக் கொண்டு விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தான்.

**தூ**க்கம் அவ்வளவுலேசில் வருவதாக இல்லை. அப்படித் தூக்கம் வராமலிருப்பதை ஒரு கஷ்டமாகவும் அவன் உணரவில்லை. இன்னும் சொல்லப் போனால் தூங்காமல் சும்மாப் படுக்கையில் புரண்டு கொண்டிருப்பதே ஒரு புதுவகைச் சுகமாகத் தோன்றியது. அந்தச் சுகத்தில் திளைத்தவனாய், இன்று காலை தன் அன்புத் தங்கை மைதிலியைக் கணவன் வீட்டுக்கு வழிகூட்டி அனுப்பி வைப்பதற்காக வந்தவர்களில் சிலர் அவனிடம் ஏதோ சொல்ல முயன்று பிறகு இன்னொரு நாள் சொல்லிக் கொள்ளலாம் எனத் தீர்மானித்தவர்கள் போல் விடை பெற்றுச் சென்ற சம்பவத்தை இப்போது அவன் தனக்குள் நினைத்துக் கொண்டான்.

அவர்கள் சொல்ல விரும்பிச் சொல்லாமற் போன விஷயம் என்ன என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும்.

சின்னஞ் சிறு வயதில் அநாதரவான நிலையிலே விடப்பட்ட தன் தம்பி தங்கைகளை அணைத்துச் சேர்த்து வளர்த்துப் படிக்க வைத்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் நல்ல இடத்தில் பெண்ணும் மாப்பிள்ளையும் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் குடியும் குடித்தனமுமாக வைக்கும் வரையில், தான் திருமணம் செய்துகொள்வதில்லை என்ற ஓர் இலட்சிய விரதத்தை மேற்கொண்டிருந்த அவன், இன்றைய தினம் அந்த இலட்சியத்தில் முழு வெற்றி அடைந்து விட்டானாதலால் இனியும் கால தாமதம் செய்யாமல் தனக்கென்று ஒரு பெண்ணைத் தேடி மணம் புரிந்து கொண்டு தன் சொந்தக் குடும்ப வாழ்க்கையைச் சீக்கிரமே ஆரம்பிக்க வேண்டும் என்பதைத்தான் அவர்கள் அப்படிச் சொல்லாமல் சொல்லிப் போயினர். **(தொடரும்)**



CIBA
பட்டின் வழவழப்பு, மெல்லியரின் மென்மை
வஸந்தத்தின் பொலிவு ...
துர்மணத்தை நீக்கி குளுமையான புத்துணர்ச்சியூட்டும்
நேர்த்தியான நறுமணம்
Binaca
Talc
Binaca
Talc
Binaca
Talc
பினகா
பரிமள பவுடர்
துர்கந்த மகற்றி
சருமத்தை மென்மையாக்கும்
திரிவகங்கள் அடங்கியது.

சிறப்புச் சிறுகதை

# விழித்துக் கொண்டார்கள்

எம்.ஜே.சாஸ்கரன்

வெயிலின் வெம்மை தணிந்து மாலையின் இனிய குளுமையை வரவேற்றுக் கொண்டிருந்தது. சொக்கலிங்கம் பங்களாவின் முகப்பில் நின்றவாறு தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தார். பஞ்சாயத்துப் போர்டு தண்ணீர்க் குழாயடியில் கிராமப் பெண்கள் குடத்தை வைத்து ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். இன்னும் அரை மணி நேரத்துக்குள் குழாயில் தண்ணீர் நிறுத்தப்பட்டு விடும். அதற்குள் தேவையான தண்ணீரைப் பிடித்து வைத்துக்



கொள்வதில் எல்லாப் பெண்களுக்கும் அவசரம்.

சொக்கலிங்கம் கிராமத்துக்கு வந்து ஒரு வாரம் ஆகிறது. தினமும் இந்தச் சண்டையை அவர் பார்த்துக் கொண்டே இருக்கிறார். தெருக் கோடியில் ராமசாமியும் பரமசிவமும் வந்து கொண்டிருந்தனர். ராமசாமி முன் பெல்லாம் வாட்டசாட்டமாக இருப்பார். இப்போது மிகவும் தளர்ந்து போய் இருந்தார். பரமசிவம் வெள்ளை வேட்டிப் பண்டாரம் என்று பெயரெடுத்தவர். இப்போது பழுப்பு நிற வேட்டியுடன் வறுமைக் கோலம் பூண்டிருந்தார். இருவரும் பங்களா வாசலைத் தாண்டிச் சென்றனர். சொக்கலிங்கத்தைப் பார்த்தும் பாராதவர்கள் போல் சற்று ஒதுங்கியே சென்றனர். சின்ன வயதில் ராமசாமியும் பரமசிவமும் சொக்கலிங்கத்துக்கு நெருங்கிய நண்பர்கள். இப்போது அவர்கள் சாதாரணமாக நெருங்க முடியாத உயரத்துக்குப் போய் விட்டார் சொக்கலிங்கம். பழைய நண்பர்களுடன் சமமாகப் பழக வேண்டும் என்றுதான் சொக்கலிங்கம் விரும்பினார். அவர்களோ அவருடைய மேல் நிலையைக் கண்டு நெருங்க முடியாதவர் என்ற உணர்வில் தாங்களாக ஒதுங்கி விட்டனர். இப்படியே அவர்கள் தொடர்பு விட்டுப் போயிற்று.

''முதலாளி!''

தரகன் முத்தையா தோளில் கிடந்த துண்டை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு அவர் எதிரில் நின்றான்.

''நீ போன விஷயம் என்ன ஆச்சு முத்தையா?''

''முயற்சி பண்ணிப் பார்க்கிறேன் முதலாளி. பண்ணை வீட்டு அம்மா லேசில் மசிய மாட்டாள் போலிருக்கிறது.''

''எப்படியாவது மசிய வைக்கணும். எப்படியும் அந்தப் பண்ணை வீடு என் கைக்குள் வந்தாகணும். உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன்.''

''பண்ணை வீட்டம்மா பாடு ரொம்பக் கஷ்டம்தான். என்ன காரணத்தாலோ பண்ணை வீட்டை மட்டும் கொடுக்க முடியாதுன்னு சொல்றா. எப்படியும் மசியாமலா போவாள்? நான் பார்த்துக் கொள்றேன், முதலாளி!''

முத்தையா அவருக்குப் பெரிய கும்பிடு போட்டு விட்டுப் போனான்.

பண்ணை வீட்டுக் குடும்பத்தின் பிரம்மாண்டமான சொத்துக்கள் முழுவதையும் அவர் வாங்கி விட்டார் என்றாலும் அவர்களுடைய பூர்வீக வீடு ஒன்று மட்டும் மிஞ்சி இருப்பது அவர் கண்களை உறுத்திக் கொண்டிருந்தது. அதைக் கைப் பற்றினால் தான் அவர் மனக்கு நிறைவு ஏற்படும்.

லதா அழகாக டிரஸ் செய்து கொண்டு வெளியே புறப்பட்டாள்.

''லதா, எங்கே போகிறாய்?''



''வாக்கிங் போய்விட்டு வரேன் அப்பா.!''

''பெரிய கார் இருக்கிறது. நடந்து போகிருயே, அம்மா !''

''நடந்து போகிறதுதான் சுவாரஸ்யமா யிருக்கு. மீனுச்சியும்கூட வருகிருள்.''

''சரிம்மா: இருட்டறதுக்குள் வந்துவிடு.''

''ஆகட்டும், அப்பா !''

லதா படி இறங்கித் தெருவில் செல்வ தைப் பார்த்துக் கொண்டே இருந்தார் சொக்கலிங்கம். பச்சை டிவிங்கின் நைலான்



புடவையும் 'சோளியும் அவளுக்கு மிகவும் எடுப்பாய் இருந்தன. அவள் நடந்து செல்லும் அழகே தனியாக இருந்தது. கண்களைக் குத்தி இழுக் கும் கவர்ச்சியுடன் தெருவே அவளை வியப்புடன் பார்க்கும் வண்ணம் அவள் போய்க் கொண்டிருந்தாள். குழாயடியிலிருந்து ஒரு பெண் தண் ணீர்க் குடத்தை இடுப்பில் சுமந்து கொண்டு லதாவை ஒட்டிப் போனுள். ராமசாமியின் மகள் அவள். லதா வுக்கும் அவளுக்கும் எத்தனை வேறு பாடு ! லதா எத்தனை செழுமை யோடு அழகாய் இருக்கிருள் ! அந் தப் பெண்ணும் லதாவும் இரண்டு நாள் வித்தியாசத்தில் பிறந்தவர்கள். நடை உடை பாவனைகளில் அவர்கள் இருவருக்கும் எத்தனை வேறுபாடு! கிராமத்திலேயே இருந்திருந்தால் லதா இவளைப் போல்தான் இருப் பாள். குழாயடியில் தெருப் பெண் களோடு சண்டையிட்டுக் கொண்டு இப்படித்தான் சேலை முழுவதும் தண் ணீர் வழிய இடுப்பில் குடத்துடன் வருவாள். சொக்கலிங்கத்தின் வாழ் வில் ஏற்பட்ட பிரம்மாண்டமான ஒரு மாறுதல் கிராம வாழ்க்கையி லிருந்து அவரது வாழ்க்கை நடை முறைகளை எவ்வளவு தூரம் வேறு படுத்தி விட்டது!

டவுனிலேயே வளர்ந்தவள் லதா: இந்தப் பட்டிக்காட்டின் பசுமை அவள் இதயத்துக்குக் குளுமையாக இருக்கிறது. கிராமத்துக்கு வரும்போதெல்லாம் தினமும் உலாவச் சென்று விடுகிருள்.

சொக்கலிங்கத்துக்குக் கூடக் காலாற நடந்து போக வேண்டும் போலிருந்தது. இந்த ஊரின் தெருவில் அவர் கால் ஊன்றி நடந்து பல வருடங்கள் ஆகிவிட்டன. காரிலேயே போய்க் காரிலேயே வருவதால் அவர் தெருவில் நடமாட வேண்டிய அவசியம் இல்லாமலிருந்தது.

வீட்டுக்குள் போய் உடை மாற்றிக் கொண்டு அவர் உலாவி வரப் புறப்பட்டார். ஒவ்வொரு தெருவிலும் அவர் வந்து கொண்டிருக்கும் போது பழைய நினைவுகள் அவர் நெஞ்சத்தில் கிளர்ந்தெழுந்தன. தெருக்கள் ஒவ்வொன்றிலும் எந்தவித மாறுதலும் இல்லை. முன்பிருந்த அதே வீடுகள்தாம். பழைய தென்னை மரங்களும், வேப்ப மரங்களும் அப்படியே இருந்தன.

கடைசியாக அவர் பண்ணை வீட்டுத் தெருவில் காலடி எடுத்து வைத்தார். அவர் நெஞ்சில் அவரையும் அறியாது ஓர் அச்சம் எழுந்தது. பண்ணை வீட்டுத் தெருவில் அக்காலத்தில் போக வேண்டுமென்றால் ஜாக்கிரதையாகப் போக வேண்டும். அந்தப் பயம் இன்றும் எழுவது அவருக்கு அதிசயமாக இருந்தது. அவர் கால்கள் சற்றுக் கூசின. திரும்பிவிடலாமா என்றுகூட நினைத்தார்.

அந்தக் காலத்தில் பண்ணை வீட்டுத் தெரு ஒன்றுதான் நல்ல களையாக இருக்கும். காரை வீட்டுக் கட்டடங்கள் அங்குதான் அதிகம். இப்போது....? அந்தக் கலகலப்பு எங்கே? செல்வ போகமான அந்தக் களை எங்கே?

அதோ பண்ணை வீடு. அந்த ஊரையே ஆட்டி வைத்த வீடு அது. முதலாளி கோதண்டராம பிள்ளை செங்கோலோச்சி அட்டகாசம் செய்து கொண்டிருந்த வீடு அது. அதன் மெருகு எங்கே போயிற்று? நாலு பேர் கைகட்டி நிற்க முதலாளி (கோதண்டராமபிள்ளைக்கு நிலையாகப்பதிந்து விட்ட பெயர் முதலாளி) அதிகாரம் செய்து கொண்டு எப்போதும் அமர்ந்திருக்கும் அந்த சிமெண்டுத் திண்ணை நிழல் இழந்து வெய்யிலில் காய்ந்து கொண்டிருந்தது. அதன் மேலிருந்த ஓட்டுக் கூரை எங்கே போயிற்று? பண்ணை வீட்டின் முகப்புத் தோற்றம் பாழடைந்து கிடந்தது. காரைகள் பெயர்ந்து செங்கல்கள் வெளியே தெரிந்தன. முகப்புப் பகுதியைக் காலத்துக்குப் பறிகொடுத்து விட்டு சூனியமாய் நின்று கொண்டிருந்தது கோதண்டராமபிள்ளையின் பண்ணை வீடு.

அதோ அந்த வேப்ப மரம்.... நாணத்தால் அவர் தலை இறங்கியது.

அந்த வேப்ப மரம்....

அந்த வேப்பமரம் அவர் குடும்பத்துக்கு ஓர் அவமானச் சின்னம். பண்ணை வீட்டை வாங்கி முதலில் அந்த வேப்ப மரத்தை வெட்டி ஒழித்துவிட வேண்டும்.

**அ**ப்போது சொக்கலிங்கத்துக்குப் பத்து வயது இருக்கும். அவர் அப்பா வேலாயுதம் ஓர் ஏழை உழைப்பாளி. தான் உண்டு தன் வேலை உண்டு என்றிருப்பார்: ஒரு நாள் அவர் பண்ணை வீட்டுத் தெரு வழியாக தலையில் சுற்றியிருந்த முண்டாசை எடுக்காமல் சென்று விட்டார். முதலாளி நாலு பேரோடு திண்ணையில் உட்கார்ந்திருந்தார்.

முண்டாசு கட்டிக் கொண்டு வேலாயுதம் போவதைப் பார்த்ததும் "யார் அவன்? திமிர் வந்துட்டுதா?" என்று கத்தினார்.

வேலாயுதம் வேலை செய்த அசதியில் எதையும் கவனிக்காமல் போய்க் கொண்டிருந்தார். பண்ணை வீட்டு ஆட்களில் ஒருவன் ஓடிச் சென்று, "என்னப்பா, முதலாளி இருக்கார். தலைப்பாகை எடுக்காம போறியே" என்றான்.

"தெருவில் நாம்பாட்டுக்குப் போறதும் அவருக்கென்ன? நீ அவரிடம் வேலை பார்க்கிறே. மரியாதை கொடுக்க வேண்டியது தான். நான் என் மரியாதை கொடுக்கணும்?" என்றார்.

இது முதலாளியின் காதில் படவே, "அவனைப் பிடிச்சுக் கொண்டு வந்து மரத்தில் கட்டுடா!" என்று குதித்தெழுந்தார்.

மறுகணம் அவர் ஆட்கள் ஓடிச் சென்று வேலாயுதத்தை இழுத்துக் கொண்டு வந்து வேப்பமரத்தோடு சேர்த்துக் கட்டினார்கள். முதலாளி புளியம் மிலாறு கொண்டு வரச் சொன்னார்.

"கூலிவேலை செய்யிற நாய்க்குத் திமிரா?" என்று கூறிக் கொண்டே மிலாறினால் சுளீர் சுளீரென்று அடிக்க ஆரம்பித்தார்.

வேலாயுதம் வலி பொறுக்க முடியாமல், "முதலாளி, தெரியாமல் செஞ்சுட்டேன். மன்னிச்சிக்கிடுங்க" என்று அலறினார்.

செய்தி கேட்டு ஊர் ஜனங்கள் அங்கு திரண்டு விட்டனர். முதலாளியின் அக்கிரமத்தைப் பார்த்து ஒருவராவது வாய் திறக்க வேண்டுமே! வாயில்லா ஜீவன்கள் போல் பரிதாபமாக நின்றனர்.

கணவன் பட்ட அடியைப் பார்த்துச் சொக்கலிங்கத்தின் அம்மா புழுவாய்த் துடித்து விட்டாள். அவரை வீட்டுக்கு அழைத்து வந்து அடிபட்ட இடங்களில் ஒற்றடம் கொடுத்தாள்.

"நீங்க ஏன் அந்தத் தெரு வழியாப் போனீங்க? அவங்க பணக்காரங்க. அவங்களை எதிர்த்து நம்மால் வாழ முடியுமா?" என்றாள் அழுது கொண்டே.

தகப்பனார் மரத்தோடு கட்டப்பட்டு அடிபடுவதைச் சொக்கலிங்கம் தம் கண்களால் பார்த்திருந்தார். தகப்பனார் பட்ட அந்த அடிகள் அவருடைய பிஞ்சு நெஞ்சில் ஆறாத வடுவாகப் பதிந்து விட்டன. "அநியாயம் செய்த அவங்க நாசமாப் போகணும்" என்று மனம் வெதும்பிச் சபித்தார். அவர் சாபம் தானோ என்னவோ, சர்வாதிகாரம் செய்த பண்ணை வீடு இன்று இருக்கும் நிலை? கூரை இழந்த வீடாக, குட்டிச் சுவராக, மண் கட்டையாகக் காட்சி தருகிறது.

முதலாளியின் ஒரே மகன் துரைராஜா சேராத சேர்க்கை சேர்ந்து அவர் செல்வங்களைக் கரைக்க ஆரம்பித்தான். ஊரைக் கட்டுப்படுத்தியவரால் மகனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பணம் கரையக் கரையக்

அன்புள்ள சீனு!

என் பிறந்தநாளன்று நான் விரும்பியது என்னவென்று அப்பா என்னிடம் விசாரித்தார். மார்ட்டனின் மிட்டாய்கள் நிறைந்த ஒரு பெரிய பெட்டி வேண்டும் என்றேன். நான் வேறொன்றையும் விரும்பிக் கேட்டதில்லை. ஆதலால் என்னை சாப்பாட்டுராமன் என்று அப்பா சொன்னார்.

'சாப்பாட்டுராமன்' என்றால் என்ன? — ஏதோ நல்லதில்லாதது போலிருக்கிறது. ஆனால் மார்ட்டனின் மிட்டாய்களைக் காட்டிலும் நல்லது என்ன இருக்கமுடியும்?

ஆம். நான் விரும்புவதை கொடுக்கிறேன் என்று அப்பா உறுதி கூறியிருக்கிறார். நீ வந்தால் என்னோடு மிட்டாய்கள் தின்னலாம். வரமாட்டாயா! அன்புடன்

உனது

ராமு




MORTON ஸி & இ. மார்ட்டன் (இந்தியா) லிட்.

உயர்ந்த ரக மிட்டாய்களையும் பால்பொருள்களையும் தயாரிப்பவர்கள்

கோதண்டராம பிள்ளையின் நாடி தளர்ந்து ஒரு நாள் மண்டையைப் போட்டார்.

டவுனுக்குத் தற்செயலாய்ச் சென்ற சொக்கலிங்கம் ஒரு மோட்டார் தொழிற்சாலையில் சேர்ந்து திறமையான மோட்டார் மெக்கானிக் ஆனார். பலருடைய ஆதரவால் சொந்தத்தில் ஒரு தொழிற்கூடம் வைத்தார். நாளடைவில் அது விருத்தியாகி ஒரு கம்பெனியின் முதலாளியாகும் நிலையை அடைந்து விட்டார். செல்வம் பெருகியதும் கிராமத்தில் நவீன பங்களா ஒன்றைக் கட்டினார். நில புலன்கள் வாங்கினார். அந்த நேரத்தில் தறுதலையாகத் திரிந்த பண்ணை வீட்டு துரைராஜா கோதண்டராமபிள்ளையின் பெரும் சொத்துக்கள் அனைத்தையும் சொக்கலிங்கத்திடம் படிப்படியாக விற்று விட்டான். கிராமத்தில் கோதண்டராம பிள்ளையின் கொடி தாழ்ந்து சொக்கலிங்கத்தின் கொடி உயர்ந்து விட்டது.

சொக்கலிங்கம் டவுனில் குடி இருந்தாலும் வருஷத்துக்கு மூன்று முறையாவது கிராமத்துக்கு வந்து தம் பங்களாவில் ஒரு மாதம் வரை தங்கிவிட்டுப் போவார்.

பண்ணை வீட்டு துரைராஜாவும் நடு வயதில் காலமாகி விட்டான். அவன் மனைவி தன் மகன் கோதண்டத்தோடு ஒளி இழந்த இந்தப் பண்ணை வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்தாள். தரித்திரம் அந்த வீட்டில் தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

பண்ணை வீட்டின் அலங்கோல நிலையைப் பார்த்துச் சொக்கலிங்கம் மனம் மகிழ்ந்து சிரித்தார். இந்த ஒரு வீடுகூட அந்தக் குடும்பத்துக்கு நிலைக்கக் கூடாது. இந்த ஊரில் தங்க ஓர் அடி நிலம்கூட அந்தக் குடும்பத்துக்கு இல்லாமல் செய்துவிட வேண்டும்.

சொக்கலிங்கம் ஊரைக் கடந்து கொஞ்ச தூரம் போனார். மஞ்சள் வெய்யில் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து இருள் படரத் தொடங்கியது. ஒரு குளத்து மேட்டில் ஏறிக் கரை வழியாக வந்து கொண்டிருந்தார். குளத்தங்கரையில் ஓர் ஆலமரம். சொக்கலிங்கம் சற்று தூரத்தில் வந்து கொண்டிருக்கும்போது தற்செயலாக அவர் பார்வை மரத்தடியில் விழுந்தது. மங்கலான அந்த வெளிச்சத்தில் இரண்டு உருவங்கள். ஆண் பெண் மிக நெருக்கமாக இருப்பது நிழற் காட்சி போல் தோன்றியது. டவுனில்தான் ஆணும் பெண்ணும் காதல் காதல் என்று அலைவதைக் கேள்விப்பட்டிருக்கிறார். அந்த வியாதி கிராமத்திலும் பற்றிவிட்டதா?

''லதாம்மா, நேரமாயிடுச்சு. சீக்கிரம் வாங்க.''

இந்தக் குரலைக் கேட்டதும் அவர் திடுக்கிட்டார். இது வேலைக்காரி மீனாட்சியுடைய குரல் அல்லவா? அப்படியானால் மரத்தடியில் யாரோ ஒருவனோடு இருப்பது... ஒரு கணம் அவர் நாடி தளர்ந்துவிட்டது. லதா தினமும் வாக்கிங் என்று சொல்லிக்கொண்டு கிளம்புவது இதற்குத்தானா?

''மீனாச்சி, இங்கே வா!'' சொக்கலிங்கத்தின் கடுமையான குரலைக் கேட்டுப் பதறிப் போனாள் மீனாட்சி.

''என்ன முதலாளி!''

''லதாவை எங்கே கூட்டிக்கிட்டுப் போயிட்டு வரே? எல்லாம் எனக்குத் தெரியும். நான் கேட்கிறதுக்குச் சரியாப் பதில் சொல்லணும். இல்லைன்னா உன்னைத் தொலைச்சுப்பிடுவேன்.''

மீனாட்சி நடுங்கி விட்டாள்.

''முதலாளி, எனக்கு ஒண்ணும் தெரியாது. சின்னம்மாகிட்டே நான் எவ்வளவோ தடுத்தேன். அவங்கதான் கேக்கல்லே.''

''என்னிடம் ஏன் சொல்லல்லே?''

''பெரிய இடத்துச் சங்கதி. நான் சொன்னா நீங்க நம்புவீங்களா? எனக்குச் சங்கடம் வந்திடுமோன்னு பயந்துதான் சொல்லல்லே!''

''இது எத்தனை நாளா நடக்குது?''

''ரெண்டு வருஷத்துக்கு முந்தியே ஆரம்பிச்சுட்டுது. நீங்க கிராமத்துக்கு வருகிற போதெல்லாம் ரெண்டு பேரும் சந்திக்க ஆரம்பிச்சிடுவாங்க.''

''அவன் யார்?''

''பண்ணை வீட்டுக் கோதண்டராமபிள்ளையின் பேரன் கோதண்டம்.''

அவர் நெஞ்சில் சுரீரென்று அடித்தது போலிருந்தது. சற்று நேரம் கல்லாய்ச் சமைந்துவிட்டார். திடீரென்று அவருக்கு ஒரு யோசனை.

''மீனாச்சி....!'' என்று கூவினார்.

''அந்தக் கோதண்டம் லதாவுக்குக் கடிதம் எழுதுவானில்லையா? நாளை லதா வெளியே போகாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ எப்படியாவது அவன்கிட்டேயிருந்து ஒரு லெட்டர் வாங்கி வந்துவிட வேண்டும்.''

''சரி, முதலாளி!''

''இதோ பார்! இந்த விஷயம் ஒரு மூச்சுக்கூட வெளியே போகக் கூடாது. நீ யாரிடமாவது சொன்னாயென்று தெரிந்தால் உன் உயிர் உனக்கில்லை'' என்று எச்சரித்து அனுப்பினார்.

லதாவைக் கண்டித்து இனி வெளியே போகக் கூடாது என்று உத்தரவு போட்டார். இரண்டு நாள் கழித்து மீனாட்சி வெற்றிப் பெருமிதத்தில் சொக்கலிங்கத்திடம் ஓடி வந்தாள்.

''முதலாளி, கோதண்டத்தைப் பார்த்தேன். குளத்தங்கரையில் ரெண்டு நாளா காத்து நின்னாராம். 'லதா ஏன் வரலை'ன்னு கேட்டார். 'லதாம்மா இனி வெளியே வர மாட்டாங்க. ஏதாவது விஷயம் இருந்தா சொல்லுங்க. சொல்லிடறேன்'' என்றேன். உடனே இந்தக் கடுதாசியை எழுதி லதாம்மாகிட்டே கொடுக்கச் சொல்லி தந்தார்'' என்றாள்.

கடிதத்தை வாங்கிப் படித்த அவரது புருவங்கள் நெரிந்தன.

''வேறு என்ன சொன்னான்?''

''சாயங்காலம் நாலு மணிவாக்கில் பங்களா பக்கம் வருகிறேன். லதாவை சன்னலோரத்தில் நிக்கச் சொல்லுன்னார்.''

''பங்களா பக்கம் அவன் வரட்டும். நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று உறுமினார் சொக்கலிங்கம்.

சரியாக நாலு மணி அடிக்கவும் கோதண்டம் வந்து விட்டான். சன்னலையே பார்த்துக்

கொண்டு அங்குமிங்குமாய் நடமாடிக் கொண்டிருந்தான். சன்னல் திறந்திருந்தது. லதாவின் முகத்தைப் பார்க்க அவன் துடித்துக் கொண்டிருந்தான்.

''அந்தப் பயலைப் பிடிச்சுக் கொண்டாங்கடா !'' சொக்கலிங்கம் இடிபோல் முழங்கினார். கோதண்டம் ஓட முயன்றான். அதற்குள் வேலைக்காரர்கள் அவனைத் துரத்திப் பிடித்து இழுத்து வந்தனர்.

''மரத்தோடு சேர்த்துக் கட்டுங்க.''

வேலைக்காரர்கள் கோதண்டத்தை மரத்தில் கட்டி வைத்தனர். சொக்கலிங்கம் புளிய மிலாறைக் கையில் எடுத்துக் கொண்டார். ''எலே! இந்த லெட்டரை எழுதினது நீதானே ?'' என்று கேட்டார்.

அவன் தலை கவிழ்ந்தான்.

''சொல்லுடா, உன் தோலை உரிச்சுப் பிடறேன்.''

அவர் கத்தியது நாலு தெருவுக்கும் கேட்டது. ஊர் மக்கள் கேட்க வேண்டும், எல்லோரும் அங்கு வந்து கூட வேண்டும் என்றே அவர் கத்தினார். அவர் எதிர்பார்த்தது போல் ஊர் மக்கள் எல்லோரும் அங்கு கூடிவிட்டனர். ஊர் மக்கள் காணப் பண்ணை விட்டுக் கோதண்டராமபிள்ளையின் பேரனை அடிக்க வேண்டும் என்பதே அவர் எண்ணம். ஊர் மக்கள் முன்னிலையில் கோதண்டத்தை அடிக்க ஆங்காரத்துடன் புளியம் மிலாறை ஓங்கினார்.

''நிறுத்துங்க!'' என்றது ஒரு குரல்.

சொக்கலிங்கம் அதிர்ந்து விட்டார். இப்படி ஒரு குரல் தன்னைத் தடுக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

''அவனை ஏன் கட்டி வைச்சிருக்கீங்க?''

சொக்கலிங்கம் திரும்பிப் பார்த்தார். புதியவர் யாரும் அங்கில்லை. எல்லோரும் அந்த ஊர் மக்கள்தான். அன்று தம் தகப்பனார் அடிபடும்போது பார்த்துக் கொண்டு ஊமையாக நின்ற மக்கள்தான். இன்று 'ஏன்' என்று கேட்க வந்துவிட்டார்கள். சொக்கலிங்கத்துக்கு ஆத்திரமாக வந்தது.

''முதலில் அவன் கட்டை அவிழ்த்து விடுங்கள்.'' ஊர் ஜனங்கள் எல்லோரும் ஏகோபித்த குரலில் சொன்னார்கள்.

சொக்கலிங்கத்துக்குக் கோபம் வந்து விட்டது.

''இதைக் கேட்க நீங்கள் யார்?'' என்றார்.

''நீங்க விவரம் தெரிஞ்சவங்க. எங்களைப் பார்த்து யார்னு கேட்கறீங்களே! முதலில் அவனை அவிழ்த்து விடுங்கள்.''

''முடியாது. இது என் குடும்ப விஷயம். நீங்க எல்லோரும் போயிடுங்க.''

''ஊர்க்காரன் ஒருவனை மரத்தில் கட்டி வைத்துக் கொண்டு குடும்ப விஷயம்னு சொல்றது சரியில்லை. அவன் என்ன குற்றம் செய்தான்னு சொல்லுங்க. விசாரிப்போம். அவன் செய்தது தப்புன்னா அதுக்குரிய தண்டனை கொடுப்போம்.''

''சாதாரணக் குற்றமா செய்தான்? சும்மா இருக்கிற என் பொண்ணுக்குக் காதல் கடுதாசி எழுதுகிறான். இதோ பாருங்க'' சொக்கலிங்கம் கடிதத்தை ஊர்க்காரர்களிடம் காட்டினார்.

அவர்கள் கடிதத்தைப் பார்த்துவிட்டு, ''நீங்க சொல்றது சரிதான். ஆனா நெருப்பில்லாமல் புகையாது: உங்க பொண்ணும் ஏதாவது லெட்டர் எழுதிச்சான்னு கேட்க வேண்டாமா?'' என்றார்கள்.

சொக்கலிங்கம் திடுக்கிட்டார். இந்த விஷயம் விவகாரமாகப் போய்விடும் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை. வாயில்லா ஜனங்கள்தானே, தாம் இருக்கிற செல்வ நிலைக்குத் தம்மை யாரும் எதிர்க்கத் துணிய மாட்டார்கள் என்றுதான் அவர் இந்த ஏற்பாட்டைச் செய்தார். ஆனால் ஜனங்கள் இப்போது விவரம் புரிந்து கொண்டார்கள். நியாயத்துக்காக யாரிடமும் போராடலாம் என்ற துணிவை அடைந்து விட்டார்கள். பழிக்குப் பழிவாங்க ஒருவனைக் கட்டி வைக்கப் போய் அவரது குடும்ப மானம் சந்திக்கு வந்து நிற்கும் நிலைமை ஏற்பட்டு விட்டது.

''என் பெண்ணை ஒன்றும் கேட்க வேண்டியதில்லை. இவன் செய்தது தப்பா இல்லையா?''

''அதெப்படிச் சொல்றது? விவகாரம்னு வந்தா ரெண்டு தரப்பிலேயும் விசாரிக்க வேண்டியதுதானே?''

சொக்கலிங்கம் சிறிது சிந்தித்தார். இந்த இக்கட்டிலிருந்து தப்புவதற்கு ஒரே ஒரு வழி தான் இருந்தது. ஆம். மக்கள் குரலுக்குப் பணிந்து விடுவதுதான். உடனே அவர் ஆத்திரம் தணிந்தது.

''சரி, ஊர் ஜனங்கள் நீங்கள் வந்ததனால் அவனை மன்னிச்சுடறேன்'' — சொக்கலிங்கம் வேலைக்காரர்களை அழைத்துக் கோதண்டத்தை அவிழ்த்து விடச் சொன்னார்.

ஊர் மக்கள் கேட்கவில்லை.

''இது விவகாரத்துக்கு ஒத்து வராது. அவன் செய்தது தப்பு அல்லது சரி என்று முடிவு செய்யாமல் அவனை நாங்க அழைச்சிக்கிட்டுப் போறது சரியில்லை. நாளைக்கு நாங்களும் இந்த ஊரில் மனிதர்களாக நடமாட வேண்டும்.''

இந்தச் சமயம், வீட்டை விட்டே வெளி வராத கோதண்டத்தின் அம்மா மகன் கட்டி வைக்கப்பட்ட செய்தி கேட்டு ஓடிவந்தாள். விவகாரத்தைக் கேட்டாள்.

''என் மகன் மேல் தப்புக் கிடையாது. அவர் பெண்தான் என் மகனுக்குக் கடுதாசி எழுதினாள். இதோ!''

லதா எழுதிய கடிதங்கள் ஒரு கத்தையை அந்த அம்மாள் ஊரார் முன் வைத்துவிட்டாள். ஊரார் படித்துப் பார்த்தனர். லதாடவுலிருந்து கோதண்டனுக்குத் தன் காதல் உணர்வைக் கொட்டிப் பல கடிதங்கள் எழுதியிருந்தாள்.

''இதுக்கு என்ன சொல்றீங்க?'' ஊரார் சொக்கலிங்கத்தை நோக்கிக் கேட்டனர்.

சொக்கலிங்கம் தலைகுனிந்து நின்றார்.

''தப்பு ரெண்டு பக்கத்திலேயும் ஏற்பட்டுப் போச்சு. அந்தக் காலமா இருந்தா ரெண்டு பேரையும் ஊரை விட்டுத் துரத்த வேண்டி இருக்கும். காலம் மாறிப் போச்சு. சின்னஞ் சிறுசுக. தெரியாமல் நடந்து கொண்டாங்க. பேசாமல் ரெண்டு பேருக்கும் ஒரு கல்யாணம் முடித்து வைப்பதுதான் நல்லது'' என்று ஊர் மக்கள் தீர்ப்பளித்துக் கோதண்டத்தின் கட்டுக்களை அவிழ்த்து விட்டனர்.

''ஊர் மக்களைச் சாமான்யமாக நினைத்தது எவ்வளவு விபரீதமாகப் போய்விட்டது? அவர்கள் விழித்துக் கொண்டார்கள்!'' சொக்கலிங்கம் மனசுக்குள் முனகினார்.

# மிகவும் இனிமையான சிறந்த லிக்விட்

# க்ளுகோஸ்



தயாரிப்பாளர்கள்: டாபியோகா ப்ராடக்ட்ஸ், சாலக்குடி.

தென் இந்தியாவிலே மிகப் பெரிய, சிறந்த லிக்விட் க்ளுகோஸ் தயாரிப்பாளர்கள். தேவைக் கேற்றபடி எந்த குறிப்பீட்டின்படியும் சப்ளை செய்யக் கூடும்.

பல வகைகளில் தரத்தில் சிறந்த தோடல் லாமல் முற்றிலும் தாதுப் பொருள்கள் அகற்றப்பட்டது.

ஸுபர்


கிரேடு

**ஸாயாஜி மில்ஸ் லிமிடெட்,**
கர்வாடா, அகமதாபாத் 2.

ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்:
**வி. டாக்டர் & கோ.**
**பிரைவேட் லிட்.,**
11 ப்ரூஸ் ஸ்ட்ரீட், பம்பாய் 1

அடியிற்கண்ட எங்கள் விற்பனை ஏஜெண்டுகளிடம் ஸ்டாக் தயாராகக் கிடைக்கும்:

**பாரி & கோ. லிமிடெட்**
டிப்போக்கள்: மதராஸ், செகந்தராபாத், பெங்களூர்



# பொன் மலர்

## எழுத்தில் புதுமை

திருமூர்த்தியின் சொந்த வாழ்க்கையின் பல சூழல்களையும் தொழில் துறை ரகசியங்களையும் டாக்டர் சங்கரியால் அறிந்துகொள்ள முடிகிறது. நோய் என வெறுத்து ஒதுக்க வேண்டிய திருமூர்த்தியின் உறவை, டாக்டர் சங்கரி அப்படி வெறுத்ததாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக அவனுடன் மிகுந்த துணிச்சலுடன் பழகுகிறாள். அவனுடைய பங்களூர் உல்லாச மாளிகையில் அவனுடனேயே சில காலம் தங்குகிறாள்! அவன் அன்பளிப்பாகத் தந்த பட்டுப் புடவையையும், வைர வளையல்களையும் மோட்டார் காரையும் ஏற்றுக்கொள்கிறாள்! சங்கரியின் உறவினனும், அவளைக் காதலித்து இன்னமும் அவளை மணம் புரிந்துகொள்வதில் ஆசையை வைத்திருப்பவனுமாகிய திருஞானம் திருமூர்த்தியிடமே வேலை பார்க்கிறான். அவனுக்குச் சங்கரியின் இந்த நடத்தை புதிராகவே இருக்கிறது.

திருஞானம் வேறு யாருமல்ல; தன்னை வேலை பார்த்துத் தான் செய்து வரும் கள்ளக் கடத்தல், கலப்படம், பதுக்கல் போன்ற கறுப்பு மார்க்கெட் விவகாரங்களுக்காகத் தன்னைப் பிடிக்க வந்துள்ள மத்திய சர்க்கார் போலீஸ் அதிகாரி என்பதை திருமூர்த்தி அறிந்ததும் அவனைக் கொலை செய்துவிட எத்தனிக்கிறான். அத்தகைய ஒரு விபத்து திருஞானத்துக்கு ஏற்படாமல் டாக்டர் சங்கரி உடனிருந்து அவனைக் காப்பாற்றுகிறாள். திருமூர்த்தி பிடிபடவே, அவனுடைய சமூக அந்தஸ்தும் மானமும் கப்பலேறுகின்றன. அதற்கு முன் அவனைக் கொடை வள்ளல் என்று புகழ்ந்த பத்திரிகைகள், அவனைக் கொள்ளைக்காரன் என்று ஏசின. ஜாமீனில் வெளியே வந்த திருமூர்த்தி தூக்க மாத்திரைகளை நிறைய விழுங்கித் தற்கொலை செய்துகொள்கிறான். வந்த வேலையை ஒருவிதமாக முடித்துவிட்ட திருஞானம், டாக்டர் சங்கரியிடம் தன்னை மணக்கக் கோரியபோது அவள், "நீங்கள் தெய்வமாகக் குடியிருக்கும் இந்த நெஞ்சை வீணாக உடைத்து விடாதீர்கள். நீங்கள் என் தெய்வம். எனக்கு வழிகாட்டி. என்னிலும் உயர்ந்தவர்கள். அந்த உயர்ந்த பீடத்திலேயே என் கரத்தால் தீண்ட முடியாத தொலைவிலேயே வானத்து துருவ நட்சத்திரம் போல் நீங்கள் இருந்துவிடுங்கள்" என்கிறாள். "நானும் என் சங்கரியை மனத்துக்குள் பூட்டி வைத்துக்கொள்கிறேன். மனந்தானே வாழ்வு?" என்று கேட்டுவிட்டு டில்லிக்கு விமானம் ஏறிவிடுகிறான் திருஞானம்.

சில நாவலாசிரியர்கள் கதாபாத்திரங்களைச் சிருஷ்டிக்கத் தொடங்கியதும், அந்தப் பாத்திரங்கள் அப்பா சொற்படி நடவாத தறுதலைப் பிள்ளைகளாக மாறி, நாவலாசிரியரின் பிடியிலிருந்து நழுவித் தங்கள் இஷ்டம் போலக் கூத்தடிப்பார்கள்.

ஆனால் ஆசிரியர் அகிலன் மிகவும் கண்டிப்புப் பேர்வழியாகக் காண்கிறார். அவர் சில கட்டுத் திட்டங்களுடன் முன்கூட்டியே யோசித்துத் திட்டவட்டமாகச் சில பாத்திரங்களைப் படைக்கிறார். அவர் எந்த நோக்கத்தோடு படைத்தாரோ, அந்த நோக்கத்துக்கு இம்மியளவுகூட ஊறு செய்யாமல் அவருடைய பாத்திரங்கள் 'குறி'யாக நடந்து கொள்கிறார்கள்.

கலைமகளில் ஓராண்டு காலம் தொடர்ந்து வெளிவந்த 'பொன்மலர்' என்ற இந்த நாவ



நாவலாசிரியர்
அகிலன்

## முடிவுரை

''தமிழில் என்ன புதிதாக எழுதிக் கிழித்து விட்டார்கள்? எல்லாம் அரைத்த மாவையே அரைக்கிற கதைதான்; ஒரு முன்னேற்றமும் இல்லை'' என்ற துஷ்பிரசாரம் நடக்கத்தான் செய்கிறது. தமிழில் இலக்கியத்தரமான நூல்கள் படைக்கப்படுகின்றனவா என்றுகூட இந்த மகானுபாவர்கள் பிரச்னையைக் கிளப்புவதில்லை; ''நவீன தமிழ் நூல்களில் ஒன்றுமே இல்லை'' என்று ஒரே போடாகப் போட்டுவிடுகிறார்கள்!

'தமிழில் புதுமையான படைப்புக்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றில் இலக்கியத் தரம் வாய்ந்தவையும் உள்ளன' என்பதைச் சுட்டிக் காட்டுவதே இந்த 'எழுத்தில் புதுமை' என்ற அம்சத்தின் நோக்கம்.

இதற்காகவே நாவல்களை மட்டுமல்லாது, சிறுகதைத் தொகுப்பு, பிரயாணக் கட்டுரை, பக்தி நூல், கவிதைத் தொகுப்பு, நாடகம், நகைச்சுவை நூல், குறு நாவல் என்று பல்வேறு எழுத்துத் துறைகளையும் அணைத்துச் சென்றது எழுத்தில் புதுமை என்ற இந்த அம்சம்.

அகிலனின் பொன் மலர் பற்றிய பதினேழாவது கட்டுரையுடன் இந்த அம்சம் முடிவடைகிறது. இத்தொடரில் இடம் பெறாத வேறு பல புதுமையான முயற்சிகளும் உள்ளன என்பதை அறிவோம். அவற்றைப் படைத்த எழுத்தாளர்களையும் வாழ்த்தி இறுதிக் கட்டுரையை இங்கு வழங்குகிறோம்.

— ஆசிரியர்

யில், ஆசிரியர் அகிலன் தமக்குள்ளே நடந்து வந்த ஒரு போராட்டத்துக்கு உருவம் கொடுத்திருக்கிறார். நாடு அரசியல் விடுதலை பெற்று விட்ட பிறகு, பொருளாதார முன்னேற்றத்துக்காகத் துடிக்கும் மக்கள் நடுவில், சில துரியோதனர்கள் தோன்றி அந்த மக்களின் வாழ்க்கை வசதிகளையும் உரிமைகளையும் பறித்து வருவதைக் கண்டு துடித்திருக்கிறார். இந்தத் துடிப்புக்கு அவர் கொடுத்த உருவமே இந்த நாவல்.

''ரூபாய் நோட்டுக்களில் அசோகச் சக்கரம் இருக்கிறதே தவிர, 'சத்யமே ஜயம்' என்று போடவில்லை. இதை வைத்துக் கொண்டு பூமியில் பொருள் வளம் செழிக்க வேண்டும் என்பது மட்டுமே அவர்களின் நோக்கமே தவிர, மனவளம் செழிக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. உண்மையே வெல்லும் என்ற சொல்லையும் போட்டுத் தொலைத்திருந்தால் கள்ளப்பணம் சேர்ப்பதற்கு இடைஞ்சலாக இருக்கும்'' என்று அவர் சாமர்த்தியமாகச் சாடுகிறார்.

சமூகத்திலிருந்து மண் எடுத்துக் கதா பாத்திரங்களைக் கலையழகோடு படைக்கத் தெரிந்து விட்டால் மட்டும் போதாது. அந்தச் சமுதாயத்தின் மீது நாவலாசிரியனுக்கு ஓர் அனுதாபம் வேண்டும். அந்தச் சமுதாயத்துக்குத் துரோகம் செய்கிறவர்களைப் பகிரங்கமாகக் கண்டிக்கும் துணிவு அவனுக்கு வேண்டும். அகிலன் கண்டிக்கிறார், கேளுங்கள்:

''இன்றையச் சமுதாய வாழ்வின் ஆணி வேர் ஒவ்வொன்றையும் போலித்தனம் என்ற புழு அரிக்கத் தொடங்கியிருக்கிறது. வாயில் சமதர்மப் பேச்சும், நாலு தலைமுறைக்குத் திமர்ச் சொத்தும் உள்ள அரசியல்வாதி, திட்டங்களை மட்டும் போட்டுத் தனக்கு மட்டும் மாளிகைகள் எழுப்பும் அதிகாரி, கலப்படமும் பதுக்கலுமுள்ள வியாபாரி, மாமூல் கொடுத்து வழக்கப்படுத்திவிட்ட தொழில் அதிபர், உழைக்காமல் பிழைக்க நினைக்கும் தொழிலாளி, போலி எழுத்து, போலிப் பத்திரிகை, போலித் திரை மயக்கு! — நாட்டில் நல்ல சக்திகள் நடுங்கும் அளவுக்குச் சமுதாய வாழ்வு என்னும் ஆலமரத்தின் ஆணிவேரை நச்சுக் கறையான் அரிக்கத் தொடங்கி விட்டது.''

யாராலுமே விடை காண முடியாத கேள்விகளை ஆங்காங்கே கேட்டுக்கொண்டு போவது அகிலனுக்குப் பழக்கம்: ''தாய்மைப் பேறு என்ற பெரிய பொறுப்பைப் பெண்களுக்குக் கொடுத்திருக்கும் கடவுள், ஏன் அவர்களைப் பொறுப்பற்ற ஆண்களை நம்பி வாழும் அவல நிலைக்குக் கொண்டுவந்து வைத்திருக்கிறான்? ஏன் பெண்களில் பலரையே பொறுப்பற்ற உணர்ச்சிகளின் குவியலாகப் படைத்திருக்கிறான்?''

நாவலில் ஒரு சம்பவம்:

உண்மை தேசாபிமானியும், ஒழுக்க சீலருமான ஆறுமுகத்துக்கு எதிராகத் திருமூர்த்தி தன் கையாள் மதனகோபால் என்பவனைத் தேர்தலுக்கு நிற்க வைத்து ஆறுமுகத்தின் மீது துஷ்பிரசாரம் செய்து, பண பலத்தினால் மதனகோபால் வெற்றியடையும்படி செய்கிறான். மதனகோபால் திருமூர்த்தியின் காரில் அவன் பக்கத்திலேயே உட்கார்ந்து வெற்றி பவனி வருகிறான். தோற்ற ஆறுமுகத்தின் வீட்டுக்கெதிரில் ஊர்வலம் வருகிறது. ஆறுமுகம் மாலையோடு வந்து மாலை போடுகிறார். — மதனகோபால் கழுத்தில் அல்ல, திருமூர்த்தியின் கழுத்தில்! வாசகர்கள் நினைவில் நிற்கக் கூடிய சம்பவம் இது!

திருச்சி மாவட்டம் பெருங்களூரில் 27—6—1922ல் பிறந்த பி. வி. அகிலாண்டம் (அகிலன்) மாணவப் பருவத்திலேயே கதைகள் எழுதத் தொடங்கிக் 'கலைமகள்' நாவல் போட்டியில் தமது 'பெண்' என்ற நாவலுக்கு முதல் பரிசு பெற்றார். இவரது பிரபலமான நாவல்கள், சிறுகதைத் தொகுப்புக்கள் நாடகங்கள் முதலியவை மொத்தம் முப்பத்தைந்து புத்தகங்களாக வெளிவந்திருக்கின்றன. இவரது எழுத்துக்கள் இந்திய மொழிகளில் மட்டு மின்றி அயல்நாட்டு மொழிகள் பலவற்றிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. 'நெஞ்சின் அலைகள்' தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசையும், 'வேங்கையின் மைந்தன்' சாகித்ய அகாதெமி பரிசையும் பெற்

நூல்களை. "பாவை விளக்கு"; 'வாழ்வு எங்கே?' இரண்டு நாவல்களும் திரைப்படமாக்கப்பட்டுள்ளன. 'வாழ்வில் இன்பம்', 'புயல்', 'உயிர் பலி' ஆகிய நாடகங்கள் டி. கே. எஸ். சகோதரர்களால் அரங்கேற்றப்பட்டவை. 1966ல் மலேசியாவில் நடைபெற்ற முதல் உலகத் தமிழ் மாநாட்டில் இவரது சிறு கதைகள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை படிக்கப் பெற்றது.

இன்று சென்னை வானொலி நிலையத்தில் சொற்பொழிவுத் துறை அமைப்பாளராகப் பணியாற்றிவரும் அகிலனை, "உங்களுடைய நாவல்களின் வெற்றிக்கு எது காரணம்?" என்று கேட்டேன்.

"நான் வாழும் சமுதாயத்தை நினைத்து மக்களுடைய பிரச்னைகளை வைத்தே எழுதுகிறேன். பாரத நாட்டின் இந்த காந்தி சகாப்தத்தின் முக்கிய நிகழ்ச்சிகள் என் நாவல்களில் பிரதிபலிக்கின்றன. 'பெண்' அஹிம்சைப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. 'நெஞ்சின் அலைகள்' ஐ. என். ஏ. பற்றி எழுதப்பட்ட நாவல்."

"பார்ப்பதற்குச் சாதுவாக இருக்கும் நீங்கள் பாய்ந்தால் புலி என்று சிலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். அது உண்மையா?"

"ஓரளவு உண்மைதான். நான் எப்போதுமே உணர்ச்சி வசப்பட்டவன். சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளும், ஒரு சாரார் மற்றொரு சாராருக்கு மனமறிந்து செய்யும் தீங்குகளும் என்னைப் பெரிதும் பாதிக்கின்றன. ஜனநாயகம் தவறாகப் பயன்படுத்தப்படும் போது என்னுள் ஏதோ ஒன்று கொதித்து எழுகிறது. இந்தக் கொதிப்பையும், மனக் கசப்பையும் எழுத்தாளனான நான் வெளிப்படுத்த விரும்பினால் அது நான் படைக்கும் பாத்திரங்கள் மூலமாகத்தானே இருக்க முடியும்?"

"உங்கள் இலக்கிய வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சி ஏதாவது உண்டா ?"

"கல்கியில் 'பாவை விளக்கு' எழுதும் போது ஏற்பட்ட பல சம்பவங்கள் மறக்க முடியாதவையே. வாரா வாரம் கதையைக் குறித்த நாளில் தர வேண்டிய நிர்ப்பந்தத்தில் சர்க்கார் உத்தியோகத்திற்கு 'கால் கடுதாசி' கொடுத்தது; வாரா வாரம் வந்த வாசகர்களின் எண்ணற்ற கடிதங்கள்; நான் என் சொந்த வாழ்க்கையை எழுதுகிறேன் என்று அவர்களை நம்ப வைத்தது; பல விஷயங்களைச் சொல்லலாமா வேண்டாமா என்று யோசனை செய்து எழுதியது எல்லாமே என் நினைவில் நிற்பவையே !"

"உங்கள் எழுத்துக்கு நீங்கள் ஏதாவது லட்சிய வரம்பு வைத்துக் கொண்டிருக்கிறீர்களா ?"

"சத்தியமே பேச வேண்டும். மனிதனுக்கு உள்ளே இருக்கிற போலீஸ்காரனைத் தூண்டிவிட வேண்டும். இவை கலைஞனின் வேலை என்பது என் அசைக்க முடியாத தீர்மானம்!"

அகிலனின் தமிழ்நடை ஆடம்பரமில்லாதது. சுற்றி வளைத்து விஷயத்தைச் சொல்லி வாசகரை ஒருமுறைக்கு இருமுறை மும்முறை படிக்க வைத்துக் குழப்புவது அவருக்குக் கைவராத கலை. அநாவசிய சர்ச்சைகளையோ, எடுத்துக்கொண்ட விஷயத்துக்குப் புறம்பான இலக்கியப் போக்குகளையோ முற்றிலும் தவிர்த்து, சர்க்கஸ் கயிற்றின்மீதோ அல்லது வயல் வரப்பின்மீதோ நடப்பது போன்ற ஏகாக்ர சிந்தையுடன் 'பொன் மலர்' என்ற இந்த நாவலை எழுதியிருக்கிறார். — மகரம்

விற்பனை உரிமை: பாரி புத்தகப் பண்ணை, சென்னை - 5; விலை ரூ. 4-00.

# ஆகாசவெடி!

'கொக்கி'

சென்னை நகரசபைத் தேர்தலில் இம்முறை பெண்மணிகள் யாருமே தேர்ந்தெடுக்கப்படவில்லை. இது ஒரு புதிய நிலைமை. — ஒரு தேர்தல் கண்ணோட்டம்

"அதனால்தான் 'நகராண்மைக் கழகம்' என்று நகர சபைக்கு மற்றொரு பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும்" என்கிறார் ஓர் ஆண் வாக்காளர்.

❖❖❖

"சேலம் உருக்காலை அமைப்புக் கொள்கையில் விட்டுக் கொடுக்கும் பேச்சே கிடையாது. தமிழக அரசு உடும்புப் பிடியாகவே வற்புறுத்தி வருகிறது." — அமைச்சர் மாதவன்

உடும்புப் பிடிதான் நல்லது; உருக்குப் பிடி நெகிழ்ந்து கொடுக்கத் தோன்றும்!

❖❖❖

மாறு வேடங்களில் இரிந்து வந்த நக்ஸல்பரி கலகத் தலைவர் கனு சந்நியாசியைப் போலீசார் கைது செய்தனர். — செய்தி

இப்போது அவர் கைதி வேடம் போட்டுக் கொண்டதாகப் பெருமைப்படுவாரா?

அஜாக்கிரதையாகவும், வேகமாகவும் தெருவில் மோட்டார் ஓட்டியவர்களையெல்லாம் பிடித்து ஜாகர்தா போலீஸார் ஊர்வலம் விட்டனர். — இந்தோனேஷியச் செய்தி

இந்த ஊர்வலம், போக்கு வரத்து நெரிசலை உண்டாக்காமலிருக்க மணிக்கு எண்பது மைல் வேகத்தில் நகர்ந்ததா?

❖❖❖

உட்கார்ந்தபடியே முன்னேறிவிட முடியுமா? 'விழுந்தாலும் சரி' என்று நாம் எழுந்து நடக்க வேண்டும். — அ.இ.கா. கூட்டத்தில் இந்திரா காந்தி

"விழ்வதுதான் லட்சியமென்றால் உட்கார்ந்தவாறு விழ்ந்தால் காயமின்றித் தப்பலாமே?" என்கிறார் ஒரு காங்கிரஸ்காரர்.

❖❖❖

இப்போதுள்ள நடமாடும் தபால் நிலையங்களுக்குப் பதிலாகக் கண்கவரும் விதத்தில் வேறு வாகனங்களைச் சென்னையில் விடப்போகிறார்கள். — நகரச் செய்தி

"வண்டி கவர்கிறதோ இல்லையோ, கார்டு, கவர்கள் பணத்தை இப்போது அதிகம் கவர்கின்றன" என்கிறார் ஒரு பிரஜை.

# டியூஷன் வாத்தியார்

எஸ். வி. எஸ்.



ரகுராமன் அந்தப் பத்திரிகையைத் தனது அறையின் கவர் மூலையை நோக்கி விட்டெறிந்து விட்டு ''கதை எழுதுகிறானும், கதை!'' என்று முணு முணுத்துக் கொண்டான்.

அவனுக்கு அவ்வளவு ஆத்திரமூட்டிய விஷயம் கதையில் முக்கிய பாத்திரமான சங்கீத வித்வான் தான் டியூஷன் சொல்லித் தரும் மாணவியினிடம் தகாத முறையில் நடந்து கொள்வதாகவும், அதற்கு அம்மாணவியும் உடந்தையாக இருப்பதாகவும் சித்திரித்திருந்ததுதான்.

அவனும்தான் எத்தனையோ மாணவிகளுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்கிறான். அவர்கள் பலர் அவனுடன் சிரித்தும் பேசியும் பழகுவார்கள். இருப்பினும் அவனுக்கு மனத்தில் சலனம் ஏற்பட்டதில்லை. அந்தமாதிரி எண்ணமே ஏற்பட்டதில்லை. அதற்கு மாறாக ஒருவகை தூய எண்ணமே ஏற்பட்டதுண்டு. அது என்ன தூய்மை என்று புரியாமல் தவித்திருக்கிறான். ஆனால் இந்தக் கதாசிரியர் அதை விளக்குவாரோ என்று பார்த்தால் அதனை விடுத்து, உண்மைக்குப் புறம்பாக அல்லவோ அவர் சித்திரித்திருக்கிறார். இது என்ன அநியாயம் என்று கோபமாக வந்தது! அந்தக் கோபத்தின் விளைவாகத்தான் அப்பத்திரிகைக்கு அத்தகைய ''மரியாதை'' கிட்டியது!

ஸ்ரீமான் சீதாராமய்யர், மாலை ஏழு மணிக்கு ஆபீஸிலிருந்து களைத்து வீட்டுக்குத் திரும்பினார்.

வீட்டில் அவர் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மனைவி மங்களம்மாள், அவர் ஆபீஸ் வேலையின் கடுமையையோ, களைப்பையோ ஒன்றும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அவர் வீட்டுக்குள் நுழைந்தாரோ இல்லையோ, ''இன்றைக்காவது அந்தத் திருவனந்தபுரக் காரர்களிடமிருந்து கடிதம் வந்ததா?'' என்று கேட்டாள்.

அவருக்கு அந்தக் கேள்வி மிகுந்த அருவருப்பையும் கோபத்தையும் உண்டாக்கியது. 'வந்த மனுஷனின் களைப்பையும் சோர்வையும் முதலில் தீர்க்க வேண்டும் என்று எண்ணாத மனைவியும் ஒரு மனைவியா?' என்று ஆத்திரம் வந்தது. அந்த ஆத்திரத்தின் மீது ஏதாகிலும் பேசினால் சண்டைதான் வரும். ஆதலால் வாயை மூடிக்கொண்டு வெறுப்பும் அர்த்தமும் தொனிக்க ஓர் 'உம்' கொட்டினார்.

இது மங்களத்தம்மாளின் ஆர்வத்தை இன்னும் பன் மடங்கு அதிகப்படுத்தியது.

''என்ன எழுதியிருக்கிறார்கள்? பெண் பிடித்துவிட்டதாமா? ஜாதகம் பொருந்தியிருக்கிறதாமா? சீரைப் பற்றி ஏதாகிலும் கோடி காட்டியிருக்கிறார்களா?'' என்று கேள்விமேல் கேள்விக் கணைகளை விடுத்தாள்.

''ஏன் இப்படிப் பறக்கிறாய்? 'ஜாதகம் பொருந்தவில்லை' என்று எழுதிவிட்டார்கள்'' என்றார்.

''இந்த இடமும் போய் விட்டதா?'' என்று அங்கலாய்த்தாள் மங்களத்தம்மாள்.

ஸ்ரீமான் சீதாராமய்யர்—மங்களத்தம்மாள் தம்பதிக்கு வரிசையாக மூன்று பெண்கள் — 24, 22, 20 வயதில் இருந்தார்கள். எல்லாரும் கல்லூரிகளில் வெவ்வேறு வகுப்புக்களில் படித்துக் கொண்டிருந்தார்கள். முதல் பெண்ணுக்கே அவர்கள் கல்யாணம் செய்த பாடில்லை.

ஆனால் அவர்கள் வரன் வேட்டையாடுவதில் என்னவோ குறைவில்லை. இதுவரை மூத்த பெண் கமலாவுக்கு எங்கேயாவது இருபது ஜாதகங்களுக்கு மேல் பார்த்திருப்பார்கள். ஆனால் இதுவரை ஒன்றாவது தகையவில்லை. ஒன்று பார்த்தால் ஒன்றிராது. இவர்களுக்கு ஜாதகம் பொருந்தினால் பிள்ளை வீட்டார் பொருத்தமில்லை என்று சொல்லிவிடுவார்கள். இருபக்கத்திலும் ஜாதகம் பொருந்தி, கிட்ட வந்தால், பையன் பெண் பிடிக்கவில்லை என்று கூறி விடுவான். இத்தனை முட்டுக்கட்டைகளும் தாண்டி வந்தால், லௌகீகத்தில் தடைப்பட்டுப் போகும். லௌகீகமும் ஒத்து வந்தால் பையன் குடும்பத்தைப் பற்றி ஏதாகிலும் வதந்தி வந்து நின்று போகும். அப்பப்பா! இரண்டு மூன்று வருடங்களாக அவர்கள் படுகிற பாட்டைப் பார்த்தால் மனுஷனால் சகிக்க முடியாது! போதாக் குறைக்கு சகதர்மிணியின் நச்சரிப்பு, வீட்டிலிருக்கும் நேரம் முழுதும் அவரைப் பிடுங்கித் தின்றுவிடும். என்ன செய்வார் பாவம், சீதாராமய்யர்!

கடைசியில் சீதாராமய்யர் ஒரு முடிவுக்கு வந்தார். 'இந்தப் பையனைக் கேட்டால் என்ன?' என்று மனத்தில் தீர்மானித்துக் கொண்டார்.

ரகுராமன் ஒரு கல்லூரியில் பொருளாதார விரிவுரையாளராகப் பணியாற்றி வந்தான். அவன் பணியாற்றி வந்த கல்லூரியில் ஆண்களும் பெண்களும் சேர்ந்தே படித்து வந்தனர். அவன் ஒரு நல்ல விரிவுரையாளன் என்று பெயர் எடுத்திருந்தான் கல்லூரியில். அவன் வகுப்பு எப்பொழுதும் நிரம்பியிருக்கும். மட்டம்போடும் மாணவ, மாணவிகள் அவன் வகுப்பில் குறைவு!

பொதுப் பரீட்சை நெருங்கி வரும் மாதங்களில் அவனுக்கு ஏகக் கிராக்கி ஏற்படுவதுண்டு. டியூஷனுக்கு மேல் டியூஷனாக வரும். மாணவர்களும் மாணவிகளும் அவன் உதவியை நாடுவார்கள்.

அப்படித்தான் சீதாராமய்யர் மகள் கமலாவும் அவன் உதவியை நாடினாள். சென்ற இரண்டு மாதங்களாக சீதாராமய்யர் வீட்டுக்குப்போய் ரகுராமன் கமலாவுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

பிளாட்பாரத்தில் வரிசையாகப் பழம் புத்தகங்கள் பரப்பி விற்கும் கடையைக் கண்டால் ரகுராமனுக்கு அலாதியான



ஆனந்தம். நேரம் போவதே தெரியாமல் ஏதாவது அபூர்வமான நல்ல புத்தகங்கள் கிடைக்கின்றனவா என்று தேட ஆரம்பித்துவிடுவான். அன்று அப்படித் தேடியதில் அவனுக்கு ஓர் அபூர்வமான புத்தகம் கிடைத்தது. அது என்ன தெரியுமா? 'அல்லி அரசாணிமாலை!'

ஆண் வாடையே வீசக் கூடாது என்று கர்வம் கொண்டிருந்த அல்லியை அர்ஜுனன் சாகசமாக மணந்து கொள்ளும் கதை அவனுக்கு எப்போதுமே பிடிக்கும். அந்தப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு, தன் அறையை நோக்கித் திரும்பினான்.

இந்த அர்ஜுனனுக்குத்தான் எத்தனை காதலிகள்! கட்டிய மனைவி திரௌபதி இருக்க, கண்ணன் தங்கை சுபத்திரையை மணக்கிறான். நாகலோகத்தில் நாக கன்னிகையை மணக்கிறான்! அல்லி வேறு! இப்படி எத்தனை பேர்—என்று வியந்து கொண்டே தன் அறையை அடைந்தான்.

'அர்ஜுனனைச் சரியான ஸ்திரீ லோலன் என்று சொல்லலாம் போலிருக்கிறதே!' என்று ஒரு கணம் நினைத்தான். 'சீசீ! தவறு! ஒவ்வொருவரையும் அசாத்திய சாகசச் செயல் புரிந்தல்லவோ அடைகிறான்! வீரம் அல்லவா அவன் கல்யாணங்களின் புறப் படலம்' என்று நினைத்தான்.

கல்லூரி ஆசிரியர்கள் அறையில் அன்று ரகுராமனை நடுவில் உட்கார வைத்து மற்ற சக ஆசிரியர்கள் ஒரேயடியாக 'கோட்டா' செய்யத் தலைப்பட்டிருந்தனர்.

கல்லூரியில் இருக்கும் எல்லா அழகான பெண்களும் ரகுராமனையே டியூஷனுக்கு வைத்துக் கொண்டால் மற்ற சக ஆசிரியர்களுக்குப் பொறாமை இருப்பது நியாயந்தானே!

''ரகுராமன் ஆள் அழகாக இருக்கிறான். கல்யாணமாகாதவன் — மாணவிகள் அவன் டியூஷனை நாடுவதில் என்ன வியப்பிருக்கிறது!'' என்றார் ஓர் ஆசிரியர்.

''பெண்களுக்குக் கல்யாணம் பண்ண முடியவில்லையே, படிக்கவாவது செய்யட்டும் என்று பெற்றோர்கள் கல்லூரிக்குப் பெண்களை அனுப்புகிறார்கள். படிக்க வந்த இடத்தில் அவர்களாக ஒரு கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டால் பெற்றோர்களுக்கும் சௌகரியம்தானே?'' என்றார் இன்னொரு ஆசிரியர்.

இப்படிப் பேசத் தொடங்கின ஆசிரியர்களின் பேச்சில் விரஸம் தட்டும் போலிருக்கவே, ரகுராமன் அவ்விடத்தை விட்டே எழுந்து நகர்ந்தான்.

'ஆம்; அவர்கள் சொல்வது போல் எத்தனையோ பெண்களுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்கிறேன். நெருங்கிப் பழகத்தான் செய்கிறேன். இருப்பினும் அவர்கள் நினைப்பது போன்ற ஓர் உணர்ச்சி என்னளவும் என் மனத்தில் எழவில்லையே! இதன் காரணம் என்ன?'

இப்படிச் சிந்தித்தவாறே தான் டியூஷன் சொல்லிக் கொடுக்கும் கமலாவின் வீட்டுக்குச் சென்றான்.

சீதாராமய்யர் ஆபீஸ் விட்டு வீட்டுக்குள் நுழைவதற்கும் ரகுராமன் தன் டியூஷனை முடித்துக் கொண்டு வெளியேறுவதற்கும் சரியாக இருந்தது.

''என்ன புரொபஸர் ஸார்! உங்களோடு ஒரு விஷயம் பேச வேண்டும். கொஞ்சம் உட்காருகிறீர்களா? நான் கைகால் அலம்பிக் கொண்டு வந்துவிடுகிறேன்! அவசரம் ஒன்றும் இல்லையே!'' என்றார் சீதாராமய்யர்.

''ஒரு அவசரமும் இல்லை. நான் இருக்கிறேன். நீங்கள் வாருங்கள்'' என்று சொல்லி விட்டு ஹாலில் போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.

சற்று நேரத்தில் சீதாராமய்யர் வந்தார். ''உங்களைப் பற்றி உங்கள் தலைமைப் பேராசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். உங்களிடம் உங்கள் ஜாதகம் இருக்கிறதோ?'' என்றார்.

''யாருக்காகக் கேட்கிறீர்கள்?'' என்று கேட்டான் ரகுராமன்.

''ஏன்? நம்ம கமலாவுக்காகத்தான் கேட்கிறேன். பெண் பார்த்தல், வீட்டு மனுஷ்யாளை அறிதல் ஆகிய எல்லாம் நம் விஷயத்தில் முடிந்துவிட்டது. ஜாதகப் பொருத்தம் இருந்தால் கல்யாணத்தை முடித்துவிட வேண்டியதுதானே!...ஹி....ஹி....'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

ரகுராமனுக்கு ஒரு கணம் என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. கடைசியில், ''ஜாதகம் என்னிடம் இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. தேடிப் பார்க்கிறேன். அகப்பட்டால் அனுப்பி வைக்கிறேன்!'' என்று சொல்லிவிட்டு வெளியே போனான்.


பழம் புத்தகக் கடையில் அன்று ஒரு நல்ல புத்தகம் ரகுராமனுக்குக் கிட்டியது. அது தான் மகாபாரதம். மகாபாரதக் கதைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் படித்திருந்தானே ஒழிய முழுதும் ஒருங்கே படித்தவனல்ல. இன்று அந்தப் புத்தகத்தைக் கண்டதும் விலை கொடுத்து வாங்கிக் கொண்டு அவன் அறைக்குப் போய்ப் படிக்கத் தொடங்கினான். ஒரு நல்ல நாவலை விடச் சுவாரஸ்யமாகப் பாரதக் கதை செல்வதைக் கண்டு வியந்தான்.


இப்படிப் படித்துக் கொண்டு வந்தவன், தன் மனத்தில் பல நாட்களாகத் துழாவிக் கொண்டிருந்த கேள்விக்குப் பதில் அதில் கிடைத்து விட்டதை உணர்ந்தான். உடனே ஒரு காகிதம் எடுத்து அந்த வாக்கியங்களைக் குறித்துக் கொண்டான்.

கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த கமலாவை எத்தனையோ இளைஞர்கள் பெண் பார்த்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

அந்தப் பையன்கள் வந்து போன பிறகு ''கமலா, உனக்கு இந்த வரன் பிடித்திருக்கிறதா?'' என்று சீதாராமய்யர் கேட்பார்.

கமலா, ''உங்களுக்குப் பிடித்திருந்தால் எனக்குப் பிடித்த மாதிரிதான். நீங்கள் யாரைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள் என்கிறீர்களோ, அவனையே கல்யாணம் செய்து கொள்கிறேனப்பா. உங்கள் விருப்பத்துக்கு மிஞ்சி நான் என்ன சொல்ல இருக்கிறது?'' என்பாள்.


எவ்வளவு கடினமான
வேலையாய் இருந்தாலும் சரி,
ஒரு கப் A-1 தேநீரைப்
பருகி புத்துணர்ச்சி
அடையுங்கள் —
அதிக நறுமணமும்
ருசியும் உள்ளது
உங்கள் பணத்தையும்
மீதப்படுத்துகிறது
Brooke Bond Tea
Brooke Bond
ப்ரூக் பாண்ட்
A-1 தேயிலைத்தூள்
அதிக கோப்பைகள் சிறந்த
தேநீர் தருவது



Lady Rose
FROST-PEARL NAIL POLISH

அன்று சீதாராமய்யர், கமலாவைப் பார்த்து, ''அம்மா, உன்னை ரகுராமனுக்கே கல்யாணம் செய்து கொடுத்து விடலாம் என்று பார்க்கிறேன்!'' என்றார்.

''எந்த ரகுராமன்?''

''உனக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்க வருகிறாரே, அதே ரகுராமன்தான்!'' என்றார் சீதாராமய்யர்.

இதைக் கேட்டதும் தேள் கொட்டினாற்போல் 'சுரீர்' என்றது கமலாவுக்கு. வழக்கமாகச் சொல்லும் பதில் அவள் வாயிலிருந்து வரவில்லை. கண்கள் மட்டும் மளமளவென்று அருவியாகப் பொழிந்து விட்டன கண்ணீரை.



''புஸ்தகத்தை மேஜை மேல் வைத்துக் கொண்டு படிக்காமல் எதற்கு இப்படி ஒளித்து வைத்துக் கொண்டு படிக்கிறாய்?''

''ஆபீஸில் இப்படிப் படித்து அதே வழக்கமா போச்சம்மா!''

கண்ணீரைப் பார்த்ததும் சீதாராமய்யர் திடுக்கிட்டு விட்டார்.

''அம்மா, அவரை உனக்குப் பிடிக்கவில்லை என்றால் நிறுத்திவிடுகிறேன். நீ அழாதே! ....நீங்கள் சிரித்துப் பேசிப் பழகுவதைப் பார்த்து நான் ஏதோ நினைத்து விட்டேன். நீ கவலைப்படாதே! நான் நிறுத்திவிடுகிறேன்!'' என்று படபடவென மொழிந்தார் ஸ்ரீமான் சீதாராமய்யர்.

''அப்பா! அப்பா! நீங்கள் தவறாக நினைக்காதீர்கள். அவருக்கு என்ன ஏழுக்கில்லையா? ஆள் அழகில்லையா? குணமில்லையா? எல்லாமிருக்கின்றன. இருந்தாலும்... இருந்தாலும் என்னவோ அவரைக் கணவராக ஏற்க மனம் வரவில்லையே, அப்பா!'' என்று சொல்லிக் கொண்டே 'ஓ'வென்று அலறிவிட்டாள்.

தனக்கு ஒரு வரன் தேடுவதில் தந்தை படும் தொல்லை அவள் அறியாததல்ல. தந்தைக்குக் கூடியவரை உதவியாக இருக்கவே முயன்று வந்தாள். ஆனால் இந்த வரன் விஷயத்தில், தான் தந்தைக்கு மாறுபட்ட கருத்தைத் தெரிவிக்க நேர்கிறதே என்பதில் அவள் அடைந்த துயரம்தான் அதிகம். அலறியே விட்டாள்.

''அதனால் என்ன? வேறு வரன் பார்த்தால் போச்சு!'' என்று மகளைத் தேற்றினார்.

இரண்டு நாளாக ரகுராமன் டியூஷனுக்கு வரவில்லை!

மூன்றாம் நாள் சீதாராமய்யருக்கு இரண்டு கடிதங்கள் உறையிலிட்டு வந்திருந்தன.

முதல் கடிதத்தைப் பிரித்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:

அன்புமிக்க சீதாராமய்யர் அவர்களுக்கு,

நமஸ்காரம்.

நீங்கள் அன்று ஜாதகம் கேட்டதிலிருந்து என் மனசு ஒரே குழப்ப நிலையிலிருந்தது. உங்கள் குமாரி கமலாவைப் போன்ற பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்பவன் ரொம்பவும் பாக்கியசாலியாவான். அந்தப் பாக்கியம் என்னையே வந்தடையும் போது ஏற்க முடியாமல் மனம் இனம் தெரியாத காரணத்தால் தத்தளித்தது. அன்று எதேச்சையாக என் கையில் மகாபாரதம் கிட்டியது. அதில் என் மனத்தில் எழுந்த குழப்பத்துக்குக் காரணமும் பதிலும் கிட்டின. அதைத்தான் உங்களுக்கு எழுத விரும்புகிறேன்.

பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் இருக்கையில், அர்ஜுனன், நபும்ஸகனாகி, பிருகன்னளை என்ற பெயரில், விராடராஜன் புதல்விக்கு நாட்டியம் கற்றுத் தருகிறான். ஒரு வருஷம் இப்படியிருந்துவிட்டு, கடைசியில் கௌரவர் விராடனின் பசுக்களைத் திருடிக் கொண்டு போகும் போது, பிருகன்னளை சாரதியாகி, உத்தரகுமாரனை அழைத்துப் போய்க் கௌரவ சேனையை வென்று மாடுகளை மீட்டு வருகிறான். மறு நாள்தான் பிருகன்னளையாக வந்தது அர்ஜுனன் என்பது புலனாகிறது. தனது மகனுக்கு இப்படியொரு வெற்றி வாகை தேடித் தந்த அர்ஜுனனுக்கு, விராடராஜன் தன் மகள் உத்தரையையே கல்யாணம் செய்து கொடுக்க விரும்புகிறான். அப்போது அர்ஜுனன் கூறிய மொழிகள் என் மன நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது போலிருக்கின்றன. அர்ஜுனன் சொல்கிறான்:

''அது தகாது. உத்தரை என்னிடத்தில் நாட்டியமும் கானமும் கற்றவள். அவளுக்கு நான் ஆசாரியனும் தகப்பனும் போல் ஆவேன்.''

பல பெண்களை மணப்பதில் ருசி கண்ட அர்ஜுனனே, இப்படிச் சொல்கிறான்.

மற்றவர்கள் நிலையைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

கமலாவுக்கும் எனக்கும் உள்ள இந்தப் புனித உறவைத் தவறாக எடை போடாதீர்கள். மன்னிக்கவும்.

இப்படிக்கு,

**ரகுராமன்**

அடுத்த கடிதம் திருவனந்தபுரத்திலிருந்து வந்திருந்தது.

''எங்கள் பெரிய ஜோஸ்யர் ஜாதகங்கள் ரொம்ப நன்றாகப் பொருந்தியிருக்கின்றன என்று சொல்லி விட்டார். அதனால் முதலில் எழுதிய கடிதத்தைப் பொருட்படுத்தாமல் மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடத்த உடனே வரவும்!'' என்று எழுதியிருந்தது.

இந்த இரண்டு கடிதங்களையும் பார்த்த கமலாவின் கண்கள் கண்ணீரைத் தாரை யாகப் பொழிந்தன!

தனது ஆசிரியர் ரகுராமன் தன் மனத்தை அருமையாகப் படம் பிடித்துக் காட்டியதற்கு உள்ளத்தில் ஏற்பட்ட நன்றிப் பெருக்கின் காரணமாகக் கண்கள் பனித்தனவா?

திருவனந்தபுரம் வரன் நிச்சயமாகும் என்பதில் விளைந்த ஆனந்த பாஷ்பமா? — எது என்று புரியாமல் அவளே திகைத்தாள்.



மட்டப்பாறை வெங்கிட்டராமய்யர் பௌத்திரியும் தூத்துக்குடி பிரபல உப்பு உற்பத்தியாளர் திரு J. N. சுந்தரராமய்யர் அவர்கள் புத்திரியுமான சௌ. ஹேமலதா B. A. க்கும் பாபநாசம் தாலூக்கா அன்னிக்குடி கிராமம் பிரபல மிராசுதார் திரு ரங்கநாதய்யர் குமாரரும் துர்க்காபூரில் மத்ய சர்க்கார் நிர்மாண ஆராய்ச்சி நிலையத்தில் வேலை பார்க்கும் சிரஞ்சீவி R. ராமச்சந்திரன் M. E. க்கும் சமீபத்தில் தூத்துக்குடியில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. வாழ்க மணமக்கள்


மரத்தின் உச்சாணியில் இருந்த தேங்காய், நதிக் கரையில் கிடந்த கருங்கல்லைச் சாடியது:

"தேய்ந்து தேய்ந்து மண்ணுருண்டையும் ஆவாயே ஒழிய, இந்த ஆற்றின் காலை விடமாட்டாய் போலிருக்கிறதே! இதைக் காட்டிலும் உனக்கு வேறு என்ன அவமானம் வேண்டும்?"

சில நாட்களுக்குப்பின் அர்ச்சனைத் தட்டில் அமர்ந்திருந்த தேங்காய், அதே கல் கோயிலில் சிவலிங்கமாக வீற்றிருப்பதைப் பார்த்தது. அதற்கு வந்த கோபத்துக்கும் வியப்புக்கும் ஓர் எல்லை இல்லை. நிலைமையைப் புரிந்து கொண்ட கல் கூறியது:

"அட, அறிவு கெட்ட தேங்காயே! உச்சாணிக் கிளையில் இருந்தாலும் இன்று நீ என் நிவேதனப் பொருளாகி விட்டாய், பார்த்தாயா? இப்பொழுதாவது புரிந்து கொள், தேய்ந்து தேய்ந்து கல்லும் கடவுளாகிவிட முடியும் என்று! வீண் கர்வம் கொண்டால் மண்டை சிதற வேண்டியதுதான்!"

— சுந்தரம்






## நட்சத்திர விளம்பரங்கள்

பலவகைப் பண்டங்களின் விளம்பரத்துக்குத் தங்கள் பெயர்களை இரவல் கொடுக்கும் சினிமா நடிகர்களுக்கும் மற்றக் கலைஞர்களுக்கும் நியூயார்க் ராஜ்ய சட்ட இலாகா ஓர் எச்சரிக்கை விடுத்திருக்கிறது. தங்கள் பெயரால் விளம்பரம் செய்யப்படும் பண்டங்களை அவர்கள் உண்மையாகவே உபயோகிக்க வேண்டும், இல்லாவிடில் அவர்கள் மீது வழக்குத் தொடரப்படும் என்பதே அது.

தகவல்: எஸ். கோவிந்தன்
ஆதாரம்: நியூ டைம்ஸ்

வாஷிங்டன் நகரில் ஒரு கட்டிடத்தில் இருந்த மின்சார இஸ்திரிப் பெட்டி ஒன்று, தானே பற்றி எரிந்து அறைக்குள்ளே திரூட்டி, பிறகு கீழே விழுந்து, பம்புக் குழாயைப் பொசுக்கி உருக்கி, தண்ணீரைக் கிளப்பி விட்டுத் தான் மூட்டிய தீயைத் தானே அணைத்து விட்டது!

ஆதாரம்: 'டைம்'
தகவல்: 'ரமன்'





பம்பாய் அருகில் ஒரு ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஒரு கிரிக்கெட் விசிறி, ஆஸ்திரேலியாவுடன் இந்தியா சரிசமமாக ஆட முடியாமல் போனபோது சீற்றம் கொண்டு, "சீ! என்ன மோசமாக ஆடுகிறார்கள்" என்று தமது கையிலிருந்த டிரான்சிஸ்டர் ரேடியோவை ரயிலிலிருந்து வீசி எறிந்து விட்டாராம்!

தகவல்: த. முரளி

ரோமில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் இரு ரஷ்யப் பயில்வான்கள், வேறொரு நாட்டு இரு பயில்வான்களுடன் மல்யுத்தம் செய்தனர். பல ரவுண்டுகள் ஆடியும் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்து, எவரை வெற்றிபெற்றவர்களாக அறிவிப்பது என்ற பிரச்னையைக் கொடுத்தது. முடிவில், எந்த நாட்டுப் பயில்வான்கள் குறைவான எடையுள்ளவர்களோ, அவர்களே வெற்றிபெற்றவர்கள் என்று முடிவு செய்து எடை பார்த்ததில் ரஷ்யப் பயில்வான்கள் எடை குறைவாக இருக்கவே, அவர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது! எடை குறைவாக இருந்தும் சமமாக மல்யுத்தம் செய்தார்கள் என்பதால்தான் இம்முடிவு! ஆனால் அவர்கள் மிகச் சில பவுண்டுகளே எடைக் குறைவாக இருந்தார்கள். வெற்றிபெற்ற அந்த இரு ரஷ்ய பயில்வான்களும் அன்று காலை வெகுநேரம் தூங்கி விட்டதால் நேரமாகிவிட்டதென்று காலை உணவு சாப்பிடாமலே வந்து கோதாவுக்கு இறங்கி விட்டனராம். அதுவே அவர்கள் எடைக் குறைவின் ரகசியம்!

தகவல்: ச. ஸ்ரீதரன்
ஆதாரம்: சோவியத் பூமியன்







ஜகதா அன்று ஆபீசுக்குப் போகும்போது எவ்விதமான விசேஷ அலங்காரமும் செய்து கொள்ளவில்லை. முதல் நாளும் அதற்கு முந்திய நாள்களும் சென்றாற்போல் அன்றும், ஒரு சாதாரணமான புடவை, தலைநிறையக் கனகாம்பரப் பூ, கையோடு எடுத்துச் செல்லும் 'டிபன்' பாத்திரம்—ஆகியவற்றோடுதான் காரியாலயத்துக்குச் சென்றாள். உள்ளத்திலாவது அன்று ஒரு விசேஷ உணர்ச்சி குதூகலம் நிறைந்ததா — பிறந்ததா என்றால், அதுவும் இல்லை.

ஜக்தா மறந்துவிடவுமில்லை — தன்னைப் பொறுத்தவரையில், தன் வாழ்க்கையில், அது ஒரு முக்கியமான நாள் என்பதை. காலையில் விழித்து எழும் போதே அன்றைய தினத்தின் முக்கியத்துவம் அவளுக்கு நினைவு வந்தது. அதைத் தொடர்ந்து, சென்ற ஆண்டு இதே மாதம் இதே தேதியில் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் தானாகவே வந்து அவள் கண் முன் நின்றது. அன்று கணேசன் அழகான ஒரு கைக் கடிகாரத்தை அவளுக்குப் பரிசாக அளிக்க முன்வந்தான். அதன் விலை நூற்றைம்பது ரூபாய் என்பதையும், அது சாதாரணமாகச் சென்னை நகரக் கடைகளில் கிடைக்காத ஓர் அபூர்வக் கடிகாரம் என்பதையும் பெருமையோடு சொன்னான். ஜகதாவுக்கு இந்தப் பரிசை அளிக்க வேண்டும் என்பதற்காக அந்த மாதமும், அதற்கு முந்திய மாதமும் கிராமத்தில் உள்ள தன் பெற்றோருக்குப் பணம் அனுப்பவில்லை என்பதைத் தன் அன்பின் அடையாளமாகவும், அவளுக்காக எதையும் செய்யத் தயாராக நிற்கும் தன் தியாக உணர்வின் எடுத்துக்காட்டாகவும் மறைமுகமாகப் புலப்படுத்தினான். அப்பொழுது வைராக்கியமாக அந்தப் பரிசைத் தான் வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டதையும், ஏமாற்றத்தினால் அவன் நெடுமூச்செறிந்ததையும் அவள் இப்போது நினைத்துப் பார்த்தாள். 'நான் அப்படி மறுத்ததுதான் சரி' என்று இப்போது தனக்குத் தானே சொல்லிக் கொண்டு ஆறுதலும் பெற்றாள் ஜகதா. கணேசன் இன்றைய தினம் சென்னையில் இல்லாதது — நான்கு மாதங்களுக்கு முன்பே திருச்சிக்கு மாற்றலாகிப் போனது — அவளுக்கு எவ்வளவோ ஆசுவாசம் அளித்தது — பெரிய சுமை தானாகவே தலையை விட்டு இறங்கிய மாதிரி யிருந்தது.

ஆபீசுக்குப் போனதும் சென்ற ஆண்டின் நினைவுகள் — கணேசன் சம்பந்தப்பட்ட ஞாபகங்கள் — வேலை மும்முரத்தில் அடியோடு மறைந்து விட்டன. கருமமே கண்ணாக வேலையைச் செய்தாள். ஒரு மணி அடித்ததும் மற்றவர்களைப் போல் தானும் எழுந்து ஆபீசைச் சேர்ந்த கான்டீனுக்குப் போனாள். கையோடு கொண்டு போன சிற்றுண்டியை அங்கே இருந்து சாப்பிட்டுவிட்டு, ஒரு காப்பி மட்டும் வாங்கிக் குடிப்பது அவள் வழக்கம். ஒரு மூலையில் கிடந்த மேஜையை நோக்கிச் சென்றாள். அதன் இருபுறமும் போடப்பட்டிருந்த இரண்டு நாற்காலிகளிலும் யாருமே இல்லை என்பதோடு, பக்கத்தில் இருந்த ஐந்தாறு மேஜைகளும் காலியாகவே இருந்தன. மூலையில் கிடந்த மேஜையருகே ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள். சிற்றுண்டிப் பாத்திரத்தையும் திறந்தாகி விட்டது. சாப்பிடப் போகும் தருணம். அப்போது எங்கோ இருந்து திடீரென்று வந்து அவள் எதிரே நின்றான் எம். ஆர். சந்திரன், உலகத்

தின் கடைக்கோடியிலிருந்து ஓடி வருபவனைப் போல் பறக்கப் பறக்க மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கிக் கொண்டு வந்து நிற்கும் சந்திரனை அவள் திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தாள். அவன், வந்த வேகத்திலேயே பேசினான்.

'' ஜகதா, கொஞ்சம் பொறுங்கள்.... கொஞ்சம்...'' என்று சொல்லிக் கையை முன் பக்கம் நீட்டி அவள் சாப்பிடப் போவதைத் தடுத்தான்.

ஜகதாவின் நிமிர்ந்த முகம் குனியவில்லை. ஆச்சரியத்தால் விழிகள் அகன்றிருந்தன. அவன் ஒரு தடவை பெருமூச்சு விட்டுத் தன் பரபரப்பைச் சிறிது தணித்துக் கொண்டான். இருவர் விழிகளும் ஒருகணம் மௌனமாகச் சந்தித்தன.

ஏன் இப்படித் தடுக்கிறார்? இப்படித் தடுப்பதற்கென்றே ஓட்டமாக ஓடிவந்திருக்கிறாரே, ஏன்? விளையாட்டுத்தனம்தானா ? இல்லை, திரை மறைவில் ஏதேனும் விபரீதம் ஒளிந்திருக்குமா ?

ஜகதா திகைத்தாள். சந்திரனுடைய அகராதியில் விளையாட்டுத்தனமும் இருக்க முடியாது, விபரீதத்தையும் காண முடியாது என்று அவளுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் திகைப்பு அதிகமாகி விட்டது. ஒன்றுமே புரியவில்லை. பேச வாய் வராமலும், சாப்பிடக் கை வராமலும் சிலை போன்று உட்கார்ந்திருந்தாள். விளங்காத புதிரையும், அதனால் ஏற்பட்ட வியப்பையும் வெளிப்படுத்தும் ஒரு புன்னகை மட்டும் அவளுடைய இதழ்க்கடையில் பூத்தது. இந்தச் சிறு அசைவைக் கண்டதுமே அவன் பேசத் தொடங்கி விட்டான்.

''ஜகதா ! இன்னிக்குத்தானே உங்கள் பிறந்தநாள்?'' என்று எதிர்பாராதவிதமாகக் கேட்டான் சந்திரன். அவன் குரலில் ஆவலும் தொனித்தது; ஏமாந்து விடுவோமோ என்ற பயமும் ஒலித்தது.

ஜகதாவின் புன்னகை சிரிப்பாக மலர்ந்து விட்டது.

'' இவ்வளவு அக்கறையோடே கேட்கிறீங்களே, எதுக்கு? என் பிறந்த நாளைப் பற்றி உங்களுக்கு இவ்வளவு அக்கறை வருவானேன்?'' என்று அவள் கேட்டாள்.

''இல்லை; கேட்கிறேன்.... சொல்லுங்கள்: இன்னிக்குத்தானே ?''

''இன்னிக்குத்தான். ஆனா அது உங்களுக்கு எப்படித் தெரிஞ்சது ?''

சந்திரன் அதற்குப் பதில் சொல்லாமல் கான்டீனின் வேறொரு பகுதியை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்தான். ''நல்ல வேளை. வேறொரு நாளா இருக்குமோன்னு நினைச்சேன்'' என்றும் சொல்லிக் கொண்டான். அப்புறம் ஒன்றும் சொல்லாமல் சிரித்த முகத்தோடு மேஜையைக் குனிந்து பார்த்தவண்ணம் எதிரே கிடந்த நாற்காலியில் அமர்ந்தான்.

அவனுடைய ஒவ்வொரு செய்கையையும் ஒரு விளையாட்டுக் கூத்தாக ரசித்துக் கொண்டு, ''என் கேள்விக்கு நீங்க பதிலே சொல்லலையே ? இன்னிக்குத்தான் என் பிறந்த நாள் என்கிறது உங்களுக்கு எப்



# புதிய ரோஜா

## கு. அழகிரிசாமி



படித் தெரிஞ்சது ?'' என்று ஜகதா கேட்டாள்.

''தெரியும் !'' என்று ஒரே வார்த்தையில் அவன் பதில் சொன்னான். விவரமாக எடுத்துச் சொல்ல அப்போது அவனுக்குத் தோன்றவில்லை. கான்டீன் பரிசாரகன் காலதாமதம் செய்கிறானே என்ற கவலையும், அவசரப்படும் துடிப்புந்தான் அவனிடம் நிறைந்திருந்தன.

சுமார் ! ஒரு மாதத்திற்கு முன் அதே காரியாலயத்தில் அவனும் அவளும் ஒரே அறையில் வேலை செய்து கொண்டிருந்த சமயத்தில், உலகப் பெரியோர்களின் பிறந்த நாளைப் பற்றி மற்றச் சகாக்களிடையே ஏதோ பேச்சு அடிபட்டது. இந்த விஷயத்தை அவர்கள் ஏன் பிரஸ்தாபித்தார்கள்

என்பது மற்றவர்களுக்குத் தெரியாது. அந்தப் பேச்சைத் தொடர்ந்து ஒவ்வொருவரும் தாமாகத் தங்கள் தங்கள் பிறந்த நாட்களைத் தெரிவித்துக் கொள்ள நேர்ந்தது. ஜகதாவும் தனது ஜன்ம தினத்தைச் சொன்னாள். அதைச் சந்திரன் அப்படியே நினைவில் பதிய வைத்துக் கொண்டான். இது அவள் நினைத்துப் பார்த்திராத விஷயம்.

''ஏன் பேசாமல் இருக்கிறீங்க?'' என்று அவன் சிரித்துக் கொண்டே கேட்ட போது மேஜைக்குப் பலகாரத் தட்டுக்கள் வந்து விட்டன. பரிசாரகன் இருவர் முன்பும் தனித் தனி செட்டுகளாகத் தட்டுக்களை வைத்தான். மேஜை நிறைந்து விட்டது.

''அப்புறம் காப்பிதானே ?'' என்று சந்திரனைக் கேட்டான் பரிசாரகன்.

''காப்பியும் புருட் ஸாலட்டும்'' என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டு, ''சாப்பிடுங்க'' என்று ஜகதாவைப் பார்த்துச் சொன்னான். அடுத்தநிமிஷம் அவள் கையைப் பிடித்துக் கொண்டு போய்த் தட்டில் வைத்து விடுபவனைப் போல் அவசரப்பட்டான் அவன்.

''முடியாது. என் கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லியாகணும், முதலிலே!''

சென்ற மாதம் ஆபிசில் பிறந்த நாட்களை ஒவ்வொருவரும் தெரிவித்துக் கொண்டதைச் சொல்லி, அந்தச் சமயத்தில்தான் ஜகதாவின் பிறந்த நாளை அவள் வாய்மொழி மூலமே தெரிந்து கொண்டதை அவன் சுருக்கமாகச் சொல்லி முடித்து மீண்டும் அவளைச் சாப்பிடச் சொல்லி அவசரப்படுத்தினான்.

''உங்களுக்கு எவ்வளவு ஞாபகம்!'' என்று ஆச்சரியப்பட்ட ஜகதா, ''எல்லாருமே அவங்க அவங்க பிறந்த நாளைச் சொன்னாங்களே, அதெல்லாம் உங்களுக்கு ஞாபகம் இருக்கோ?'' என்று கேட்டாள்.

''அவங்க சொன்னதை நான் காதிலே வாங்கவே இல்லே..... சரி, சாப்பிடுங்க.....!''

ஜகதாவுக்குச் சந்தோஷமாக இருந்தது. அவன் முகத்தை ஒரு முறை கண்களால் முகப்பதுபோல் பார்த்தாள். அப்புறம் இலேசாகக் குனிந்து, ''ஐயோ ! இவ்வளவும் சாப்பிடத்தானா? வயிறு கொள்ளுமோ?'' என்றாள்.

இந்த வார்த்தைகள் அவன் காதில் ஏறவே இல்லை. வேறு எதையோ பேசலானான் :

''அதுவும் சரிதான்.''

''எதுவும் சரிதான்?'' என்று அவள் கேட்டாள்.

''பிறந்த நாள் என்கிறதுக்காக விசேஷமா அலங்காரம் பண்ணிக் கொள்ளணும்னு என்ன கட்டாயம்?'' — அவன் தனக்குத் தானே பேசிக் கொள்வதைப்போல் அவளை நோக்கிச் சொன்னான். இப்படி ஏன் தன் மனசைத் தானே சமாதானப்படுத்திக் கொள்கிறான் என்பது அவளுக்குப் புரியவில்லை.

''சாப்பிடுங்க.''

இருவரும் சாப்பிடத் தொடங்கினார்கள். சுற்றுப்புறத்தைப் பற்றி இருவருக்கும் ஞாபகமில்லை: அவனுக்குக் கரை காணாத ஆனந்தம். அவளுக்கோ இதுவரையிலும் பங்கெடுத்து அறியாத ஒரு புது விளையாட்டு.

காப்பியும் புருட்ஸாலட்டும் வந்தன. அப்போது தட்டுக்களில் கால்வாசியே காலியாகியிருந்தன: அதற்கு மேல் சாப்பிட முடியவில்லை.

அவன் காப்பியை எடுத்து ஆற்றத் தொடங்கினான். எல்லாவற்றையும் சாப்பிட்டேயாக வேண்டும் என்று அவன் கட்டாயப்படுத்துவான் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அப்படி நடக்கவில்லை. அவள் நினைவு வேறு எங்கோ தாவிவிட்டது.

''ஜகதா!.... இன்னொரு விஷயம். நீங்க இன்னிக்கு எங்க வீட்டுக்கு வரணும்.''

''வீட்டுக்கா ?'' — அவளுடைய ஆச்சரியம் அதிர்ச்சியின் எல்லையையே தொட்டுவிட்டது. அவனுடைய பேச்சையும் செயலையும் ஒரு தமாஷ் நாடகத்தை ரஸிப்பது போல் ரஸித்துக் கொண்டிருந்த அவளுடைய முகத்தில், சட்டென்று சிரிப்பின் சாயல் மறைந்து விட்டது.

'' ஆமா, எங்க வீட்டுக்கு வரணும். வீட்டிலே எல்லாருக்கும் சொல்லியிருக்கிறேன். உங்களை எதிர்பார்த்துண்டிருப்பாங்க. நிஜம்மாத்தான்.''

அவளுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. அவனுடைய அழைப்பை மறுக்கவும் முடியவில்லை ; ஏற்கவும் முடியவில்லை.

''நான் எப்படி வரமுடியும்? சாயங்காலமாயிட்டதுன்னு நான் ஏன் வரல்லேன்னு எங்க வீட்டிலே தேடுவாங்களே !''

சந்திரன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல், ''என் தங்கையும் உங்களைப் பார்க்க ரொம்ப ஆசைப்படறா. எங்க அம்மாகூடத் தான்.''

''எங்க வீட்டிலே என்னைத் தேடுவாங்களே, சந்திரன் ?''

''சீக்கிரமாப் போயிடலாம். நாங்களே டாக்ஸியிலே கொண்டு வந்து விட்டுடறோம்...... நீங்க கட்டாயம் வரத்தான் வேணும்.''

'' வரல்லேன்னா ?'' — இப்போது அவளுடைய கேள்வியில் விளையாட்டு குடி புகுந்து விட்டது.

''வரணும்.... அவ்வளவுதான். சாயங்காலம் ஆபீஸ் விட்டதும் நேரே போயிடுவோம்'' என்று சொல்லிவிட்டு எழுந்தான் சந்திரன். அவளுடைய முழுச் சம்மதத்தையும் பெற்றுவிட்டது போன்ற ஒரு திருப்தியோடு அவன் எழுந்திருக்கிறான் என்பது அவளுக்கும் தெரிந்தது. இனி மறுப்பது எப்படி? என்ன சொல்லி மறுத்தாலும் அவன் கேட்க மாட்டான் என்பதை அவள் உணர்ந்தாள்.

''சரி, நேரமாயிட்டது. அஞ்சு மணிக்கு உங்க செக்ஷனுக்கு வர்றேன்'' என்று சொன்னவன் மறு நிமிஷம் அங்கே நிற்கவில்லை. தான் வேலை செய்யும் பகுதிக்குப் போய் விட்டான்.

ஃ ஃ ஃ

பிற்பகல் இரண்டு மணியிலிருந்து ஐந்து மணி வரை ஜகதாவுக்கு வேலையே ஓடவில்லை. சந்திரனைச் சுற்றியே திரும்பத் திரும்ப நினைவு ஓடிக் கொண்டிருந்தது. சென்ற ஆண்டும் அதற்கு முந்திய ஆண்டிலும் அவனும் அவளும் ஒரே பிரிவில், ஒரே இடத்

தில் இருந்து வேலை பார்த்திருக்கிறார்கள். கணேசனும் அப்போது அவர்களுடன்தான் வேலை செய்தான். சந்திரன் அபூர்வமாக என்றாவது ஒரு நாள் காரியாலய வேலை சம்பந்தமாக அவளை ஏதேனும் கேட்பான். அத்தோடு போய் விடுவான். அவளுடன் அடிக்கடியும் அதிகமாகவும் பேசுபவன் கணேசன்தான். இந்த விஷயம் பக்கத்தில் இருக்கும் அனைவருடைய மனத்திலும் விழுந்திருக்கும் என்று அவள் இன்று வரையி லும் எண்ணிக் கொண்டிருக்கிறாள். சிலர் ரகசியமாக அதை வைத்துப் பெரிய கதை கூடக் கட்டியிருக்கலாம் என்று அவள் பயந்ததும் உண்டு. இந்த நிலையில் சந்திரன் திடீரென்று இன்று வந்து நெடுங் காலம் அந்நியோன்னியமாகப் பழகியவளைப் போல், பிறந்த நாள் விருந்தளிக்கவும், அதுவும் போதாதென்று வீட்டுக்கு அழைக்கவும் எப்படித் துணிந்தான் ?

சந்திரனுடைய பைத்தியக்காரத்தனத் துக்குப் பின்னால் வெறும் பைத்தியக்காரத் தனம்தான் இருக்கிறதா ? இல்லையென்றால் மகத்தான விஷயம் ஏதாவது இருக்குமா ? அவளால் கண்டு கொள்ளவோ, கணிக்கவோ முடியவில்லை.

என்றோ ஒரு நாள் கணேசன் அவளிடம் சொன்ன வார்த்தைகளையும் அவள் நினைத் துப் பார்த்தாள். தான் பயந்தது போலவே— கதை கட்டி விடுவார்களே என்று அஞ்சியது போலவே — அவனும் சொன்னான் : ''ஜகதா! ஏன் ஒரு நாளாவது பகல் காட்சி சினிமா வுக்கு வரமாட்டேங்கிறே ? பயம் எதுக்கு? விஷயம் எல்லாருக்குமே தெரிஞ்சு போச்சு. இன்னும் மூடி மறைப்பானேன்?'' இதைக் கேட்டதும் ஜகதா நடுங்கிவிட்டாள். ''நிஜம்தானு ?'' என்று கேட்டாள். ''நிஜம் தான். அதுக்குச் சந்தோஷப்படுவாங்களா? பயப்படுவாங்களா? எனக்குப் பரம சந்தோ ஷம்!'' என்றான் அவன்.

'' ஏன் ?''

'' நம்முடைய காதல் ஊர்ஜிதமாகிறது சந்தோஷப்பட வேண்டிய விஷயமில்லையா?''

''உங்களுக்கு மனசிலே கொஞ்சம்கூட அச்சமில்லே. சந்தோஷப்பட வேண்டிய விஷயம்னு சொல்றீங்களே !''

''ஜகதா ! உனக்கு ஆண்களைப் பத்தின ஒரு பெரிய உண்மை தெரியாது. சொல்லட் டுமா ? ஒருத்தரோட ஒரு பெண்ணைச் சம்பந்தப்படுத்தி மத்தவங்க கதை கட்டினு, அவனுக்கு — அது பொய்யா இருந்தாலுமே— சந்தோஷமா இருக்கும்! அதிலும் அஞ்சாறு பெண்களைச் சம்பந்தப்படுத்திப் பேசினுலோ, அஞ்சாறு மடங்கு அவனுக்குச் சந்தோஷம்; பெருமை....!''

''இது ஒரு பெருமையா ?'' என்று கோபத்தோடு ஜகதா அன்று கேட்டதற்கு, ''அதுதான் சொன்னேனே, அது ஆண்க ளுடைய மன உணர்ச்சி. பெண்களாலே புரிஞ்சிக்க முடியாதுதான்'' என்று அவன் சொன்னான்.

அவன் பேச்சைக் கேட்கவே அப்போது அவளுக்கு அருவருப்பாக இருந்தது. சிறிது நேரத்தில் அது அவளுக்கு ஒருவித பயத்தை யும் உண்டுபண்ணிவிட்டது. படம் பார்க்க



பெண்ணை பெற்றவர்: இதென்ன அநியாயம்? போன மாதம் மூவாயிரம் தானே வரதட்சிணை கேட்டார்கள். இப்போது நாலாயிரம் என்கிறார்களே?

தரகர்: ஆமா. இந்த மாதம் பையனின் தாயாருக்குத் தொண்டை ஆபரேஷன் செய்ததில், அவளுக்குப் பேசுற சக்தியே போயிட்டதாம்.

வர முடியாது என்று ஒரேயடியாக மறுத்து விட்டாள். அப்புறமும் பல முறை அவன் அழைத்திருக்கிறான். இசையக்கூடிய துணிவு ஒரு நாளும் அவளுக்கு ஏற்படவே இல்லை.

இந்த நிகழ்ச்சிகளெல்லாம் ஜகதாவுக்கு நினைவு வந்தன. கடைசியில் கணேசன் திருச்சிக்கு மாற்றலாகிச் சென்று கடிதத் தின்மேல் கடிதமாக எழுதினான். பதில் எழுத அவளால் முடியவில்லை. எழுதப் பிடிக்கவும் இல்லை. வெகு நாள் யோசித்த பிறகுதான் தன் வெறுப்புக்கு என்ன கார ணம் என்பது ஓரளவேனும் அவளுக்குப் புலப்பட்டது. கணேசனுடன் வாழ்க்கை நடத்துவது என்றால் அது மூன்று மணி நேரச் சினிமாக் காட்சி போல, மூன்று நாள் ஹோட் டலில் தங்கியிருப்பது போல இருக்குமே ஒழிய அது வாழ்க்கையாக, குடும்பமாக இராது என்று தோன்றியது. அதனால் பதிலே போட வில்லை.

கணேசனின் கடிதங்கள் நின்று, அவனும் லீவு எடுத்துச் சென்னைக்கு ஓடிவரும் வழக் கத்தை நிறுத்தி வைத்திருந்த சமயத்தில் தான் சந்திரன் வந்து இன்று பிறந்த நாள் விருந்து அளித்திருக்கிறான். வீட்டுக்கும் அழைக்கிறான். கணேசனுடைய தொடர்பு பற்றி எதுவுமே இவனுக்குத் தெரியாதா?

மாலை ஐந்து மணியானதும் வேலைகள் முடிந்தன. சந்திரன் தயாராக வந்து நின் றான். ஜகதாவும் வெளியே வந்தாள்.

பார்த்த மாத்திரத்தில், ''போகலாமா?'' என்று கேட்டான்.

ஒரு மறுப்பும் சொல்லாமல் அவனைப் பின் தொடர்ந்தாள் ஜகதா. அவள் மறுக்காமல்

அவனோடு பஸ் ஏறியதற்குக் காரணம், அவனுடைய தந்தையும், தாயும் தன்னைப் பார்க்க விரும்புகிறார்கள் என்று அவன் சொன்னானே, அதுதான். அந்த வார்த்தைகளில் எப்படியோ ஓர் அரிய கவர்ச்சியும், மயக்கமும் உண்டாகி விட்டன.

பஸ்ஸை விட்டு இறங்கி வீட்டுக்குச் சிறிது தூரம் நடந்து செல்ல வேண்டி இருந்தது. போகும் வழியில் அவன் வேண்டுமென்றே அவனை ஒரு கேள்வி கேட்டாள்: ''திருச்சிக்கு மாத்திப் போனாரே, கணேசன், அவர் உங்களுக்கு லெட்டர் போட்டாரோ?''

''இல்லையே!'' என்ற அவன் தன் போக்கில், ''ராதா சந்தோஷப்படுவாள்'' என்றான்.

''ராதாவா?''

''என் தங்கை.''

''ஓ!...கணேசன் எனக்கு ஒரு லெட்டர் எழுதியிருந்தார். அதனாலே உங்களுக்கும் எழுதியிருப்பாரோன்னு பார்த்தேன்.''

''இல்லை'' — இதைச் சொல்லிவிட்டு அவன் பேசாமல் நடந்தான்.

ஜகதாவுக்கு ஒரு புதிராக இருந்தது. தன்னிடம் ஏன் அவனுக்குச் சந்தேகமே ஏற்பட மாட்டேன் என்கிறது என்று!

எதைச் சொன்னாலும், தன்னிடம் ஏன் இப்படி அன்பைச் சொரிகிறான்?

இருவரும் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்ததும் ராதா வாசலில் தயாராக வந்து நின்று வரவேற்றாள். அடுத்த நிமிஷம் சந்திரனின் தாயும் வந்தாள்.

''அம்மா! நான் சொன்னேனே ஜகதா என்று அவள்தான் இவள். இவளுக்கு இன்னிக்குப் பிறந்த நாள்'' என்று சொல்லிச் சந்திரன் அறிமுகப்படுத்தினான்.

''வாம்மா! தீர்க்காயுசா இரு!'' என்று சொல்லி வாழ்த்தி அவளை உள்ளே அழைத்துப் போனாள் தாயார்.

உள்ளே போய் உட்கார்ந்ததும் அவளுடைய வீட்டைப் பற்றியும், க்ஷேமலாபங்களைப் பற்றியும் அந்த அம்மாள் விசாரித்தாள். அவளுடைய பேச்சில் கனிந்த அன்பையும், விகசித்த தாய்மையையும் பார்த்து ஜகதா ஆச்சரியப்பட்டாள்.

சிற்றுண்டி உபசாரம் முடிந்தது. அவளை அப்படியே அனுப்பி விடாமல், வீட்டை உள்ளும் புறமும் சுற்றிக் காட்டினான் சந்திரன்.

''சீக்கிரத்தில் வெள்ளையடிக்கப் போகிறோம்!'' என்றான் சந்திரன்.

வெளிப்புறத்தில் ஒரு மூலையில் சுண்ணாம்பும் காரையும் பெயர்ந்து விழுந்திருந்தது. அந்தக் குறை ஜகதாவுக்குச் செய்த குறையாக அவனுக்கு அப்பொழுது தோன்றி விட்டது. அதைச் சீக்கிரம் பழுதுபார்த்து விடுவதாக அவன் உறுதி கூறினான். அப்புறம் பூஞ்செடிகள்... நன்கு வளர்ந்து பூத்துள்ள செடிகளைப் பெருமையோடு காட்டினான். தானும் தன் தங்கை ராதாவும் கண்ணும் கருத்துமாகச் செடிகளை வளர்த்திருப்பதாகச் சொல்லிக் கொண்டான்.

அங்கே ஒரு பெரிய ரோஜாச் செடி. எப்பொழுதோ பூத்த மலர் ஒன்று வாடாமலும் வதங்காமலும், ஓர் இதழ்கூட உதிராமலும் கொம்பில் இலேசாக ஆடிக் கொண்டிருந்தது. அதைப் பறித்துக் கையில் வைத்துக் கொண்டான் சந்திரன்.

''உங்களுக்கு வேணுமா?'' என்று ஜகதாவைப் பார்த்து ராதா கேட்டாள்.

''வேண்டாம்னு சொன்னால் கொடுக்காமல் இருந்துட மாட்டீங்களே?'' என்று சந்திரனைப் பார்த்துக் கேட்டாள் ஜகதா.

அவன் சிரித்தான். ராதாவுக்கு எதுவும் புரியவில்லை.

ஜகதா தானே கையை நீட்டிப் பூவை வாங்கித் தன் கூந்தலில் செருகிக் கொண்டாள்.

அந்தி மயங்கி விட்டது. மூவரும் வீட்டுக்குள்ளே போனார்கள். எல்லோரும் ஒரு நாள் தன் வீட்டுக்கு வர வேண்டும் என்று அழைப்பு விடுத்தாள் ஜகதா. சந்திரனும் ராதாவும் அவளோடு வெளியே வந்தார்கள். ஒரு டாக்ஸி எதிரே வரவே, அதை நிறுத்தி மூவரும் ஏறிக் கொண்டார்கள்.

ஜகதாவின் வீட்டின் முன் டாக்ஸி வந்து நின்றது. மூவரும் இறங்கினார்கள். அவள் தைரியமாகவே தன் வீட்டினுள் அவர்களை அழைத்துச் சென்றாள். தன் பெற்றோர்களுக்கும் அவர்களை அறிமுகப்படுத்தினாள். அழைப்பின் பேரில் அவர்கள் வீட்டுக்குப் போய் வந்ததையும் ஒளிக்காமல் சொன்னாள். பெற்றோர்கள் என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றி அவள் கவலைப்படவே இல்லை. எல்லோரும் தன் வீட்டுக்கு ஒரு நாள் வர வேண்டும் என்று அப்போது ராதா சொன்னாள். பிறகு அவனும் சந்திரனும் விடைபெற்றுப் போனார்கள்.

ஜகதா படுத்துத் தூங்குவதற்கு முன்பு தன்னுடைய தலையில் செருகியிருந்த அந்த ரோஜாப் பூவைக் கையில் எடுத்தாள். பய பத்திரமாகத் தலையில் வைத்துக் கொண்டு வந்ததால் அதன் முழு உருவமும் சிதையாமல் அப்படியே இருந்தது. மிகவும் ஆழ்ந்த பார்வையுடன் அதைப் பார்த்துவிட்டு ஒரு தடவை முகர்ந்தாள். பிறகு அதை மேஜை மேல் வைத்து விட்டுப் பக்கத்திலிருந்த அலமாரியைத் திறந்தாள். அதிலிருந்து ஒரு சிறு அட்டைப் பெட்டியை வெளியே எடுத்து அதையும் திறந்தாள். உள்ளே வாடிக் கருகிய ஒரு ரோஜா மலர் இருந்தது. அதைத் தனியே எடுத்துத் தென்பக்கத்து ஜன்னல் வழியாக — திருச்சியும் அந்தத் திசையில்தான் இருந்தது — வெளியே எறிந்தாள். மேஜை மீது இருக்கும் புதிய ரோஜாவை எடுத்து அட்டைப் பெட்டியில் வைத்து மூடினாள். பிறகு அதை அலமாரிக்குள் வைத்துப் பூட்டினாள்.

அலமாரிக் கதவுகள் வெறும் மரப் பலகைகளாக, அதுவும் ஆங்காங்கே வர்ணம் உதிர்ந்து போன நிலையில் இருந்தும், பெரிய ஓவிய நிபுணன் ஒருவன் தீட்டிய அபூர்வமான ஒரு சித்திரத்தைப் பார்ப்பது போல் வைத்த கண் வாங்காமல் அவற்றைப் பார்த்துக் கொண்டே நின்றாள் ஜகதா. பிறகுதான் தூங்கப் போனாள்.


சிந்தனையா
எந்த பானம்
வாங்குவது என்று!
இதோ 5 நல்ல காரணங்கள் நீங்கள் ஏன்
இணையற்ற டானிக் உணவு
கோகோ மால்டின்
வாங்க வேண்டும் என்பதற்கு
COCOA MALTINE
நல்லதொரு உணவு
சிறந்த பார்லி, மால்ட் எடுகெட்டிய பால், குளுகோஸ், கோகோ கலந்த கோகோ மால்டின், புரோதகள், கார்போஹைட்ரேட்ஸ், மினரல் சால்ட்ஸ் உள்ள சிறந்த உணவு.
நல்லதொரு சுவை
சத்துள்ள பொருள்கள் அதிசப்படியான கோகோவுடன் நன்கு கலக்கப்பட்டு தனிப்பட்ட சுவையுடையது கோகோ மால்டின்.
நல்லதொரு மணம்
சுத்தமான வெண்ணெ, தேன், உயர்ந்த கோகோ இவை கலந்த கோகோ மால்டின் ஒரு ஊக்கமளிக்கும் பானம்
சிக்கனமானது
ஒரு கோப்பை பாலில் ஒரு தேக்கரண்டி (¼ கரண்டி குழந்தைகளுக்கு) கலந்த கோகோ மால்டின் நல்லதொரு உணவு சத்துள்ள பானம்.
குடும்பத்திற்கேற்ற
சத்துள்ள கோகோ மால்டின் குடும்பத்தில் எல்லோருக்கும்
பரிபூரண பானம்
எந்த நேரத்திலும் ஏற்ற பரிபூரண பானம்
சூடாகவோ அல்லது குளிர் பானமாகவோ அருந்தி வலிவைப் பெறுங்கள்
கோகோ மால்டின் லாபரேட்டரீஸ் உரிமையாளர்: டிரேட் லிங்க்ஸ் பிரைவேட் லிமிடெட், 46, பூசா ரோடு, புது டெல்லி,
பிராந்திய விற்பனை ஆபீஸ்: 43, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-போன்: 85982



# அறியாத வளர்ச்சி

அவள் வளருகிறாள். அவளுடன் அவளது அருமை நாயும் வளருகிறது. இந்த வளர்ச்சியை அவள் அறிவாள். ஆனால் அவள் திருமணத் திற்கு அவள் தகப்பனார் போட்டிருக்கும் ரெகரிங் டெபாஸிட் வளருவது அவள் அறியாள்.

**சென்ட்ரலில் உங்களுடைய ரெகரிங் டெபாஸிட்டை ஆரம்பியுங்கள்**

தி

# சென்ட்ரல் பாங்க்

**ஆப் இந்தியா லிட்.,**

தனியார் துறையில் உள்ள மிகப்பெரிய பாங்க்
பதிவு காரியாலயம்: மகாத்மா காந்தி ரோடு,
போர்ட், பம்பாய்-1

திரு. பி.வி. பிள்ளை,
பிரதம ஏஜெண்ட்
சென்னை

Mr. V. C. படேல்
சேர்மன்
பம்பாய்

3ISTA'SCB.3.TA

# உயர்த்திய மன்னிப்பு



காந்தியடிகள் ஒரு கொள்கையையோ கோட்பாட்டையோ கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டால், அதைத் தம் வாழ்வோடு இணைத்துவிடுவார். அதை வாழ்வின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாக ஆக்கி ஓர் ஆதர்சத்தை நிலைநாட்டுவார். சமூகத்தில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் யாருமில்லை; சிறியோர், பெரியோர் எவருமில்லை என்பது அவர் கடைபிடித்து வந்த கொள்கைகளில் ஒன்று.

பம்பாயில் நடந்த நிகழ்ச்சி ஒன்று இதை உறுதிப் படுத்துகிறது.

காந்தியடிகள் தம் நண்பர் ஒருவரின் பங்களாவில் தங்கியிருந்தார். அவரோடு சுவாமி ஆனந்தர் என்னும் காந்தீயத் தொண்டரும் இருந்தார். அவர் அகமதாபாத்திலிருந்து வெளி வந்துகொண்டிருந்த 'யங் இந்தியா', 'நவ ஜீவன்' என்னும் இரு வார இதழ்களையும் வெளியிடும் பணியைக் கவனித்து வந்தார். காந்திஜியிடம் அச்சுப் படிகளைப் படித்துக் காட்டித் திருத்தங்கள் செய்துகொள்ளும் தொண்டையும் அவர் ஏற்றிருந்தார்.

நண்பரின் சமையற்காரர் காந்தியடிகளிடம் மிகவும் மரியாதையோடு நடந்து கொண்டார். ஆனால், அவரது தோழர்களிடம் அவ்வளவாக அக்கறை காட்டுவதில்லை. தம் எசமானர் வீட்டில் தங்கும் பெரிய விருந்தினர்களைப் போற்றவும் சிறிய விருந்தினர்களை அலட்சியப்படுத்தவும் அவர் நன்கு கற்றிருந்தார்.

ஒரு நாள் உணவு பரிமாறும்போது சுவாமி ஆனந்தரை அவர் அலட்சியப்படுத்திவிட்டார். ஸ்வாமி ஆனந்தரோ மதிப்பு மரியாதை மிக்கவர்; பிறரிடமும் எதிர்பார்ப்பவர். கோபத்திலோ ஊசி மிளகாயின் காரத்தை விஞ்சியிருந்தார். அவமானம் தாளாமல் வந்த கோபத்தில் சட்டென்று இலையிலிருந்து எழுந்து சமையற்காரரின் கன்னத்தில் பளீரென்று ஓர் அறை வைத்தார். சமையற்காரருக்குப் பொறி கலங்கியது. கண்கள் இருண்டு வந்தன. நின்ற இடத்தில் அப்படியே தம்மென்று உட்கார்ந்து விட்டார்.

கலங்கிய மூளை தெளிந்ததும் சமையற்காரர் காந்தியடிகளிடம் சென்று, ''பாபுஜி! என்னை ஸ்வாமிஜி அடித்து விட்டார்'' என்று புகார் செய்தார்.



சமையற்காரரின் கன்னம் கன்றிப் போயிருப்பதையும், அதில் விரல்களின் தடம் பதிந்திருந்ததையும் கண்ட காந்தியடிகளுக்கு ஏற்பட்ட வேதனையைச் சொல்லி முடியாது. 'இது என்ன ஸ்வாமிஜி இப்படிச் செய்துவிட்டார்? சமையற்காரன்தானே? சின்ன வேலைக்காரன்தானே? அவனுக்கு ஏது மதிப்பும், மரியாதையும் என்று எண்ணிவிட்டாரா?'

இப்படிச் சிந்தனை ஓடவே, காந்தியடிகள் உடனே ஸ்வாமி ஆனந்தரை அழைத்து வரப் பணித்தார். நிலைமையை உணர்ந்த ஸ்வாமிஜி பயந்தவாறே பதற்றத்துடன் காந்தியடிகளின் எதிரே வந்து நின்றார்.

''ஸ்வாமி! நீர் சமையற்காரரை அடித்தீரா?''

''அடித்தேன். ஆனால் வந்து....''

''ஏன் அடித்தீர்கள்?''

''என்னை அவமதித்துவிட்டான் சமையற்காரன். நான் எதையும் பொறுத்துக்கொள்ளத் தயார். ஆனால் பிறர் அவமதிப்பைப் பொறுக்கச் சகியேன்!''

''அது சரி! இதே காரியத்தைக் கண்யம் மிகுந்த வேறு எவராவது செய்திருந்தால் அவரை இப்படி அடித்திருப்பீரா?'' காந்தியடிகளின் கேள்வியில் குத்தல் தெறித்தது.

''........ அடித்திருப்பேன்!'' தயங்கி வந்தது ஸ்வாமியின் குரல். உள்ளுக்குள் எழுந்த சங்கோசமும் சந்தேகமுமே அவரது அந்தத் தயக்கத்துக்குக் காரணம்.

''அடித்திருக்க மாட்டீர்கள். நான் சொல்கிறேன்!'' சொல்லுக்குச் சொல் அழுத்தம் கொடுத்துக் கூறினார் காந்தியடிகள். ''சமையற்காரன் என்பதனால் நீங்கள் துணிந்து அடித்து விட்டீர்கள். ஏனென்றால் அவன் சாதாரணப் பணியாள் என்பது உம் அபிப்பிராயம்.''

ஸ்வாமி ஆனந்தர் பேசவில்லை; தலைகுனிந்த வண்ணம் தரையையே பார்த்தவாறு இருந்தார்.

''இப்பொழுதே போய் உம் குற்றத்துக்குச் சமையற்காரரிடம் மன்னிப்புக் கேளும்!'' என்றார் காந்தியடிகள் தொடர்ந்து.

ஸ்வாமிக்குத் தமது செவிகளின்மீதே நம்பிக்கை ஏற்படவில்லை. 'மூனு காசு பெறாத சமையற்காரனிடம் போய் நாம் மன்னிப்புக் கோருவதா? காந்திஜி என்ன இப்படிப் பேசுகிறார்?'

ஸ்வாமி இக்கட்டளையை எதிர்க்கவும் இல்லை; ஏற்கும் எண்ணத்தையும் காட்டவில்லை.

ஸ்வாமி பேசாமல் மௌனம் சாதிப்பதைக் கண்ட காந்தியடிகளுக்கு வருத்தம் மிகுந்தது. ''உமது மரியாதை உமக்குப் பெரிதாகப் படுகிறதோ? எளிய சமையற்காரருக்கு ஏது மதிப்பு என்று எண்ணத் தோன்றுகிறதோ? அவனிடம் மன்னிப்புக் கேட்டு நீர் இழைத்த அநீதிக்குப் பிராயச்சித்தம் தேடிக் கொள்ளவில்லை என்றால், நீர் என்னோடு இருக்க முடியாது!'' என்றார் கண்டிப்பான குரலில்.

ஸ்வாமி ஒரு கணம் பிரமித்து நின்றார். ஒருபுறம் அவரது மரியாதைக்குப் பங்கம் விளையும்; மற்றொரு புறம் காந்தியடிகளை விட்டு விலக வேண்டும்.

ஸ்வாமி ஆனந்தர் லாப நஷ்டக் கணக்கைச் சரியாகவே போட்டார். சமையற்காரரிடம் காந்திஜியின் மனம் கோணாமல் மன்னிப்புக் கேட்டு விடுவது என்று முடிவு செய்தார்.

அவர் சமையற்காரரிடம் சென்று, அவரை அன்புறத் தழுவிக் கொண்டு, ''நம்பி! என்னை மன்னித்து விடு. கோபத்தில் என்னை மறந்து உன்னை ஓங்கி அறைந்து விட்டேன்!'' என்றார்.

சமையற்காரர் பரிதவித்துப் போய்விட்டார். ''வேண்டாம், வேண்டாம் ஸ்வாமிஜி, மன்னிப்புக் கேட்டு என்னைப் பாவப் படுகுழியில் தள்ளாதீர்கள். நான் தங்களை அவமானப் படுத்திவிட்டேன். அதற்காக மிகவும் வருந்துகிறேன். அதனால் நீங்கள்தான் என்னை மன்னித்தருள வேண்டும்!'' என்றதோடு ஸ்வாமிஜியின் கால்களில் விழுந்து பணிந்தார்.

இரு மனங்களும் தெளிந்து விட்டன. ஸ்வாமி ஆனந்தரோ மன்னிப்புக் கேட்டதால் தாழவில்லை; மாறாக மிக உயர்ந்து விட்டார்! - ரா. வீ.

ஆதாரம்: 'ஸோமேஷ் புரோஹித்'




**கொ**த்தமங்கலம் சுப்புவின் பொன்னி வனத்துப் பூங்குயில் ஓர் அற்புதப் படைப்பு. பிரதாபசிம்மரின் பரந்த மனப்பான்மையையும், குயிலியின் தியாக மனப்பான்மையையும் ஆசிரியர் கதை நெடுக உணர்த்தியுள்ளார். கதையின் முடிவு உள்ளத்தைத் தொட்டது.

சென்னை-11
7–11–68 கிருஷ்ணம்பாள்

"**நெ**ஞ்சினிலே ஒரு நினைவு முகம், அது குயிலியின் இனிய முகம், ஆசை முகம்."

பொன்னிவனத்துப் பூங்குயிலியின் சிறப்பைச் சொல்லி மாளாது.

கிழ்ஆம்பூர்
9–11–68 கே. ஆர். வள்ளி

**ஓ**ர் ஓவியத்தில் எவ்வளவுதான் கம்பீரமாகவும், அழகாகவும், வசீகரமாகவும், முகம் வரைந்தாலும் கண்தான் அவற்றையெல்லாம் தெளிவுபடுத்தும். பொன்னிவனத்துப் பூங்குயிலின் கண் குயிலியே. அந்தக் கண்ணை தீட்சண்யமாக வரைந்து காட்டியிருக்கிறார் கொத்தமங்கலம் சுப்பு.

புவனகிரி
9–11–68 சி. இராமச்சந்திரன்

## குயிலி

**பாலகர் பசிதீர்த்த நற்பாவையம்மா**
**பண்பிற்குப் பிறப்பிடமாய்த் திகழ்ந்தாயம்மா**
**கண்ணென்செங் கலைகளுக்குறைவிடமாய்—நீ**
**காட்சிதந்து மறைந்தனை முத்தம்மா!**

பம்பாய் — 19
11–11–68 வன்னிபூரான்

## மக்களே திருந்தவேண்டும்

**பா**பநாசம், வள்ளுவர் செந்தமிழ்க் கல்லூரியின் இலக்கிய மன்றத்தின் சார்பில் கல்கியில் வந்த சினிமாச் சிந்தனையின் அடிப்படையில் ஒரு விவாத அரங்கு ஏற்பாடு செய்தோம். அக்டோபர் 18, 25, 26 இம் மூன்று தேதிகளிலும் விவாதம் தொடர்ந்து நடைபெற்றது. விவாதத்தில் பல மாணவ, மாணவியர் பங்கு கொண்டனர். இறுதியில் 'திரைப்படத் தயாரிப்பாளர் திருந்த வேண்டுமா? மக்கள் திருந்த வேண்டுமா?' என்ற அடிப்படையில் வாக்கெடுப்பு நடத்தப் பட்டது. மக்களே திருந்த வேண்டும் என்ற தீர்மானம் பத்து வோட்டுக்கள் அதிகம் பெற்று வெற்றிபெற்றது.

பாபநாசம் இல.இராமசுவாமி (செயலாளர்)
26–10–68 கப.அருணாசலம் (தலைவர்)

## காலம் மாறினாலும்...

**பி**ரதிமாதமும் தபால், மற்றும் ஸ்டேஷனரி செலவுகளுக்கெனப் பஞ்சாயத்து யூனியனில் ஒவ்வொரு பள்ளிக்கும் தலைமையாசிரியருக்கு ரூ. 1.25 விதமும், உதவியாசிரியர்களுக்கு ரூ. 0.44 விதமும் கணக்கிடப்பட்டுக் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த விதாச்சாரம் 1948ஆம் ஆண்டு மாவட்டக் கழக ஆட்சியார் காலத்தில் நிர்ணயிக்கப்பட்டதாகும்.

1948ம் ஆண்டுக்குப் பிறகு எத்தனையோ தடவைகள் தபால் கட்டணங்கள் உயர்த்தப் பட்டும், ஸ்டேஷனரி சாமான்களும் ஒன்றுக்குப் பத்தாக விலை அதிகரித்தும் இந்தச் செலவை உயர்த்திக் கொடுக்காமல் இருப்பது பள்ளித் தலைமையாசிரியர் பதவிக்கு வருபவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனைபோல் உள்ளது. 1948ஆம் ஆண்டுக்குப் பிறகு தலைமையாசிரியர் பதவிக்கு வந்துள்ளவர்களின் பொறுப்புக்களும், பராமரிக்க வேண்டிய பட்டியல்களும், மேலதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டிய படிவங்கள், அறிக்கைகளும் எண்ணிக்கையில் அடங்காதவாறு அதிகரித்து உள்ளன.

மேலும் மாவட்டக் கழக ஆட்சியார் காலத்தில் 1–1–47 முதல், "தலைமையாசிரியர் உள்ளிட்டு நான்கு ஆசிரியர்களைக் கொண்ட பள்ளியின் தலைமையாசிரியர்களுக்கு ரூ. 2ம் மூந்நூறு மாணவர்களுக்கு மேல் உள்ள தலைமை ஆசிரியர்களுக்கு ரூ. 5ம் அவர்கள் வகிக்கும் தலைமைப்பொறுப்புக்கென அலுவல் படியாக வழங்கப்பட்டு வந்தது.

இந்தப் படி 1961ம் ஆண்டுக்குப் பிறகு பதவி ஏற்றுள்ள தலைமையாசிரியர்களுக்குக் கிடையாது என்றும், 1961ம் ஆண்டுக்குமுன் இதனைப் பெற்று வந்த தலைமையாசிரியர்கள் தொடர்ந்து இதனைப் பெறலாம் என்றும் விதி கூறுகிறது.

1947ல் தற்பொழுதுள்ளவாறு தலைமை ஆசிரியர்களுக்குப் பொறுப்புக்கள் அதிகமில்லை என்பதைக் கல்வித் துறையினரே ஒப்புக் கொள்வர். மதிய உணவுத் திட்டம், பள்ளிச் சீரமைப்புத் திட்டம், நன்கொடை வசூல், சமுதாய அபிவிருத்தித் திட்டங்களில் பள்ளியை ஈடுபடுத்தி உழைப்பது, சிறு சேமிப்பு, குடும்பக் கட்டுப்பாடு திட்டம் போன்ற பல எண்ணற்ற அலுவல்களில் நாள் முழுதும் தம்மை அர்ப்பணித்து ஓய்வு என்பதே இல்லாது நாட்டுக்கு உழைக்கும் தற்பொழுதுள்ள பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு இப்படியை அதிகரித்துக் கொடுக்காது 'இல்லை' யென மறுப்பது கொடுமையல்லவா?

தஞ்சை, ஓர் ஆரம்ப நடுத்தரப் பள்ளித்
12–7–68 தலைமை ஆசிரியன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon